காவேரி

சர்வதாரி-ஆவணி

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

...—T. T. KRISHNAMACHARI & Co.

G. T. MADRAS

மாதர்தம் மகத்துவத்தை
எளிதாக எண்ணாதே!
கவர்ச்சி மிக்க இக்
காதல் சித்திரம்
உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைக் கொள்ள
வெகு சீக்கிரத்தில்
வெள்ளித் திரைக்கு
வருகிறது
மோகினி
ஜூபிடர்
தயாரிப்பு
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
மதராஸ் &
திருப்பூர்...

A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும் சுகாதார முறைப்படியும் நீண்ட நாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவை யென்பதற்கு அத்தாக்ஷி மைக்ராஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று சர்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர்பாகு, பால்கோவா, பிஸ்கட், கேக், ஒப்பிட்டு, சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும் பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல் தரமான ஜவ்வரிசி, ஈரோடு சேலம் மஞ்சள் ரகங்கள், No. 1 மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும் பீடிக்கும் வேண்டிய புகையிலை ரகங்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடை போடக்கூடிய பைபில்ட் வேயிங் மிஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும். ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புஸ்தகம் வேண்டுவோர் ரூ. 1—0—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கும் சாம்பிள்களுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமண்யம்

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள்,
புகையிலை ஹோல் ஸேல் லைசென்ஸ்தார்கள்,
ஈரோடு (S.I.Ry.) தந்தி: "INSAF"

198046

THE GENERAL ASSURANCE SOCIETY LIMITED
GENERAL
ESTD 1907

தி ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

சென்னை டிவிஷனல் ஆபீஸ்: **304**, தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசிய ஸ்தாபனம்

அமுலிலிருக்கும் பாலிஸிகள் சுமார்		....	ரூ.	20,00,00,000
ஆயுள் நிதி	,,	....	ரூ.	2,00,00,000
மொத்த ஆஸ்திகள்	,,	....	ரூ.	2,20,00,000
உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை	,,	....	ரூ.	1,00,00,000

சேர்மென்: ஸ்ரீ பி. என். ஜலான் (ஹிராஜ்மல் நாகர்மல்) கல்கத்தா.

தென்னிந்தியாவில் கிளை ஆபீஸ்கள்:

மதராஸ், மதுரை, திருச்சினப்பள்ளி, கோயம்புத்தூர், பெங்களூர், பெல்லாரி, பெஜவாடா. & கொழும்பு (இலங்கை) மற்றும் எல்லா முக்கிய பட்டணங்களிலும்
— இன்ஸ்பெக்ஷன் ஆபீஸ்கள் இருக்கின்றன. —



பார்லிக்கஞ்சியை இம்முறையில் தயாரித்தால் நேரமும் சிரமமும் குறையும்

ஐந்தே நிமிஷத்தில் ருசியும் இனிமையும் மிகுந்த பார்லிக்கஞ்சி சாப்பிடலாம். இரண்டு டீஸ்பூன் நிறைய பியூரிடி பார்லியை எடுத்து சிறிது ஜலத்தில் பசையாகக்கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலம் விட்டு ஐந்தே நிமிஷங்களுக்கு கொதிக்கவைக்கவும். இது உபயோகிப்பதற்கு வெகு சிக்கனமானது. ஏனெனில் அரிசிப்பார்லியைப்போல் எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.

பியூரிடி பார்லி சுறுசுறுப்பூட்டும் சீதள பிரதேசங்களில் விளையும் புஷ்டி மிகுந்த தானியங்களை பொறுக்கி தயாரிக்கப்படுகிறது. நுண்ணிய பட்டினால் சலிக்கப்பட்டு சுகாதார முறைப்படி தகர டப்பாக்களில் அடைத்து முத்திரையிடப்பட்டிருக்கிறது.

பியூரிடி

இந்தியன் பார்லி

ATLANTIS (East) Ltd., 20/1, Chetla Road, Calcutta.

Agents for South India: PARRY & Co., Ltd. Post Box 12, Madras.

உயிர்ப்பிச்சையளிக்கும் லிவர்க்யூர்!

ஜம்மியின் லிவர் க்யூர்

38 வருஷங்களாக ஆயிரக்கணக்கான குழந்தைகளை அகாலமரணத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறது. குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டி கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

●

LIVER CURE Branch, Office
Parekh Mansion, Sandhurst Road (West).
BOMBAY 4.

Moghul
அவளும் ஓர் சாதாரண மங்கைதான்-
ஆனாலும் அவளுடைய சிறந்த பழக்க
வழக்கங்களும், அழகு சாதனங்களை
சாதுரியத்துடன் உபயோகப்படுத்தும்
முறைகளும் சக்கரவர்த்தி ஜஹாங்கீர்
அவளை "நூர்ஜஹான்" (உலகத்தின்
ஜோதி) என்று பெயரிடும்படி அவ்வளவு
எழிலையும் பகட்டையும் அளித்தன.
தற்கால நங்கைகளோ
அத்தகைய சரும
ஆரோக்கியத்தையும்
எழிலையும் பெற கேரளா
ரோஸ் ஸோப்பையே
விரும்பிக் கேட்கிறார்கள்.
A
MADRAS
GOVERNMENT
PRODUCT
KERALA
Rose Soap
ROSE
Mfrs : KERALA SOAP INSTITUTE, CALICUT.
Department of Industries & Commerce, MADRAS.
FAS-366

1949-ஆம் ஆண்டு

உங்களுக்கு

வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம் எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

★

Shree

Swami Yogiraj Jyotish Asram,

C. K. PHAGWARA. (Kapurthala State)

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்.) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸமோலா ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25.

Telephone : South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

"விரைவில் வெளிவருகிறது"
பி.யு.சின்னப்பா
கண்ணம்பா
யோகமங்களம்
முதலியோர் நடித்த
ராயல்
சுதர்சன்
டைரக்ஷன்: சுந்தர் ராவ் நட்கர்னி
வசனம்: இளங்கோவன்
பாடல்கள்: பாபநாசம் சிவன்
RAYAL TALKIE DISTRIBUTORS
ராயல் டாக்கி டிஸ்டிரிப்யூட்டர்ஸ், மதுரை, பெஜவாடா & பெங்களூர்.

For

FAST & RELIABLE PRINT

COATES'

INKS & SUNDRIES

at competitive rates.

•

CONTACT:

GOPAL AGENCIES

Printers' Supplies & General

11 - Pothamarai North

KUMBAKONAM

பொருளடக்கம்

சர்வதாரி மலர் 8 | ஆவணி இதழ் 1

இந்திய சுதந்திர ஆண்டு மலர் 8

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 10
ராமய்யா

தேசப்பணி—வரிகொடுத்தல் 15
எஸ். என். ராமசாமி

சுந்தரகாண்ட விமர்சனம் 17

சங்கப்பலகை 18

பிழைப்புக்குப்போன இடத்தில் 22
கஜமுகன்

அருணகிரி 25
ஸ்ரீ. வே.

வேலன் 27
கி. ஸந்தானம்

மரியாதை 29
டி. சேஷாத்திரி

உயிர்க் கூடு 33
வை. சுப்ரமண்யம்

காரைக்குடி ஆராய்ச்சி நிலையம் 39
நா. கி. நாகராஜன்

எனது லண்டன் பிரயாணம் 43
M. S. V. தாதம்

அந்தகனூர் 53
ரா. ஸ்ரீ. தேசிகன்

நடன கலா 57
கே. சுந்தரம்மாள்

வெற்றி 74
எஸ். கிருஷ்ணன்

வாயச விடு தூது 78
கிட்டு

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வதாரி மலர் 8	“சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார்	ஆவணி இதழ் 1

இந்திய சுதந்திர ஆண்டு மலர்

ஆண்டு மலர் துரிதமாகத் தயாராகி வருகிறது. ஆவணி 15உ வெளிவரும். கட்டுரைகளும் படங்களும் வந்து குவிந்து மலரில் இடம் பெற்று வருகின்றன.. காவேரியின் ஆண்டு நிறைவும் சுதந்திர ஆண்டு நிறைவும் ஒன்றாக அமைந்திருப்பதை முன்னிட்டு இவ்வாண்டு இதழ் சுதந்திர மலராக விகசிக்கிறது.

மலரின் மணத்தைப் பருக வாசகர்கள் மிகவும் ஆர்வமுற்றிருக்கிறார்கள் என்பது நமது காரியாலயத்தில் வந்து குவியும் ஆர்டர்களிலிருந்து நன்கு தெரிகிறது. அதன் அம்சங்களைப் பற்றி அறிய ஆவலுற்ற பல வாசகர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். மலரின் முழு அம்சங்களையும் இன்னும் வெளியிட முடியாவிடினும், முக்கியமானவற்றைக் குறிக்க இயலும்.

குடும்பப் பெண்களும் சிறுவர்களும் எப்படி சுதந்திர விழாவைக் கொண்டாடுகிறார்கள் என்பதைக் கண்குளிரக் காட்டுகிறது நமது அட்டைப்படம். நமது ஒப்பற்ற தலைவர்களின் இல்லறவாழ்கை வரலாறுகள் பல படங்களுடன் காட்சியளிக்கின்றன. இத்தகைய கட்டுரைகளை வாசகர்கள் மிகவும் ரசிப்பார்கள் என்பது திண்ணம்.

மதிப்பிற்குரிய ராஜாஜி வசித்துவரும் கவர்னர்-ஜனரல் மாளிகை பலகோடி ரூபாய்கள் செலவில் கட்டப்பட்டுள்ளது என்று மட்டுமே நமக்குத் தெரியும். அதனுள் புகுந்து கண்டு களிக்க உங்களுக்கு ஆவலில்லையா? இதோ மலரில் காணப்படும் படங்கள் உங்களை அங்கே அழைத்துச்சென்று கண்டு களிக்கச் செய்கின்றன.

டில்லி அகில இந்திய ரேடியோ நிலையம் எப்படி வேலைசெய்கிறது என்று காண உங்களுக்கு அவகாசமளிக்கிறது படங்கள் நிறைந்த மற்றொரு கட்டுரை.

இந்து நாகரிகம் எப்படி பண்டைக் காலத்தில் தென் அமெரிக்காவில் புகுந்து அங்குள்ள மக்களை நம் மதக் கோட்பாட்டிற்கு ஏற்றதாயும், நம் பண்பிற்கு ஒத்ததாயும் செய்திருக்கிறது என்பதை ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை 26 படங்களுடன் விளக்குகிறது. பல ஓவியர் தீட்டிய சில வர்ணப் படங்களும் மலரை பிரகாசிக்கச் செய்கின்றன. நமது சோழ மன்னர்கள் காலத்தில் வர்ண ஓவியம் அடைந்திருந்த உன்னதநிலை நம்முன் இதுவரை திரையிடப்பட்டிருந்தது. ஆர்க்கியலாஜிகல் டிபார்ட்மெண்டார் தஞ்சைப் பெரிய கோவிலில் இப்பொழுது ஓர் சுண்ணாம்புப் பூச்சுக்கடியில் சோழர் காலத்து ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் கண்டு அவை அழியாமல் இருக்க அரும்பாடுபட்டு வருகிறார்கள். அவை மிகவும் ஜீர்ணமாகி, பல இடங்களில் உருக்குலைந்து காணப்படுகின்றன. தமிழர் உள்ளம் இவற்றைக் கண்ணுற மிக்க ஆவல்கொள்ளும் என்பதை உணர்ந்து

மிக்க கவனத்துடன் இவற்றை வரைந்து வாசகர்களுக்கு அவ்வர்ண ஓவியங்களை மலரில் தீட்டியுள்ளோம். பண்டைத் தமிழரின் கலைச் சிறப்பிற்கு இவ்வோவியங்களே பெரிய சான்றாகும்.

இன்னும் அநேக படங்களும், கட்டுரைகளும் மலரில் காணக்கிடக்கின்றன. அறிவிற் சிறந்த பிரபல எழுத்தாளர்கள் விஷயதானம் செய்திருக்கிறார்கள். இம்மலர் வாடா மலராக, விளங்கவேண்டுமென்று கவனம் செலுத்தி, கட்டுரைகளைப் பொறுக்கி வெளியிட்டிருக்கிறோம். அது நிரந்தர மணம் வீசி வாசகர்களைக் களிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

மலரின் ஆக்க விலை அதிகமானாலும் விலையில் கூடுதல் ஒன்றும் செய்யவில்லை. சென்ற ஆண்டு மலர் விலையையே வைத்துள்ளோம். அதாவது ரூபாய் இரண்டே தான்.

வாசகர்கள் முன்னதாகவே பணம் அனுப்பிப்பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். தங்களூர் ஏஜண்டிடமோ அல்லது நமது காரியாலயத்திலோ பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

சுதந்திர ஆண்டு நிறைவு

இந்தியா சுதந்திரம் அடைந்து ஓர் ஆண்டு நிறைந்து விட்டது. அதைக் குறித்து நாம் குதூகலிக்க வேண்டியதே.

ஆயினும் இவ்வாண்டுக்குள் கணக்கற்ற சிக்கலான பிரச்னைகள் நம்மைக் கதிகலங்கச் செய்து விட்டன. நமது முழுக் கவனமும் அதிலேயே செலுத்த நேரிட்டு விட்டது. இன்னும் காஷ்மீர் பிரச்னை தீரவில்லை; பாகிஸ்தான் தொல்லை ஓயவில்லை; ஹைதராபாத் நமக்குத் தலைவலி உண்டாக்கிக் கொண்டே வருகிறது.

மக்கள் அவதி குறையவில்லை. விலைவாசிகள் விஷம்போல ஏறிக்கொண்டே போகின்றன. அமைதி என்பது இன்னும் காணப்படவில்லை.

எனவே சிலர் சுதந்திர விழா என்றால் உற்சாகமற்றுக் காணப்படுகின்றனர். இது இயல்பே.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் நமது மக்கள் இன்னும் தேச நலனைக் கருதி, தங்கள் நடத்தையைச் சீர்திருத்திக் கொள்ளாததுதான். ஒரு தேசத்தின் உயர்வோ தாழ்வோ அதன் நன்மைக்காக அத்தேச மக்கள் எத்தகைய தியாகங்கள் செய்யத் தயார் என்பதைப் பொறுத்திருக்கிறது. அன்னிய ஆட்சி முறையைத் தகர்த்தெறிவதில் இருந்த உற்சாகத்தைக் காட்டிலும் சுதந்திர இந்தியாவைச் செவ்வனே விளங்கச் செய்வதில மக்கள் ஊக்கங் காட்ட வேண்டும், தியாகங்கள் புரிய முன் வர வேண்டும். ஜெயிலுக்குப் போவது அடிமை இந்தியாவில் பெரும் தியாகமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று மக்கள் அனைவரும் தேச நலம் தான் சுய நலனைக் காட்டிலும் பெரிது என்று உணர்ந்து, தங்கள் ஒவ்வொரு செய்கையிலும் தியாகஞ் செய்யாவிட்டால் தேசம் முன்னேற முடியாது. அரசாங்கத்தார் சுதந்திர மணம் வீசச் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. மக்களுடைய நடவடிக்கை, தியாக உணர்ச்சியைப்பொறுத்திருக்கிறது சுதந்திரம் தித்திக்குமா கசக்குமா என்பது. கொள்ளை லாபம் அடிப்பது யார்? கள்ள மார்க்கெட் செய்வது யார்? வேலை நிறுத்தம் செய்வது யார்? எல்லாம் நமது மக்களே. இன்று தேசத்தில் விலை வாசிகள் தாங்க முடியாமல் செய்வது யார்? நமது சுயநலம்தான் இதற்கெல்லாம் அடிப்படை. அரசாங்கம் சாதிக்கக்கூடியதெல்லாம் வெகு சிலரை நன்னடத்தையில் நடக்கச் செய்யலாம். ஆனால் மக்களே ஒரே கொள்ளைக் கூட்டத்தாராகத் திரும்பி விட்டால் ஜனநாயக அரசாங்கம் சாதிக்கக்கூடியது ஒன்றுமில்லை; தாங்களும் மக்களுடைய தன்மையை ஒத்து மாறி விடுவார்கள்.

சுய நலம் பாதிக்கப்பட்டாலும் தேச நன்மைக்காக எதையும் விட்டுக் கொடுக்கத்தயார் என்ற உணர்ச்சி ஏற்பட்டாலொழிய நமது சுதந்தரம் பயனற்றதாய் விடும்.

சுதந்திர இந்தியாவின் முக்கிய பிரச்னை—காஷ்மீர், ஹைதராபாத் எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானது.—விலைவாசிகளைக் குறைக்க முற்படுவது. இதைக்கவர்மெண்டாரும் மற்றப் பொது நலத் தலைவர்களும் உடனே ஏற்று நடத்துவார்கள் என்று நம்புகிறோம். மக்களும் ஒத்துழைத்தால் வெற்றி நிச்சயம்.

சுதந்திர இந்திய மக்கள் இதில் வெற்றி காண இறைவன் அருள் புரிவாராக.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சில மாதங்களாக அம்மாஞ்சி தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கவேமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். "அடே என்னடா, உபத்திரவப்படுத்துகிறாய், படி, படி என்று! என்னவென்று படிக்கச் சொல்லுகிறாய்? எந்தப்பத்திரிகையை எடுத்தாலும் அசட்டுப்பிசட்டு என்று சிறுகதைகளே காணப்படுகின்றன. சவுக்கு, சவுக்கு, சவுக்குன்னு கதைகளையே வாயில் போட்டுக்கொண்டு எவ்வளவு நேரம் மெல்ல முடியும்? வாழ்க்கைக்குப் பொருத்தமான கதைகளா? அதுவுமில்லை? மேல் நாட்டாருடைய சம்பிரதாயத்திலே இருந்து கடன் வாங்கி, அதைக் கதைகளிலே பொருத்தமாய் வைத்து விட்டால் மாத்திரம் இந்திய மக்களைப் பற்றிய கதைகளாகிவிடுமா? அநேகமாக எல்லாக் கதைகளிலும் காதல் என்றும், வீரியம் என்றும், சத்தியம் என்றும், மேன்மையான விஷயங்களை அடிப்படையாகவைத்துக்கொண்டு, காதல் பரிபூரணமாகவும், வீரியத்தைச் சாதித்ததாகவும், சத்தியத்தைக் காப்பாற்றியதாகவும் கதாசிரியர் முடித்து விடுகிறார்; வாழ்க்கையில் இதையெல்லாம் பார்க்கிறோமா? உதாரணமாக, கலியாணங்கள் எவ்வளவோ நடந்து வருகின்றனவே — இவைகளில் ஆயிரத்தில் ஒன்றாவது பிள்ளையும் பெண்ணுமாகக் காதலில் ஈடுபட்டுச் சுயமாகச் செய்துக் கொள்ளுகிறார்களா? தாய் தகப்பன்மார்கள் ஏற்படுத்திய கலியாணங்களாகவல்லவோ நடக்கின்றன? கதைகளில் மாத்திரம் நாம் படிப்பது என்ன? சற்றேறக்குறைய எல்லாக் கலியாணங்களும் பெண்ணும் பிள்ளையும் எதேச்சையாகச் சந்தித்து, மனம் பூரித்து, தாமே ஏற்பாடு செய்து, மணந்து கொண்டதாகப் படிக்கிறோம்! நமது சமூக வாழ்க்கையில் உள்ள அழுக்குக்களைப்பற்றி வெளிப்படையாகச் சொல்லுவதற்கு நம்முடைய எழுத்தாளர்களுக்குத் தைரியமே கிடையாது. ஆதலால் வாழ்க்கையொழுக்கங்கள் ஒரு வழியே இருக்க, கதைகளும், கட்டுரைகளும், நாடகங்களும், பிரசங்கங்களும். நிகழ்ச்சிகளும். சினிமாப் படங்களும், இவைகளைச் சார்ந்த பிரசார முறைகளும், எல்லாம் மேல் நாட்டு நாகரிகத்தின் மெருகைப்பூசிக்கொண்டு முச்சட்டையாடுகின்றனவே யொழிய, உள்ளதை உள்ளபடியெடுத்துக்காட்டவோ, சீர்திருத்தவோ, முயலுவதே கிடையாது. ஆகவே பத்திரிகைகளை யெதற்காகப்படிப்பது? ரேடியோ நாடகங்களை யெதற்காகக் கேட்பது? எவ்வளவுதூரம் நமது அழுக்குகளை மூடிவைக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளவா? லின்-யுடாங் மாதிரியும், பர்னார்ட்-ஷா மாதிரியும் எழுத்தாளர்களை நாம் கண்டுபிடிக்கும்வரை, நமக்கு விமோசனம் இல்லை. வாசகர்களுக்கு இனிப்புள்ள வஸ்துக்களையே வெகுநாட்களாக ஊட்டி வருகிறோம்; காரம், கசப்பு, துவர்ப்பு, புளிப்பு இவைகளும் அடுத்தடுத்துக் கொடுக்கவேண்டும். அப்போதே சமூகம் திருந்தும்", என்கிறான் அம்மாஞ்சி.

ஹாஸ்யம், ஏளனம் இவைகளைப்பற்றி, சாதாரணமாகப் பேசும் நடையில் கட்டுரைகள், சிறிய நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் முதலியவைகளைப் பிரசுரித்தால் நமது மக்கள் மேன்மையுறுவார்கள். பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், சினிமா டைரக்டர்கள், ரேடியோ அதிகாரிகள் எல்லோரும் இந்தப் பிரசாரத்தில் ஈடுபடவேண்டும். சமீபமாகத் திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து "ஓசிப் பிழைப்பு" என்பதைப்பற்றியும், "முறையில்லாத சிபார்சு" என்பதைப் பற்றியும் இரண்டு சொற்பொழிவுகள் ஹாஸ்ய முறையில் வெளிவந்தன; சமூகச் சீர்திருத்தத்திற்குச் சாதனமாக

வெகு விஷயங்கள் ஹாஸ்ய நடையில் பேசியவர்கள் எடுத்துக்கூறினர்; இது போன்ற சொற்பொழிவுகள் அநேகம் இன்னும் வெளிவந்தால் ஜனங்களுடைய மனப்பான்மைகள் மேன்மைப்படும். இப்பொழுது பல விஷயங்களில் தாழ்மைப் பட்டே யிருக்கின்றன.

நமது ஊழல்களில் அங்குமிங்குமிருந்தும் சிலவற்றை யெடுத்துப் பரிசோதிப்போமா? மாலைகள் போடுவதையெடுத்துக் கொள்வோம். “கல்கி” பத்திரிகை ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதி மலரின்மேல் அட்டையிலுள்ள படத்தைப் பாருங்கள். பிரதமமந்திரி நேருவுக்கு இடப்போகும் மாலை யெப்படியிருக்கிறது? அவருக்கு முன் வைத்திருக்கும் செண்டைப்பாருங்கள்? படத்தில் பார்த்தால் செண்டு சுமார் 4 அடி அகலம் இருக்கும்போலிருக்கிறது; மாலையின் கனம் ஒருவரால் சுமக்க முடியாததுபோலு மிருக்கிறது. இவ்விரண்டு வஸ்துக்களையும் பார்த்து எல்லோரும் சிரிக்கின்றனர்! புஷ்பங்களால் பெரியோர்களுக்கு மரியாதை நடத்தலாம் என்பது நமது தேச ஒழுக்கம்; ஆனால் அந்தஸ்துக்குத் தக்க மாதிரி புஷ்பக் குவியல் இருக்க வேண்டும் என்பதாக எங்கும் சொல்லவில்லை; ஆகவே நேருஜிக்கு இட்ட மாலையும் கொடுத்த செண்டும், கண்ணுக்கு அருவருப்பு அளிப்பதுடன், நாகரிகத்துக்குக் கேவலமாக இருப்பதாகவே வெகு பேர் அபிப்பிராயப்படுவார்கள். ஒரு விருந்தாளியை இலையில் அமர்த்தி, ஒரு தட்டு நிறையச் சோற்றை இலையில் தள்ளினால் அவர் சும்மா இருப்பாரா? யானைத் தலையளவு காய்கறியைப் போட்டால் நன்றா யிருக்குமா? ஒரு கோகர்ணம் நிறைய மோர்க்குழம்பை ஊற்றினால் அழகா யிருக்குமா? இருபத்து ஐந்து ஜிலேபியை இலையில் கொட்டினால் பொருத்தமா யிருக்குமா? ஆகவே எந்தவிதமான மரியாதையும் அளவுக்கு மீறிச் செய்தால் அரோசகமாகத்தானிருக்கும் என்பது ஏற்படவில்லையா? நேருஜியோ காஷ்மீர புத்திரன்; அவர் பாராத புஷ்பங்கள் நம் நாட்டிலேயே உள்ளனவோ என்னவோ? ஒரு சிறிய மலரின் மணத்தை யுட்கொண்டு ஆனந்தப்படும் அற்ப சந்தோஷி. அவருக்குச் செய்த மரியாதை சென்னைச் சட்டசபையில் படத்தில் கண்டதுபோல் இருந்ததால், மதராஸ் வாசிகளைப்பற்றி அவர் வெகு கேவலமாகத்தான் எண்ணி யிருப்பார். எல்லா விஷயங்களிலும் மதராஸிலுள்ளவர்கள் பகாசுரன்கள்தான் என்று நம்பி யிருப்பார். அழகாகவும் அடுக்காகவும் மல்லிகை மொக்குக்களால் தொடுத்தவொரு மாலையை அவர் கழுத்திலிட்டு, ஒரு சிறிய மல்லிகைச் செண்டைக் கையில் கொடுத்திருந்தால் எவ்வளவு அழகா யிருந்திருக்கும்? அவரும் அவைகளை அணிந்து, மோந்து, சந்தோஷித்திருப்பார். அதிகமாக உட்கொண்டால் அமிர்தமும் விஷமாகும் என்பார்களல்லவா?

இந்தக் குற்றம் யாருடையது? பொது ஜனங்களுடையதென்றே சொல்லலாம். சென்னை மாகாணத்தில் பெரிய பட்டணங்கள் எல்லாவற்றிலும் பெண் மக்கள் கூட்டங்களைக் கவனித்தால் இது புலப்படும். சென்ற பத்து வருஷங்களாகப் பெண் மக்கள் எல்லோரும் புஷ்பம் சூட்டிக் கொள்ளுவதை விட்டு விட்டார்கள்; புஷ்பம் சுமக்கிறார்கள். வண்ணாத்தி அழுக்குத்துணி மூட்டையையெடுத்துப் போகும்போது எப்படி பின் காட்சி யளிக்கிறாளோ, அது போலவே தான் நமது பெண்மக்களில் பெரும்பாலோர் புஷ்பக் குவியல்களைச் சுமந்து கொண்டு பின் காட்சியளிக்கின்றனர். தலையில் அணிந்த புஷ்பக்குவியல் (செண்டு, சரம், என்கிற வாக்குக்களை உபயோகிக்கமுடியாது) ஒருபுறம் சரிந்து தொங்குவதையும் காணலாம்; அதுதான் நவீன நாகரிகமாம்! ஆகவே பெண்மக்கள் அணியும் புஷ்பக் குவியல்களும், பெரியோருக்கு இடும் மாலைகளும், ஏந்தக் கொடுக்கும் செண்டுகளும், “Elephantiasis” என்கிற வியாதியால் பெருக்கடைந்த மாதிரி சென்ற பத்து வருஷங்களாகப் பெருக்கடைந்து விட்டன. பெருக்கடைந்ததே ஒரு வியாதிதான்! சேலைகளின் ரகங்கள் பெருகவில்லையா? சரிகைத் தலைப்புகள், கரைகள் பெருகவில்லையா? நகைகள் பெருகவில்லையா? காதுகளில் தோடுகள்போக, தொங்கல்கள் ஆகவில்லையா? ஆகக்கூடி எல்லா விஷயங்களிலும், கண்ணுக்கு ரம்மியம் என்பது விலகி, கண்ணுக்குக் கணிசம் என்பது வந்து விட்டதாகவே சொல்லலாம்; “சிறுகக்கட்டி பெருகவாழ்” என்

''அப்படி யல்ல, நானே சமயத்தில் பின் தங்க நேரிடும், சபதம் ஒன்று இருந்தால் தான் கட்டுப்பாடு தோன்றும். அதுபோகட்டும். கலா! என்மீது கோபமா?''

''கோபமா? அது யார் மனதில்? அசைய விடாமல் செய்திருப்பது யார்?'' என்ருள் புன் சிரிப்புடன்.

''கோபமா? இல்லை. தாபம்'' என்று சொல்லியவாறு இறுக அணைத்து அநேக முத்த மழை ஈந்தான்.

எழுந்து நின்று, ''இப்பொழுது மனம் சமாதானம் அடைந்துவிட்டதல்லவா? தேவியைத் தெரிசிக்கச் செல்லலாமா?'' என்ருள்.

''ஓ! ரெடி'' என்று எழுந்தான்.

தட்டில் பூஜா திரவியத்துடன் சுரங்க வாயிலண்டை சென்றவள், ''இன்று இருந்த கோபம் சுரங்கவாயிலை மூடக்கூட மறக்கச் செய்து விட்டது போலும்'' என்ருள்.

''மூடவில்லையா? நான் என்ன செய்யட்டும் கலா! உண்மையாகச் சொல்லுகிறேன். சுரங்க வாயிலில் நான் வரும்பொழுது உன் ஆட்டத்தைக் கண்டதும், சீதை அக்னிப் பிரவேச மாகுமுன், ராமர் அவளைப்பார்த்து, 'சீதா, கண்வலிக்காரனுக்கு விளக்கொளி எப்படியிருக்குமோ அவ்விதமிருக்கிறது உன்னைப் பார்ப்பது' என்ருராம். அன்னை அக்னிப் பிரவேசமானாளாம். அதுபோல் உன் ஆட்டம் நொந்த புண்ணில் கோலிடுவது போலிருந்தது என் மனதிற்கு. என்னையே மறந்து விட்டேன். என் தேகம் பற்றி யெரிவது போன்ற உணர்ச்சி மிகுந்தது. இன்னது செய்கிறேமென்று ஆராயாமலே உன்னை இவ்வாறு நடத்திவிட்டேன். என்னை மன்னித்துவிடு'' என்ருன்.

''ஐயோ! இதென்ன பேச்சு? என்னைப் பாபக் குழியில் தள்ள வேண்டுமென்பது உங்கள் விருப்பமா? மன்னிப்புக் கோர வேண்டியவள் நான். சரி இவையெல்லாம் போகட்டும். நிர்மலமாகத் தேவியைத் தெரிசிக்கலாம் வாருங்கள்.''

சுரங்கத்தில் இறங்கி, கொஞ்ச தூரம் சென்றதும், காலடிச் சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினன் ரவிவர்மன்.

''ஏன்'' என்ருள் கலா.

''சப்தம் உனக்குக் கேட்க வில்லை?'' என்ருன்.

''என் மனம் எதையும் அறியும் நிலைமையிலில்லை. என்ன சப்தம்?''

''அடியோசை போலிருந்தது.''

''மனப்பிராந்தி. இவ்விடம் யார் வரமுடியும்? வந்தால் மஹாராஜா வரமுடியும். தற்சமயம் சுரங்கத்தைப் பற்றிக் கனவு கூடக் கண்டிருக்கமுடியாது'' என்ருள்.

''உண்மைதான். சுரங்கத்தைத் திறக்கக் கூடாதென்பதே அவர் தீர்மானம். மனப்பிராந்திதான், வா! போகலாம்'' என்று அவள்கையைப்பற்றி நடந்தான்.

கொஞ்ச தூரம் மௌனமாகவே சென்ருர்கள். பிறகு ''என் மனதில் தோன்றுவதைக்கேட்டால் கோபங் கொள்ள மாட்டீர்களே'' என்ருள்.

''கோபமெதற்கு? தாராளமாகக் கேள்.''

''வேண்டாம். ஒரு சமயம் வருத்தம் ஏற்பட்டால் வீண் தொந்தரவாகி விடும்.''

''பரவாயில்லை சொல்லு. நமக்குள் விஷயம் அன்னியமாகக்கூடாது.''

''கீழ்மக்கள் ஏதோ சொல்லிக் கொண்டார்கள் என்று கலையின் அவதார புருஷராகிய தங்கள் மனதில் இவ்வித பதட்டமேற்படலாகுமா? 'கருமமே கண்ணுயினர்' என்றபடி நமது லக்ஷியத்தைத்தானே நாம் கடைப்பிடிக்க வேண்டும். உங்கள் மனம் இப்படிப் புண்பட்டது எனக்கு வியப்பாகவே இருக்கிறது.'' என்ருள்.

''கலா! சட்டத்தின் கீழ் மக்களின் மனதை ஒரு வழியில் கொண்டு வருவது என்பது குதிரைக் கொம்பு தான், என்ற உணர்ச்சி என்னைப் பைத்தியக்காரனுக்கி விட்டது. மேலும் இன்னும் சில நாட்களில் நீ ஜமீந்தாரிணி. என்னதான் கலைத் தொண்டு என்ருலும், ஸ்தானத்திற்கு மரியாதை கொடுத்தே யாக வேண்டும். மேலும் காங்கிரஸ் காரியக் கமிட்டி நிமித்தம் சமீபத்தில் நான் மாதக் கணக்கில் அயலூரில் தங்க நேரிடும். அந்தச் சமயம் அப்பாவின் உத்தரவுப்படி நாட்டிய மாட நேர்ந்ததால்? என்று எண்ணும் பொழுது என் மனம் சபதத்தை நாடியது.''

''எப்படிப்பட்ட தீரபுருஷராளுலும், லக்ஷியவாதியானுலும் வாழ்க்கையின் போக்கில், தாம்பத்ய உணர்ச்சியில், காதலின் இன்பத்தில், அன்பின் சுதந்திரத்தில், பெண் ஆண்களின் கண்ணிற்கு ஆவல் மிகும் இறைச்சியாகத் தோன்றுவாள் போலும்.........''

''ஏன் நிறுத்திவிட்டாய்? ஒன்றுக்குச் சொந்தமென்ற இறைச்சியை மற்ருென்று

ஊருக்குப் போவார்; கரப்பாம் பூச்சி ரயில்வே ஸ்டேஷனுக்கு மாலேயோடு போகும்; திரும்பி வரும்போதும் அதே உபசாரம் செய்யும். பெரியவர் ஏதாவது உபன்யாசம் செய்து பத்திரிகையில் வந்தால், கரப்பாம் பூச்சி, அந்தப் பத்திரிகை மலரிலே 150 காபிகள் வாங்கி எல்லோருக்கும் வினியோகம் செய்யும்! பெரியவருடைய மூன்ருவது பிள்ளேயினுடைய நான்காவது பெண்ணுக்கு (வயது 3½) வயிற்றுக் கடுப்பாயிருந்தால், உடனே டாக்டர் கரப்பாம் பூச்சி தந்தி கொடுப்பார்; என்னவென்று? "குழந்தைக்கு உடம்பு அசௌக்கியமென்று கேட்டு மிகவும் வருந்துகிறேன்; சுலபமாகக் குணமாக வேண்டுமென்று கடவுளேப் பிரார்த்திக்கிறேன்" என்பார்—அடுத்த நாள் காலே குழந்தைக்கு உடம்பு நேரானவுடன் "குழந்தைக்கு உடம்பு சொஸ்தமாயிற்றென்று பூரித்து விட்டேன். கடவுள் குழந்தைக்கு நீண்ட ஆயுள் கொடுப்பாராக"—என்பார். பெரியவர் வீட்டில் எந்த விசேஷம் வந்தாலும் கரப்பாம்பூச்சி யில்லாமல் நடைபெருது; எந்த நிகழ்ச்சியிலும் பணத்துடனும் காசுடனும் கலந்து கொள்வார். ஏதாவது ஒரு குழந்தைக்கு அன்னப்பிராசனம் என்ருல், நானூறு ரூபா பெடையில் வெள்ளி டிபன் அடுக்குகள் செய்து வந்து கொடுப்பார். அக்ஷராப்யாசம் என்ருல் ரோஸ்வுட் மேஜையொன்றும், Encyclopedia Brtitaniea ஒரு செட்டும் ஓதியிட்டுவிடுவார் - பதிலாக ஏதாவது அபேக்ஷிப்பாரா? பேசக்கூடாது! வாய்க்கால் ஓட்டம் நதியை நோக்கித்தான்—காரணம்? காக்கை வாஞ்சை!

மிஸ்டர் காட்டுப்பூனே வேறெரு ரகம். ஜீவிதத்தில், அவருடைய முக்கியக் கருத்து என்னவென்ருல், சுற்றுவட்டாரத்திலுள்ள பெரிய மனுஷாள் அனைவரையும் வசிகரப்படுத்திவிட வேண்டியது என்பது. ஆனல் அவர்களிடத்தில் ஒன்றும் அபேக்ஷிப்பதில்லே; வசிகரிப்பது அதற்காகவன்று. ஒவ்வொருவரிடமும் போய், தோளேத்தட்டி, அல்லோ, old boy! என்றுசொல்லும் முறையைக் கைப்பற்றவேண்டுவதற்குத்தான். காட்டுப் பூனேக்கு இருபத்து ஐந்து வயதாயிருக்கும்போதே எல்லோரையும் ஏக வசனமாகவே கூப்பிடுவார்; கனம் ஸ்ரீ கறுமுறு குண்டேசுவர தீக்ஷதர்வாளேயே, அவர் என்ன 'குண்டப்பா' என்றுதான் அழைப்பார்; குண்டய்யாவுக்கு வயது 54! அம்மாஞ்சி சொல்லுவான், "இந்தக் காட்டுப்பூனே சுவர்க்கத்துக்குப் போனல் கூடப் பரமேச்வரனேப் பார்த்து "என்ன ஈசா! அந்தப் பயல் விஷ்ணு எங்கே ரொம்ப நாளாய் என் டீ பார்ட்டிக்கு "வரல்லேயே" என்பான் போலிருக்கு, என்று! ஏனென்ருல் காட்டுப்பூனேயின் காக்கை பிடிக்கும் வலே டீ பார்ட்டிதான், பெரியவர் ஒருவர் தவருமல் டீ பார்ட்டி ஒன்றுக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பிரதம விருந்தாளியாக அழைத்து விடுவார்; பெருமாள் கோவில் விடாயாற்று கட்டளே மாதிரி ஒவ்வொரு பார்ட்டிக்கும் செலவு ரூ 9—15—6 க்கு மேற்படாது. எல்லாம் காக்கை வாஞ்சைதான்!

மிஸ்டர் குள்ளப்பயல் வேறு ரகம்; நல்ல நுழை நரிதான். அவர் பிடிக்கும் காக்கை யெல்லாம் இரண்டு மூன்று பேர்வழிகளேத்தான். அவர்களுக்கு மாத்திரம் அவர் தாசானுதாசன்; மற்ற அனைவருக்கும் அவர் மஹா மேரு! வேறு யாரைப் பார்த்தாலும் "அவன் கிடக்கிருன், தள்ளு" என்பார். தன்னுடைய புள்ளிகளேப் பார்த்தவுடன் மண்ணுள்ளிப் பாம்புதான்; நெளிவார்!

மேற்கூறிய ஆட்கள் நிஜமாகவே இருக்கிருர்கள் என்று எண்ணுகிறீர்களா? தெலுங்கன் சொல்லுவதுபோல் "அப்பெப்பே"! ஆட்கள் அந்தரத்தில் தான். ரகங்கள் இருக்கின்றன. இத்தகைய ரகங்கள் எந்த ஊரிலும் எந்தப் பட்டணத்திலும் காணலாம். இந்த ரகங்களெல்லாம் வெளிப்படையாக ஜனங்களுக்குத் தெரிந்த பின்தான் சமூகச் சீர்திருத்தம் ஏற்படும். அதற்குப் பிறகுதான் சுயமரியாதை யென்பது அனைவரிடமும் பொருந்தி, செழிப்பாக ஓங்கும். அதற்கப்புறம்தான் ஓசிப் பிழைப்பும், முறை யில்லாத ஒழுக்கங்களும், சிபார்சுகளும், நடவடிக்கைகளும் தொலேயும். 'மதராஸி', 'மதராஸி' என்று இதர மாகாணங்களில் நம் மக்களே ஏளனமாகப் பேசும் பத்ததி குறைய ஆரம்பிக்கும்!



தற்கால கட்டிட நிர்மாணம்

கிராமச் சாலைகள்.

கிராமப் புனருத்தாரணத்தில் உபயோககரமான சாலை ஓர் முக்கிய அம்சம். இரண்டு பத்தியான கான்கிரீட் பாதைகள்கி ராமவாசிக்கு, சமீபத்துப் பட்டணம் அல்லது வியாபாரஸ்தலம் இவற்றுடன் மிகவும் சிக்கனமுறையில், காற்று, மழையினால் பாதிக்கப்படாத சம்பந்த சாதனமாகின்றன. கான்கிரீட் சாலைகள் சரக்குகளின் போக்குவரத்தை துரிதப்படுத்துகின்றன. ஆனால், அச்சாலைகளின் நிர்வாகமோ மிகவும் குறைந்த செலவில் முடிகிறது.

மேலும், கான்கிரீட் பாதைகள் சைகிள் பிரயாணத்திற்கு வசதியாயிருப்பதன் மூலம் அவசர வைத்திய உதவி, பாங்கி, தபால் நடவடிக்கைகளுக்கு உதவியாய் இருக்கின்றன. சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதும் கஷ்டமில்லாமல் இருக்கிறது.

மற்றவிவரங்களுக்கு:—தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312 மதராஸ் என்கிற விலாசத்துக்கு எழுதுங்கள்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

ADARTS

தேசப்பணி - வரிகொடுத்தல்

எஸ். என். ராமசாமி

சுதந்தர முதல் ஆண்டு விழா கூடிய சீக்கிரம் ஆடிக் கடைசி நாள் கொண்டாடப்படும். கைமேல் பலன் கிட்டாததாலும், குழப்பம் மேலிட்டதாலும், அமைதி குறைந்து, ஆட்சி முறை கடுமையானதாலும், விலை வாசி உயர்ந்ததாலும், பொதுஜனப் புளிப்புத்தான் மிச்சம்எனக் கூறலாம். சமுதாயத்தை நொடிப்பொழுதில் சீர்திருத்தி அமைக்கும் வாய்ப் பேச்சு வீரர்கள், இந்தப் புளிப்பை, தலைவர்கள் தலைமேல் துவேஷமாகக் கரைத்தார்கள். இத்தகைய "அழிக, ஒழிக" கோஷிக்கும் தோழர்கள். "ஆக்கும்" திட்டம் ஒன்றையும் வெளியிட வில்லை. வசைப்புராணத்தையேகையாண்டு, வரப் போகும் தேர்தலில், காங்கிரஸை முறியடிக்கலாம் என்று கனவு காண்கிறார்கள். இருப்பதைப் பிடுங்கி, சமப் பங்கீடு செய்வதாக ருசியும் காட்டுகிறார்கள். இந்தப்பிரசாரம் ஓங்கஓங்க, பொதுஜனம் சிந்திக்க ஆரம்பித்தார்: "சுதந்தர வெற்றிக்கு அணிவகுத்துச்சென்ற தலைவர்கள், கட்டாயம் நாட்டைச் சுபிக்ஷத்திற்கும் முன்னேற்றுவார்கள்" என்று தம் சந்தேகத்தையே நிவர்த்தி செய்து கொள்கிறார். ஆனால் பசி அதிகரித்து, "பத்தும்" பறக்காமலிருக்க வேண்டும்.

தேசத்திற்கு அடிப்படையானது பணம்; பணம், வரி வசூல் மூலம் கிட்டுகிறது. இது தற்போது இந்தியாவில் இருக்கும் நிலைமையை ஆராய்வோம்...... யுத்த காலத்தில், பணம் இருந்து பண்டம் கிடைக்கவில்லை. தற்போது இரண்டும் — பணம், பண்டம் — இல்லாமல் தவிக்கிறோம். ஆனால் மற்ற நாடுகள் எப்படி சமாளிக்கின்றன? மாயமா, மந்திரக்கோலா? அந்தந்தத் தேச மக்களின் தைரியமும், தியாக உணர்ச்சியுமேதான் அடிப்படை. ஒரு பக்கத்தில் ருஷ்யா, "சம்மட்டி, அரிவாள், செங்கொடி தத்துவமே உலக சமதர்மத்திற்கு உகந்தது என்று பிரசாரம் செய்து, ஐரோப்பாவில் பாதியைக் கம்பளி போட்டு விட்டது. சீனாவில் ஒருவித யுத்தம் நடத்துகிறது... ஆனால் அமெரிக்கா, "லாபத்திற்கு உழைத்து, உற்பத்தியைப் பெருக்கி, உயர்வு—தாழ்வு வித்தியாசமின்றி அனுபவிப்பது தான் மேலானது." என்று தன் தேசத்திலேயே நிரூபித்து, மேற்கு ஐரோப்பாவில் அந்தத் தத்துவத்தைப் பரப்ப, "மார்ஷல் திட்டம்" வகுத்திருக்கிறது. தோழர்கள் இதை இயற்கையான முதலாளி, தொழிலாளி சண்டை என்று வியாக்யானம் செய்கிறார்கள். இரண்டில், எது நம் தேசத்திற்கு உகந்தது, எது பாமர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும், என்று முடிவு செய்து கையாள வேண்டும். அரசாங்கத்திற்கு முடிவு புலப்படாததால்தான், எல்லாவித "குட்டைக் குழப்பம்" மீண்டது. உற்பத்தி பெருக்கவேண்டும் என்பதை மட்டும் தீர்மானித்தார்கள். வழி எப்படி? "தேச உடைமை" கோஷத்தால், முதல் பதுங்குகிறது; முதல் வெளிவந்தால், தொழிலாளி "ஸ்ட்ரைக்". இவ்விரு சிறு கூட்டத்தார் சண்டையால் பெரும்பாலான பொது மக்கள் தவிக்கின்றனர். அரசாங்கம் திகைக்கின்றது. இரு சாராருக்கும் தேச உணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை. தொழில் நடந்தால்தான் இருவரும் பிழைக்கலாம் என்ற சுயநலத் தூண்டுகோல் கூடக் காணவில்லை. தேச பக்தியும், தியாக உணர்ச்சியும் ஒங்கு மட்டும், விமோசனம் இல்லை.

ஆனால் நம்பிக்கை இழக்கக் காரணமில்லை. தற்போது பண்பட்ட ஜனநாயக

யுகம். மேற்படி வர்க்கம், ஒரு சதவிகிதம் கூட இல்லை. மற்றைய 99 சத விகித நபர்கள் திரிகரண சுத்தியாகத் தங்கள் கடமையைத் தேசத்திற்குச் செலுத்தினால், இந்தியா வளமும் வனப்பும் ஓங்கும்.

172 வருட அனுபவம் முதிர்ந்த அமெரிக்கா அல்லது 21 வருடப் புரட்சியில் இறங்கிய ருஷ்யா வழிகாட்டியா, என்பது ஆராயும் காலத்தில், இந்தியா இருப்பதை வைத்துச் சீர்படுத்தி வாழவேண்டும். இருக்கும் செல்வத்தைப் பாதிக்கும் எந்தத் திட்டத்திற்கும் இடமில்லை.

1948 – 1949 வரவு செலவு திட்டப்படி நாட்டின் வருமானம் 230 கோடி ரூபாய்–இறக்குமதி ரூ. 81 கோடி; மத்ய உள் நாட்டுச் சுங்கம் (Central Excise) ரூ. 47 கோடி; கம்பெனிகளால் கொடுக்கப்பட்ட வருமானவரி ரூ. 50 கோடி; மற்ற வருமான வரி ரூ. $46\frac{3}{4}$ கோடி. முழு 230 கோடியும் மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டாலும், அதிலிருந்து பெரிய பாகத்தை மாகாணங்களுக்கு வீதாசாரப்படி திருப்புகிறது. பாக்கி யிருக்கும் தொகையுடன் தான் ராணுவம், துறைமுகம், பாதுகாப்பு, வெளிநாட்டு இலாக்கா போன்ற முக்ய சேவை செய்யவேண்டும். பாதுகாப்பிற்கு மட்டும் ரூ. 121 கோடி செலவு. கடன் திருப்பியோ அல்லதுவட்டி கொடுக்க ரூ. 41 கோடி. அத்துடன் அகதிகளுக்கு அபயம் அளிக்கும் செலவு. இதை முழுதும் சமாளித்து, ரூ. 100 கோடிக்கு உணவுப் பொருள் வாங்கி விநியோகப்படுத்தி, அரசாங்கம் வெற்றிபெற்றது. வேறு எந்த நாடும், இந்த பிரச்னைகளில் மூழ்கி இருக்கும் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

பொதுவாக நாட்டின் மூலதனம் சுமார் 2800 கோடி. கடன் ரூ. 3200 கோடி. நேர் முகமாக வரி விதிப்பது இனி இயலாது. மூலதனத்தைப்பெருக்கவழி உண்டு —தொழில் இயல், விவசாய உற்பத்திப் பெருக்கம். ஆனால் இரண்டிற்கும் அவகாசம் வேண்டும். சாதனங்கள் சீக்கிரமாகக் கிட்டமாட்டா. ஆகையால் தற்போது இருக்கும் வரி வருமானமே ஆதாரம். ஒவ்வொரு இந்தியனும் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரியை முன் கூட்டியே குறைக்காமல் செலுத்தவேண்டும். சுதந்திரம் நிலைக்கவேண்டுமானால் ஒழுக்கம், நேர்மை உயரவேண்டும். தேசீயச்சர்ச்சை குறைய வேண்டும்.

நிதி மந்திரி வெளியிட்ட அறிக்கையிலிருந்து கீழ்க்கண்டவை வெளியாகின்றன. நாட்டில் வருடத்திற்கு இரண்டு லக்ஷத்திற்குமேல் வருமானமுள்ள தனிநபர் எண்ணிக்கை – 415. இவர்கள் மொத்த வருமானம் ரூ. 19 கோடி–தலைக்குச் சராசரி $4\frac{1}{2}$ லக்ஷம். வருமான வரியாக 415 நபர் $11\frac{1}{2}$ கோடி செலுத்துகிறார்கள். வருடத்திற்கு 3800 முதல் 10,000 வரையில் வருமானம் உள்ளவர், நடுத்தர அந்தஸ்தர் (Middle Class) எனலாம். எந்தத் தேசத்தையும் உருவாக்குவதில் உழைப்பவர் இவர்கள்தான்; ஆவேச கோஷத்தை அடக்கி, ஸ்திரமான அரசாங்கம் அமைப்பவரும் இவர்களே. அமெரிக்க ஜனத்தொகையின் 15 கோடியில் $5\frac{1}{4}$ கோடி, இந்த ரகத்தார்கள். இவர்கள் பலத்தால்தான் அங்கே "முதலாளி சுரண்டலும்" "தொழிலாளி புரட்சியும்" வேர் ஊன்றவில்லை. நம் நாட்டின் 30 கோடியில், 175,436 இத்தகையநபர் உளர். ஆயிரத்திற்கு ஒன்றுகூட இல்லை. இவர் மொத்த வருமானம் ரூ. 95 கோடியில் (சராசரி தலைக்குச் சுமார் 5000 வருமானம்) ரூ. 6 கோடி வருமான வரி கொடுக்கிறார்கள். நாடு வளம் பெருகினால் அன்றி வருமானவரி அதிகப்படாது. ஆனால் தற்போது சிலர் அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள். இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட 11783 கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ, 317 கோடி. இவை சென்ற 9 வருடத்தில், முதலுக்குமேல், லாபம் அடைந்தார்கள். ஆடம்பர வாழ்க்கையால் ஆத்திரத்தை மூட்டினார்கள் ஆனால் முதலில் பாதிகூட வருமான வரி செலுத்தவில்லை. வருவாய்ப் புள்ளிகளை மறைத்துக் கணக்குக் கொடுப்பது, அறுபத்து ஐந்தாவது கலையாக விளங்குகிறது இதனால் மனம் கசந்து, நிதி மந்திரி "நேர்மையாக வரிசெலுத்தும் யாரும், லக்ஷாதிபதி ஆக முடியாது" என்றார். இந்தக் குற்றச்சாட்டை இன்னும் யாரும் எதிர்க்கவில்லை! இவ்விதப் பதுக்கலினால், பொது ஜனம் தீப்பெட்டிக்கும், சினிமா டிக்கட்டிற்கும் அதிகக் கட்டணம் செலுத்த

வேண்டியிருக்கிறது. இக் கூட்டத்தாரை முறியடிக்க, நடுத்தர வாழ்வுள்ளவர்கள் தங்கள் தேவையை முற்றிலும் குறைத்து, அரசாங்கத்திற்கு, சேமித்த தொகையைக் கடனாகக் கொடுக்கவேண்டும். அது இல்லாமல் "செங்கொடி ஓங்குக" என்ற கோஷத்துடன், வேலை நிறுத்தம், அவர்களை அசைக்காது. பத்துத் தலைமுறைக்கு வேண்டியது சேமித்தாகிவிட்டது!!

எந்த நாடும் கடன்வகையில் முன்னேறலாம். வட்டியும், முதலும் சொந்த நாட்டில் செலவாகின்றன. இங்கிலாந்தின் ஜனத் தொகை சுமார் 4 கோடி. வருட வருமானம் 340 கோடி பவுன் (வருமான வரி மட்டும் 191 கோடி பவுன்!!) நாட்டின் தேசீயக்கடன் 2363 கோடி பவுனுக்கு வருடாவருடம் வட்டி சுமார் 47 கோடி பவுன் செலுத்துகிறது. இந்தக் "கப்பலில்" சுமார் 120 கோடி இந்திய பவுன் இருக்கின்றது.

அத் தேசம் ஒரே முகமாக, உள்நாட்டு விநியோகத்தை ஒடுக்கி, ஏற்றுமதி சேவையில் உழைத்து, நாட்டைப் பாதுகாக்கிறார்கள். நம் தலைவர்களும், பிற நாட்டுடன் உறவு ஏற்படுத்தி, நாட்டில் பெரிய பெரிய திட்டங்களை—தாமோதர், கோஸி, ஹிர்குத், அணைகள், டெலிபோன் பாக்டரி—நிறுவுகிறார்கள். கூடிய சீக்கிரம் நிறைவேறும். தேசிய இலாகாவில், சர்தார் படேல், தனிமரமாக இருந்த 600 சமஸ்தானங்களை, உருவான 30 நாடுகள் ஆக அமைத்தார். "ர்வாலாடு, குஞ்சாலாடாக மாறிவிட்டது" என்கிறார் ஒரு ரஸிகர். இந்த ஐக்கியத்தால் நாட்டின் பாதுகாப்பு வலுத்தது; வருமானமும் அதிகரித்தது. இந்த ஒரு வருடத்தில், தலைவர்கள் நிறைவேற்றிய பல திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம், கஷ்டம் குறையாது போனாலும், பொது ஜனம் சற்றுப்பொறுமையுடன்சமாளித்து அமைதியைக்குலைக்கும் கோஷங்களுக்குச் செவி சாய்க்காமல், தம் கடமை செய்து, வரியோ அல்லது கடனோ தாராளமாகக் கொடுத்து, அரசாங்கத்தையும், தலைவர்களையும் பலப்படுத்தினால், இந்தியா, உலகின் தலைசிறந்த நாடாக விளங்க, உழைத்தவராகி, வரும் தலைமுறையின் நன்றிக்கும் பாத்திரமாவார்கள்.

சுந்தரகாண்ட விமர்சனம்

தி. சுந்தராச்சாரியார் எழுதியது.

கல்விப் பிரசுராலயம், 3, கோமதி நாராயணசாமி ரோட், தியாகராய நகர், மதராஸ். விலை ரூ. 2—0—0.

இப்புத்தகத்தில் அடங்கி யிருக்கும் விஷயங்களுக்கு இரண்டு ரூபாய் மிகவும் குறைந்த விலைதான். நல்ல தமிழில் சொற் சுவை பொருட் சுவையுடன் ராமாயணத்துக்கே ஒரு சுவை யுரையாக வெளி வந்திருக்கிறது. பரமனை விட்டுப் பிரிந்த ஜீவாத்மா, இலங்கைச் சிறையில் இருக்கிறது. பத்துவித ஹிம்ஸைகளைக் கையாளும் ராவணனது நகரை அழிக்கும் அனுமான் ஆத்மைசுவர்யத்திற்குப் பிரதிகூலமான பூதைசுவர்யத்தைத்தான் அழிக்கிறார். பிரும்மச்சர்யத்தின் மேன்மையினால் கற்பின் சிறப்பை அனுமான் காண முடிகிறது. ஸீதை அரக்கிகளிடம் நகைச் சுவையுடன் பேசியது பொய்யா என்று விண் விசாரம் செய்ய வேண்டியதில்லை. இலக்கியக் கண் கொண்டு காணவாருங்கள் என்று நம்மை ராமாயணத்துக்குள் அழைத்துச் செல்லுகிறார், ஸாஹிதிவல்லபர் சுந்தராச்சாரியார். 'ஸுந்தர' என்பது எதைக் குறிக்கிறது, 73, 78, 91ஆம் பக்கங்களில் பிரஸ்தாபிக்கப்படும் மூல பாடங்கள் சரியானவைகளா அல்லவா, 49ஆம் பக்கத்தில் விசாரிக்கப்படும் 'அநயம்' என்பதற்குச் சரியான பொருள் என்ன, முதலிய விவாதங்களும் ரஸமாகவே இருக்கின்றன. ஜடாயுவை ராவணன் வெட்டியது முதலாகவே தர்மம் மறைந்து இருள் சூழ்ந்துவிடுகிறது. அனுமான்ஸீதையைத் தரிசித்தபின்தான் இருள் நீங்குகிறது. அந்த இருண்ட காலத்தில் நடந்ததால் வாலி வதமும் நமக்குத் தர்மஸம்சயத்தை உண்டாக்குகிறது போலும் என்று ஆசிரியர் வியக்கிறார்.

சங்கப் பலகை

சத்திய லோகம்
கிருத யுகம்

அன்புள்ள பாஞ்ச சன்னியம் அவர்கட்கு,

தங்கள் கடிதங் கிடைக்கப் பெற்றேன். அதில் காணப்பட்ட செய்திகள் எங்கள் நாட்டின் மாந்தர்களின் மனத்திற்குத் துயரை அளித்தாலும், நாங்கள் தைரியத்தை விடவில்லை. எத்தனை யுகங்கள் தேய்ந்தாலும், எல்லாம் ஆண்டவன் திருவடி நிழலை முடிவில் அடைந்து விடும் என்ற நம்பிக்கை எங்களிடத்தில் வேரூன்றிவிட்டது. எங்கள் நாட்டில் 'ஒழிக, ஒழிக' என்ற ஒலியைக் கேட்க முடியாது. எல்லாம் 'வாழ்க, வாழ்க' என்ற மங்கல நாதந்தான் எங்கும் எழும். அதைத்தான் அகில புவனங்களிலும் பரப்ப இடையருத முயற்சிகள் செய்து வருகிறோம். எந்த அழிவிலும். எங்கள் அழிவுதான் தோன்றும். ஆதலால் பிறர் அழிவை நாடோம்; மனத்தினாலும் சிந்திக்க மாட்டோம். எந்த மங்கலச் செய்திகளிலும், எங்கள் மங்கலத்தையே உணர்வோம். அக்காரணம் பற்றியே எல்லாம் இன்பமாக வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையைத்தான் எப்பொழுதும் செய்துவருகிறோம்.

உங்கள் நாட்டில் 'ஒழிக' என்ற கோர ஒலி எழுந்தாலும், எங்கள் பிரார்த்தனை அதை அடித்துத் துரத்திவிடும், கவலைப்படாதீர்கள்.

இலக்கியத்தைப்பற்றி எங்களை உசாவினீர்களன்றோ. எங்கள் கருத்துக்களைத் தங்கட்குத் தருகின்றோம்.

உண்மையான இலக்கியமொன்றைச் சமைப்பது சாதாரண காரியமன்று. உணர்ச்சி வெள்ளம் ததும்பி நிற்கும் நிலையில்தான் அது வழிந்தோடி ஓர் உருவடையும். வால்மீகி பகவான் தெய்விகச் சரிதத்தை நாங்கள் படித்திருக்கிறோம். பல ஆண்டுகளாக அவர் தவம் புரிந்திருக்கிறார். இயற்கை அன்னையின் ரகசியங்களைப் பருகிப் பருகி உள்ளத்தில் தேக்கி வைத்துக்கொண்டார். அவர் விரிந்த உள்ளத்தில் அவை அலைமோதின. எங்கேயாவது வெளிக்கிளம்ப ஒரு வழி அகப்படுமோ என்று அவைகள் காத்துக்கொண்டிருந்தன. வேடனால் அடிபட்டுத் துடிக்கும் பறவையின் நிலையைக் கண்டதும், உள்ளத்தில் பொங்கிக் கொந்தளித்த உணர்ச்சிக் கடல் இராமாயண காவியமாகப் பரவி விட்டது. இவ்விஷயத்தை நீங்கள் அறிவீர்கள். உங்கள் மகாகவி வால்மீகியைத்தான் நாங்கள் லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் நாட்டுக் கவி எங்கள் நாட்டு அமர கவிதான்.

இலக்கியப் புலவருக்குத் தூய்மையான உள்ளம் வேண்டும், விரிந்த அறிவு வேண்டும், எதையும் ஆழ்ந்து நோக்க வேண்டும். எல்லோர் உள்ளத்திலும் நுழையக்கூடிய கற்பனைச் சக்தி வேண்டும். பிரபஞ்சத்தை அளவு கடந்த அன்போடு தழுவ வேண்டும். அன்பின் மூலந்தான் உலகத்தின் ரகசியங்களை அறிய முடியும். அன்பிலேதான்—கருணையில்தான், இராமயணம் பிறந்ததை நீங்கள் அறிவீர்கள். நாங்களும் அறிவோம்.

இல்க்கியம் படைப்பதற்காக எங்கள் உள்ளமாம் யாழின் பல்லாயிர நரம்புகளைத் தக்க நிலையில் வைத்திருக்கிறோம். ஆண்டவன் அருட் காற்று அதன் மீது வீசும் பொழுது தெய்வ கானம் எழும்; ஆதலால் எங்கள் உள்ளத்தைப் புனித

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை
நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE **Fordson** MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் போர்ட்ஸன் மேஜர் அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202—203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)

மான நிலையில் வைத்திருக்க முயலுகின்றோம். அப்பொழுதுதான் ஆண்டவன் பிரவேசிப்பான். அவன் வந்தால்தான் ஓர் ஆவேசம் எழும். அந்த ஆவேசத்தில் தான் உண்மையான இலக்கியம் பிறக்கின்றது.

அமர இலக்கிய நாட்டில் சிகரமாயுள்ளது கவிதைதான். அது கஞ்சா மயக்கத்தில் தோன்றுது; குடி வெறியில் வெடித்தெழாது; தூய்மையான உணர்ச்சி ததும்பும் உள்ளத்திலிருந்துதான் அது வழிந்தோடும். கவிதை இன்பம் ஆண்டவனைக் காணுந்தோறும் எழும் இன்பத்திற்குச் சமானமாகும்.

ஒரு கவி தவம் ஆற்றுகின்றான். அக் கவிக்குத் தன்னையே அர்ப்பணஞ் செய்துவிடுகிறான். புகழுக்காக எழுதுகிறதில்லை. பணத்துக்காகத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளமாட்டான். அவன் இயற்கையாய்ப் பாடியே தீரவேண்டும். மலர் மலர்ந்து "இதோ என் மணத்தை வெளியிடுகிறேன் பார்" என்று விளம்பரம் செய்கிறதா? அது மலர்கின்றது. மணம் தன்னளவிலே எங்கும் பரவுகின்றது. இலை தோன்றுகிறது. பறவைகள் பாட்டிசைக்கின்றன. காற்று வீசுகின்றது. மழை பெய்கின்றது. ஆறு ஓடுகின்றது; பகல் வருகின்றது. சூரியன் தன் ஆயிரம் கிரணங்களை எங்கும் பரப்புகின்றான்; இரவு வருகின்றது. சந்திரன் தன் நிலவைப் பொழிகின்றான். தாரகா கணங்கள் ஆகாயத்தைப் போர்த்துவிடுகின்றன. கவியும் பாடுகின்றான்.

எங்கள் நாட்டில் பசிப்பிணி இல்லை. வயிறு வளர்ப்பதற்காகக் காப்பியஞ் சமைப்பதில்லை; ஓவியந் தீட்டவில்லை; சிற்பங்கள் செதுக்கவில்லை; உணர்ச்சிக் கேற்றவாறு தக்க உருக் கொடுக்கின்றோம். தக்க சொல் வருகிற வரையில் காத்தே தீர்வோம்; தக்க உருவம் வருகிற வரையில் ஓவியப் புலவர்கள் தங்கள் சித்திரங்களைத் தீட்டிக்கொண்டே போவார்கள். பொருளையும் சொல்லையும் பிரிக்க முடியாதன்றோ. இலக்கியத்தின் நோக்கம், கலையின் லட்சியம் தக்க உருவந்தானே. கவிவாணர்கள் நிகரற்ற உயர்ந்த கருத்துக்களுக்குத் தாங்களே உருக்கொடுப்பார்கள். ஒருவர் கருத்தைத் தருகிறது மற்றொருவர் அதற்கு உருக் கொடுப்பது என்ற உங்களூர் தீயவழக்கம் எங்கள் நாட்டில் இல்லை. பாஷை தெரியாமல் சிறு கதை ஆசிரியர்கள் உங்கள் நாட்டில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அது எங்களுக்கு வியப்பைத்தருகின்றது. அறிவுத் துறையிலும் உலகை வஞ்சிக்கிற நிலை இருப்பதைக்கேட்க மிக வருந்துகிறோம். ஒருவர் எழுதி மற்றொருவர் பெயரை அணிந்துகொள்ளும் அயோக்கியத் தன்மைக்கு எங்கள் நாட்டில் இடங்கொடுக்க மாட்டோம். இலக்கியத்தை ஒரு பெருந் தவ ஒழுக்கமாகக் கருதுகிறோம்.

இவ்விலக்கியம் வாழ்க்கைக்கு ஒரு விமர்சனமாய் அமையலாம்; வியாக்கியானமாய்த் திகழலாம்; வாழ்க்கை இன்னல்களில் அடிபடும் மனிதர்களுக்கு ஒரு புகலிடமாய்ப் பொலிந்து தோன்றலாம். இம்மூன்று முறைகளிலும் எங்கள் இலக்கியச் சிருஷ்டிகள் காட்சி அளிக்கின்றன.

எங்களூரில் எதையும் வெளியிடச் சுதந்திரமுண்டு. புத்தகங்களைப் புறக்கணிப்பதில்லை. வராமல் தடுப்பதில்லை. ஆனால் இலக்கிய விமர்சனங் கொண்டே இழிவான புத்தகங்களைத் தலைகாட்டாமல் தடுத்துவிடுவோம். உண்மை இலக்கியத்திற்கும் போலி இலக்கியத்திற்கும் போர் நிகழும். அப்போரில் போலி இலக்கியம் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்துவிடும். மேலும் ஏதாவது ஒரு பட்டம் பெற்றுவிட்டால், எல்லாம் அறிந்துவிட்டதாக எண்ணுகிற நிலை எங்கள் நாட்டில் கிடையாது. ஒருவருக்கு ஆற்றல் இருக்கிறதா? அவர் நீண்ட காலம் தாம் வகுத்துக்கொண்டதுறையில் உழைத்திருக்கிறாரா? என்றெல்லாம் காண்போம். ஓர் அதிகாரம் வகிக்கும் தன்மையால் "எனக்கு விஞ்ஞானம் தெரியும், எனக்குக் கணிதம் தெரியும், எனக்கு வேதாந்தம் தெரியும், எனக்குச் சிறுகதை எழுதத்தெரியும், எல்லா நூல்களையும் மொழிபெயர்ப்பேன்" என்று உலகத்தை ஏமாற்றுகிற மனிதனை எங்கள் நாட்டில் வளரவிடமாட்டோம். முதல்முதலாகக் கவனிப்பது உண்மையே. ஒரு சிருஷ்டி இன்பம் தருகிறதா? அது உண்மைக்குப் பொருத்தமா? சமுதாயத்தின் கலைப் பண்பு அதனால் வளர்கின்

றதா? அறிவு விரிகின்றதா? அழகுணர்ச்சி ஓங்குகின்றதா? என்ற கேள்விகளை எழுப்புவோம். காதல் காதல் என்று சொல்லி ஆபாசக் கதைகளைக் குப்பைகள் போலக் கொட்டி வயிறு வளர்க்கும் திருட்டு இலக்கிய வியாபாரிகள் எங்கள் நாட்டில் தழைக்க முடியாது. பத்திரிகைகள் மாந்தர் மனப்பண்பை வளர்க்கக் கூடிய நிலையில் நடத்தி வருகின்றோம். இலக்கியம் ஒரு பொழுது போக்குமட்டு மன்று; வாழ்க்கையின் ரகசியங்களை, மர்மங்களை, ரசங்களை, நுட்பங்களை, ஆத்ம ஒளியை அப்படியே அள்ளித்தரு கின்ற வற்றாத பாத்திரம்.

எங்கள் நாடகசாலைகள் ஆண்டவன் வீற்றிருக்கும் கோயில்களைக் காட்டிலும் புனிதமாயிக்கின்றன என்றால் வேறு துறைகளைப் பற்றி நீங்களே சிந்தித்துப் பாருங்கள். தங்கள் நாட்டு இலக்கிய நிலையை எங்களுக்குக் கூறவேண்டும்.

பிழைப்புக்குப் போன இடத்தில்...

கஜமுகன்

பாம்பாட்டி: அப்பாடி. உஸ்......உம்......

பாம்பாட்டியின் மனைவி: ஏன் இப்படி சோர்ந்து வராறு?.........என்னுங்க என்ன ஆயிடுச்சு?

பா: ஒண்ணும் ஆவலே. வவுறுதான் காயப் போவுது.

பா. ம: ஏனுங்க? ஒண்ணும் கிடைக்கல் லையா?

பா: வித்தை யிருக்குமட்டுந் தானே வியா பகமெல்லாம்.

பா. ம: வித்தைக்கென்ன வந்திடுச்சாம்?

பா: எங்கையிலே இருந்தால்லே எது ஞச்சம் வரதுக்கு?

பா. ம: ஏன் இப்படி பேசுறீங்க! உடம் புக்குச் சரியில்லையா?

பா: பாம்புங்களுக்குத்தான் இன்னக்கி என்னமோ சனியன் பிடுச்சுக்கிட்டுது.

பா. ம: விரியன் கூட நல்லா ஆடல்லையா? நல்லானுக்கு ஒண்ணுமே வராதே! காட்டேறி ரெண்டு வருசமா நம்ப கிட்டேயே இருக் குதே!

பா: அதென்னமோ இன்னக்கி எல்லாத் துக்கும் என்ன எளவோ வந்திடுச்சு. தலை முறை தலைமுறையா இந்த பாம்பாட்டித் தொழில்லே எங்க குடும்பம் இருந்துகிட்டு வருது. ஒரு நாள்கூட என் மாதிரி வெறுங் கையோடே திரும்பி யாரும் வந்ததாகக் கேள்விப்பட்டதேயில்லே!

பா. ம: எல்லாம் நம்ப போதாத காலம் தான்! போங்க, முழுகிட்டு வாங்க. நேத்துக் கொணுந்த அரிசி கொஞ்சம் பாக்கி யிருக்கு. சோருக்கிப் போடறேன்.

[சிறிது நேரம் சென்ற பின்]

பா: மூக்காயி!

பா. ம: என்னுங்க............

பா: எனக்கென்னமோ இந்த ஊரு கட் டோட பிடிக்கல்லே. நம்ம தொழிலுக்கு ஒரே ஊரிலே இருந்தா கட்டுபிடி ஆவாது. என் வித்தையெல்லாம் இந்த ஊராங்களுக்கு புளிச்சுப் போச்சு. என் மகுடிச் சத்தம் கேட்டதும் எல்லாம் கதவை மூடிக்கிருங்க. இன்னம் கொஞ்ச நாள் நாம் இந்த ஊரிலே இருந்தா பட்டினியால் சாவ வேண்டியது தான்.

பா. ம: அப்ப எங்கே போறது?

பா: எங்கேயாவது ஊர் ஊராகப் போக லாம்னு தோணுது.

பா. ம: போனுப் போவறது! எப்ப கௌம்பலாம்............

பா: நாளைக்கு வெள்ளென கௌம்பலாம்.

பா. ம: நான் ஏற்பாடெல்லாம் செய்ய றேன்.

காட்சி 2.

[மற்ருெரு கிராமம். பாம்பாட்டியும், பாம்பாட்டி மனைவியும் அங்கு வருகிருர் கள். பாம்பாட்டி மகுடி ஊதுகிறுன்.]

கிராம நாட்டாண்மைக்காரர்: ஐயோ, ஆபத்து வந்துடுச்சே. அந்த மகுடியை நிறுத்தச் சொல்லுடா.

வேலைக்காரன்: என்ன எஜமான்? அவனை நிறுத்தச் சொல்ல நமக்கு என்ன அதிகாரம்?

நாட்: சீ! மடையா! சொன்னதைச் செய் யடா! ஏய் பாம்பாட்டி......... உன்னைத் தான்......... வாசிப்பை நிறுத்தடா!

பா: ஏன் எஜமான்?

நாட்: ஏனு? நீ எந்த ஊர்?

பா: எல்லாம் என் ஊருதாங்க.

நா: சம்பிரதாயமாத்தான் பேசறே. இந்த ஊர் சட்டம் தெரியுமா?

பா: எனக்கு சட்ட திட்டமெல்லாம் என் னுங்க தெரியும்?

நா: இந்த ஊரிலே மகுடி வாசிக்கக் கூடாது.

பா: என் பிழைப்பு........?

நா: **உன் பிழைப்பிலே மண்ணை வெட்டிப் போடு**

பா. ம: அதுனாலே உங்களுக்கு லாபம் உண்டா சாமி?

பா: மூக்காயி, பேசாம இரு. சாமி! நான் வெளியூரிலே இருந்து வாரேன். மகுடி வாசிக்காமே என் பாம்பு ஆடாது. பாம்பு ஆடினாத் தான் உங்க மனசெல்லாம் ஆடி எதுனாச்சும் கொடுப்பீங்க...........

நாட்: உன் ஆட்டமும் பாட்டமும் இந்த ஊரிலேயே ஒண்ணும் கூடாது. மீறினாயோ உன் கதி அதோகதிதான்.

பா: நாங்க நாளைக்கு வேறு எங்கனாச்சும் போயிடறோம். இப்ப பொழுது போயிடும். இன்னிக்கிரவு இந்த ஊரிலேதான் தங்கியாவணும். காலையிலேருந்து நடந்து வந்திருக்கோம். பசி காதடைக்குது. எதுனாச்சும் கொடுத்திகன்னா வவுத்த நிரப்பிக்கிடுவோம்; மறுபடியும் வாசிக்கல்லே.

நாட்: சரி இரு. மகுடிச் சத்தம் மாத்திரம் கேட்கக்கூடாது.

[உள்ளே போகிறார்]

பா. ம: நீங்க என்ன இப்படிபிச்சை எடுக்க ஆரம்பிச்சுட்டீங்க?

பா: வேறென்ன செய்யறதாம்! மகுடிகூட வாசிக்கக் கூடாதுன்னு ஒரு ஊரிலே சட்டமிருந்தா என்ன சொல்றது?

[நாட்டாண்மைக்காரர் சாப்பாட்டுடன் வருகிறார்]

நா: இந்தாப்பா. இதைச் சாப்பிட்டுவிட்டுப் போ. ராத்திரி எங்கே உறங்குவே?

பா: ஊர் கோடியிலே ஒரு பாழ் மண்டபம் கிடக்குதுல்லே. அங்கேதான் படுக்கணும்.

நா: சரி.

காட்சி 3

[இரவு பத்து மணி. பாம்பாட்டியும், அவன் மனைவியும் பாழ் மண்டபத்தில் அயர்ந்து தூங்குகிறார்கள். நாட்டாண்மைக்காரர் தலைவிரிகோலமாக ஓடி வருகிறார்].

நாட்: [இரைப்புடன்] :- பாம்பாட்டி...... ஏய் பாம்பாட்டி!

பா. ம: உஸ்... யாரய்யா?

நாட்: கொஞ்சம் அவனை உஸ்ப்பேன்.

பா. ம: யாருங்க...... அடடா! நீங்களா... என்ன விசயமுங்க......!

நா: என் மவனை பாம்பு கடிச்சுடுச்சு. அவனை எழுப்பேன். பாம்போட பழகறவன். அவனுக்கு ஏதாவது வைத்தியம் தெரிஞ்சிருக்கும்......ஏய் பாம்பாட்டி......

பா: (திடுக்கிட்டு எழுந்து) என்ன எஜமான்......

நா: பாம்புக்கடிக்கு ஏதாவது மருந்து தெரியுமா?

பா: தெரியுமுங்க. யாரைப் பாம்பு கடிச்சுபுடுச்சு? மூக்காயி......என் பையை எடு...... வாங்க போகலாம்.

[நாட்டாண்மைக்காரர் பையன் பாம்பு கடித்துக் கிடக்கிறான். அவனைச் சுற்றிலும் ஒரே கூட்டம்]

நா: எல்லாரும் தள்ளிப் போங்க. பாம்பாட்டி! இதோ கிடக்கிறான் என் மகன். அவனை எப்படியாவது காப்பாத்தணும்.

கூட்டத்தில் ஒருவர்: இவனுக்கென்ன தெரியும்? பாம்பு பிடிக்கிறவனுக்கு எங்கேயாவது வைத்தியம் தெரியுமா?

மற்றொரு ஆசாமி: என்னமோ அதைத் தான் பார்ப்போமே! பாம்புக்களோட பழகறவன் தற்காப்பில்லாமல் பழகுவானா?

[பாம்பாட்டி பையனை நன்றாகப் பரிசோதித்து விட்டு, தன் பையிலிருந்து ஏதோ மூலிகையை எடுத்து, பாம்பு கடித்த இடத்தில் தேய்க்கிறான். பத்து நிமிஷங்கள் ஏதேதோ செய்கிறான். பாம்பு கடித்த பையன் தேகம் அசைகிறது]

பா: சாமி இனிமே பயமில்லே. குழந்தை பிழைச்சுக்கிடும்.

நா: என் வயிற்றில் பாலை வார்த்தாய்! நீ நல்லா இருக்கணும். நீ ஒரு தெய்வந்தான். என் குலத்துக்கே விளக்கேத்தி வைத்தாய். உன்னை அநியாயமாய்ச் சாயங்காலம் கோபித்துக் கொண்டு விட்டேன். நீ என்ன வேணுமானாலும் கேள் தருகிறேன்.

பா: ஏதோ ஏழையால் முடிஞ்ச காரியத்தை செஞ்சேன். இதுக்காக உங்ககிட்ட ஒண்ணும் வாங்கிக்க மாட்டேனுங்க...

மூக்காயி: சாமி! நான் ஒண்ணு கேக்கலாமா?

நா: கேளம்மா...

மூக்: இந்த ஊரிலே ஏன் மகுடி வாசிக்கப் படாதுன்னிங்க?

நா: இங்கே பாம்பு நிறைய இருக்கு. மகுடி சத்தத்தைக் கேட்டாப் போதும்; அதன் நடமாட்டம் ஜாஸ்தியாயிடும்.

மூக்: மகுடி வாசிச்சு, நாங்க எல்லாப்பாம்பையும் பிடிச்சுக்கிட்டுப் போயிடறோமே!

நாட்: செய்யலாம். ஆனால். மகுடிச் சத்தத்தைக் கேட்டு மயங்கி வரும்போது யாரையாவது கடிச்சுட்டுதுன்னு......?

மூக்: அதைப் பற்றி கவலைப் படாதீங்க. ஒரு உயிருக்கும் ஆபத்தில்லாம புடிச்சுடறோம்.

நா: என்னப்பா பாம்பாட்டி நீ என்ன சொல்றே.

பா: அவ சொன்னு சரிதானுங்க. கஞ்சிக்கு மாத்திரம் வழி பண்ணினு, இந்த ஊரிலே பாம்பே இல்லாமே செஞ்சுடறேனுங்க.

நா: கஞ்சிக்கு என்ன பிரமாதம். எனக்குச் செஞ்ச உபகாரத்துக்கு, உனக்கு மாஸக் கணக்கிலே விருந்து சாப்பாடு போடக்கூடத் தயார்.

காட்சி 4

[மறு நாள் இரவு, பாம்பாட்டியும், அவன், மனைவியும் தெருக்கோடியில் ஒரு மனையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்]

பா: மூக்காயி! நல்ல வேலையைப் போய் ஏத்துக்கிட்டே! பாம்பு பிடிச்சு பிடிச்சு மாளாது போலல்ல இருக்கு? வந்துக்கிட்டேல்ல இருக்கு?

மூக்: ஆமா, நான்கூட இவ்வளவு இருக்குமுன்னு நினைக்கல்லே. இவ்வளவு பாம்புங்களுக்கு மத்தியிலே எப்படித்தான் இந்த ஊர் சனங்க இருக்காங்களோ தெரியல்லே?

[சரசர வென்று சப்தம் கேட்கிறது]

பா: அது என்ன சத்தம்?

மூக்: ஒண்ணுமில்லிங்க. கூடைக்குள்ளே நம்ப விரியனும் நல்லானும் விளையாடுது......

பா: அதுக இப்படி சத்தம் போடாது. கவனிச்சுக் கேளு.

[ஐந்து தலை நாகம் ஒன்று மூக்காயியை முழு உக்ரத்துடன் தீண்டுகிறது]

மூக்: ஐயோ! என்னைக் கடிச்சுப்பிடிச்சே!

பா: பாம்பா! மூக்காயி! என்ன செய்வேன் கடவுளே. லைட் கூட இல்லையே! இவளை வுட்டுட்டு எப்படிப் போவேன்......மூக்காயி......... பேச்சு மூச்சே காணுமே!

[நாட்டாண்மைக்காரர் வீட்டுக்கு ஓடுகிறான்.]

பா: ஐயா! நாட்டாமகார எஜமான்!

நா: யாரது?

பா: பாம்பாட்டிங்க. ஒரு விளக்கு இருந்தா கொடுங்க.

நா: ஏன் என்ன ஆச்சு?

பா: என் பெண்டாட்டியை.................. பாம்பு...............

நா: அடப்பாவி! இந்தா லைட்டு............ ஓடு............நானும் வாரேன்.

[இருவரும் ஓடுகிறார்கள்.]

பா: சாமி! கொஞ்சம் லைட்டை தூக்கிப் பிடிங்க.........

நா: என்னப்பா.. ... பிழைப்பாளா?

பா: ....

நா: ஏன் அப்படி முழிக்கிறாய்...... சட்டுனு உன் வைத்தியத்தைப் பாரேன்......உம்......

பா: உயிரு இருந்தால்ல சாமி மூலிகை பிடிக்கும். உயிரு போயிடுச்சு சாமி! பாம்பாட்டி பெண்சாதி பாம்பு கடிச்சா சாவணும்! அட கடவுளே!

[கண்ணீர் விட்டுக் கதறுகிறான்.]

அருணகிரி

"ஸ்ரீ. வே."

"சுற்றி நில்லாதே போ, பகையே
துள்ளி வருகுது வேல்."

என்று பாரதியார் ஆறுமுகனைத் துணைக்குக் கூப்பிடுகிறார். குமரன் கூப்பிட்டவனுக்கு எளிதில் வருபவன். அன்புள்ளத்தின் அடிமை.

அவனைப் போற்றி அனுபூதியும் அந்தாதியும், அலங்காரமும், திருப்புகழும் பாடி, முக்தியடைந்த முனிவர் நம் அருணகிரி.

அருணகிரி சிறு வயதில் சிற்றின்பப் பிரியராயிருந்து பாபக்ருத்தியங்களையே தமக்குரிய சொத்தாகப் பெற்று, குஷ்ட வியாதியில் உழலலுற்றார். அத்தனை பெரிய வியாதியில் அவதிப்பட்ட அவர், தம்மை மன்னித்து அருள, பவ ரோக வைத்யனை வேண்டினார்.

அடியார்க்கு எளிய பெருமாளான முருகன் அவரைத் தம் பக்தனாகப் பெற்று, அருணகிரியை அகிலம் வணங்கும் முனிவனாக ஆக்கி, முக்தியளித்தார்.

அருணகிரியார் கருணை வள்ளல். அதை வில்லிபுத்தூரார்,

"காசுக்குக் கம்பன்
கருணைக் கருணகிரி"

என்ற பாவிலே விளக்குகிறார்.

இவர் சொல்லை ஸ்வர்ணம் கொடுத்து வாங்குவது இயலாதது. நூல்களின் பெருமையை எழுத நூல் கிடையாது.

"வாக்கிற் கருணகிரி
வாதவூரார் கனிவில்"

என்று இவருடைய வாக்குப் பிரபாவத்தைக் குறித்து கூறுவர் அறிஞர்.

இவர் இயற்றியவைகள்,

"அந்தாதி யில்லா இறைவனுக்
கந்தாதியன்றுரைத்தும்
நந்தா வகுப் பலங்கார மவற்கே
நனி புனைந்தும்
முந்தா தரவிலவன் புகழ் பூதியு
முற்றுஞ் சொன்ன
எந்தாய் அருணகிரி நாத என்னை நீ
என்றருளே."

என்ற செய்யுளில் அடங்கி அவரைப் போற்றும்.

அருணகிரி நாதர் கூறிய திருப்புகழ் தமிழிலே சொல் நயமும், பண்ணிசையும் கூடிப் பக்தி பரவசமாக்கக் கூடிய பாக்கள். அருணகிரியார் அன்பில்தான் ஆண்டவன், ஆறுமுகன் என்று சொல்ல விரும்புகிறார்,

"விரகற நோக்கியு முருகியும் வாழ்த்
தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்
மேல்"

விரகம் ஒழிந்த பின்னர் அன்பு ஆசை, காமம், காதல், விரகம் ஆகிய நால்வகை உணர்ச்சியும் உன்னையே நோக்கி உருகி வழிபடும்போது அன்புச்சுனை ஊற்று எடுத்துப் பெருகுகிறது. அதில்தான் ஆண்டவன் உருவாகின்றான்.

இம்முனிவர் இளமையில் பெண்ணுலகைக் காமவுலகம் என எண்ணி, பெண்மையைச் சுயநலத்திற்குப் பயன்படுத்தி நரகப் படுகுழியில் வீழ்ந்துழலலுற்றார். அவர் தம் வாயிலாகவே சொல்கின்றார்,

"............மங்கையோரால்
துன்பமுடங்க வழிநோய்............"
"மாவலி வியாதி குன்மமொடு காசம்"
"எனையடைந்த குட்டம் வினை மிகுந்த
பித்தம்"

என்று தாம் அவதியுற்ற வாழ்வைக்கூறி, "பரத்தையர்மோகத்திலே"யும், கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலும், விலை மாதர், விரகுடன் நாறுயிர மனமுடை பாவிகளுடனும் தாம் நடத்திய அடிநாட்கள் செய்த பிழையை நீக்கி, கந்தன் கதி பெற்றிட நோக்கிய பார்வையை மறவாமலிருக்க மயிலில் வந்து முக்திதர, பாகு கனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளனை வேண்டுகிறார்.

அவர் தம் பிற்கால வாழ்க்கையில், தம்மைப் போன்று மற்றோர்கள் கெடாமலிருக்க வேலவனை வேண்டுகின்றார்:

"மங்கையர் சுகத்தை வெகு
இங்கித மெனுற்ற மனம்—உன்றனை
நினைத்தமைய அருள்வாயே!"

அருணகிரி நாதர் இயற்றிய அலங்காரம் தமிழுக்கும் தெய்வத்துக்குமே அலங்க்ருதமாக அமையப் பெற்றிருக்கிறது.

''மொய்தாரணி குழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையுமங்கு வாழவைப்போன்''

என அலங்காரத்தில் கூறுகிருர் முருகனுடைய குணசௌந்தர்யம்.

மற்றுமொன்றில் முருகனை நினைந்தவர் முடியாப் பிறவிக் கடலில் மூழ்கித் துன்பப் பட்டு உழலார் எனக் கூறுகிருர்.

''முடியாப் பிறவிக் கடலிற் புகார்
முழுதுங்கெடுக்கு
மிடியாற்படியில் விதனப்படார்
வெற்றிவேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்.........''

சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் சரணத்திலே ஓடுங்கருத்தையிருத்த,

''படிக்கின்றிலை பழநித்திருநாமம்
படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை முருகா வென்கிலை
முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை........................''

என வருந்தி, நெஞ்சமே இனி தஞ்சமடைவது எப்படி? என்று கேட்கும் நம்மை ஒருகால் முருகா! பரமா! குமரா! உயிர் காவென்று ஓதச் சொல்லி திருக்கைவேல் அழகிய பெருமாள் கனக மயிலில் அழகு பொழிய, கருணை மருவி வருவான் எனத் திட்டமாகப் பகர்கிருர்.

* * *

சுனையோடருவித் துறையோடு பசுந்தினையோடிதனேடு திரியும் சுந்தரர் மகனை வழிபட அனுபூதியெனும் அம்ருதத்தை அளித்தார் அருணகிரி.

''அனுபூதி ஐம்பதுமே யாருயிர் பேரின்ப அனுபூதி நல்குமணி'' என்பது அனுபூதிச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

''ஆசா நிகளந் துகளாயினபின்
பேசா வநுபூதி பிறந்ததுவே''

என்பது அநுபூதி நிலை.

''யாமோதிய கல்வியுமெம்மறிவுந்
தாமே பெற வேலவர் தந்ததனல்''

என்று அடக்கத்தை நினைவுறுத்தி,

''புரிவாய் மனனே பொறையா
மறிவால்
அரிவாயடியோடு மகந்தையையே.''

எனஅகந்தைப் பேயைத் துரத்தி,

''குருவாய் வருவா யருள்வாய்
குகனே''

என்ற பிரார்த்தனையுடன் கந்தரநுபூதி பெற்று, கந்தரநுபூதி சொன்ன தனிப் பெருமை அருணகிரிக்கே உரியது.

* * *

நம் முனிவர் முருகனிடம் கொண்ட பக்தி அளவிடற்பாலதன்று. முருகன் அருணகிரி ஏவும் வேலைகளைச் செய்ய எந்நேரமும் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார். ஒரு சமயம் சம்பந்தாண்டானை வாதில் வெல்வதாகக் கூறி, முருகக் கடவுளைச் சந்தைச் சபைதனில் வர,

''மயிலுமாடி நீயாடி வரவேணும்''

எனக் கட்டளையிடுகிருர் கந்தப்பெருமானுக்கு. அவரும் அக்கட்டளைக் கிணங்க ப்ரபுட தேவமாராஜன் சபையில் தோன்றினர். என்னே பெருமை!

பழநியப்பனைப் பாடிய புலவன் பெருமையுற யார் தடுக்க முடியும்.

''உலகிற் பேரருணகிரி திருப்புகழ்
கண்டு''

என்ற அடி அருணகிரியையும் அவர் புகழ்ந்த சொல் மாலையையும் போற்றுகிறது.

அருணகிரி நாதனைத் தமிழ் இலக்கியமும் வணங்குதல் உரியது. அவரமைத்த சொற்கள்ஆறுமுகன் அருளியவை தானே. தமிழ்த் தெய்வம் தனக்குச் சூட்டிக் கொண்ட பாமாலைதானே திருப்புகழ்.

அருணகிரியார் மகிழ்ந்தோதின பாடல் தமிழ் மணம் கமழ் கவிதை.

''அருணையங்கிரி நாதன் தமிழ்
மணமும்''

எனச் சொல்லி தமிழ்க் கவிதைப் பிராட்டிக்கு மணம் வீசும் மலராகக் கொண்டு அர்ச்சனை செய்ததைக் கூறுவர்.

பொய்யா மொழியையும் புகழ் கொண்ட அருணகிரி, நம் புண்ணியத்தின் பயன். அன்னுர் அருளிச் செய்த அநுபூதி அகந்தோறும் சாற்றப்பட்டு அன்னுரையும் எல்லாரையும் நன்னுராக்கி, சுகம் கொடுத்து வாழ்வு தர, நீலச் சிகண்டியிலேறும் எம்பிரானை வணங்குவோமாக. அவனும் கோலக் குறத்தியுடன் வந்து அருள் புரியட்டும்.

முருகா அன்பர் விருந்தே சரணம்!
முருகா அருண கிரியே சரணம்!!

வேலன்

கி. ஸந்தானம்

"ஓ ரிக்ஷா! என்ன தூங்கி விழுகிறாயா? கூப்பிடறது காதிலே விழலே?"

மாலை மங்கி, மயங்கிக் கடைசியில் இருளில் கரைந்து விட்டது. நகரெங்கும் இருட் போர்வை கவிந்திருந்த போதிலும் கொசு வலைக்குள் புகுந்துவிட்ட மசகம் பிடுங்குவது போல வாடைக் காற்று சில்லென்று வீசிக் கடித்தது. தெருவிலே மினுக்கு மினுக்கு என்று எரிந்த விளக்குகளும் இருட்டை எடுத்துக் காட்டின. பனிக் குல்லாயும் 'ஸ்வெட்டரு'மாக ஜனங்கள் அவரவர்கள் வீடு நோக்கி விரைந்தனர்.

தன் வண்டியின் விளிம்பில் சுருட்டி முடக்கிக்கொண்டு அவன் படுத்திருந்தான். அவன் விழிகள் எங்கோ சென்று நிலைத்திருந்தன. அவன் உள்ளத்தில் பெரும் புயல் அடித்துக் கொண்டிருந்தது.

தங்கு தடையின்றி அவன் தன் வண்டியை எங்கும் இழுத்துச் சென்றிருக்கிறான். நெடுக்கில் வளர்ந்தவர்களும் குறுக்கில் வளர்ந்தவர்களும் அவன் வண்டியை அலங்கரித்திருக்கிறார்கள். எவ்வளவு பாரத்தையும் அவன் லக்ஷியம் செய்வதில்லை. குறுக்குச் சட்டத்தின் மேல் தன் வலக்கையும் இடப்பக்கத்துச் சட்டத்தின் மேல் தன் இடக்கையுமாக ஒரு முக்கு முக்கினால் சக்கரம் உருள ஆரம்பித்துவிடும். அப்புறம் தங்கு தடையின்றி ஒரே ஓட்டம்தான். ஆனால் அவன் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்ட அவன் வகையறியவில்லை. அதில்தான் எவ்வளவு சிக்கல்கள் சிடுக்குகள்! வாழைத்தண்டின் நூல்கள் சுற்றிக்கொண்டதுபோல!

வீராயி இருந்த வரையில் அவ்வப்போது அவன் வாழ்க்கையின் உருளைக்கு மசையிட்டு வந்தாள். ஆனாலும் புதிதாக மையிட்டால், சகடம் நன்றாய் உருண்டாலும் எண்ணெய் கொஞ்சம் சிந்திச் சிதறுமல்லவா? அதுபோல் தான் அவன் வாழ்க்கையின் ஆரம்பத்தில் இருந்தது.

நாகரிகம் உச்சநிலை அடைந்திருப்பதாகச் சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில்தானே நாம் பல விசித்திரங்களைக் காண்கிறோம்—சோற்றுப் பங்கீடு முதல் சுதந்திரப் பறிமுதல் வரை, ஆறறிவு படைத்த ஒருவனை வண்டியில் வைத்து மற்றோர் ஆறறிவு படைத்தவன் இழுப்ப தென்றால்—இந்த மானமற்ற உலகை மறக்க அவன் கள்ளின் உதவியைத் தேடினானென்றால் அதில் என்ன தப்பென்று அவனுக்கு விளங்கியதில்லை.

ஆனால் வீராயி எல்லாம் அறிவாள். நகரின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை அவன் சுற்றித் திரிந்தபோதிலும் மாலை ஐந்து மணிக்கு அவன் அந்தச் சந்தின் முனைக்கு வந்து விடுவான் என்பது அவளுக்குத் தெரியும். அப்புறம்தான் அவன், தன்னையும் உலகையும் மறக்க வைக்கும் அந்த 'மருந்தை'த் தேடிப்போவான்.

அந்தச் சந்தின் மூலையில் அவனுக்கு என்ன கவர்ச்சி? அங்கிருந்து பார்த்தால் கோவில் கோபுரம் தெரியும். கதிரவனின் செங்கிரணங்கள்பட்டு அதன்மேலுள்ள கலசங்கள் தகத்தகாயமாய் மின்னும். வண்டிப் பெட்டியிலிருந்து பையை எடுத்து விபூதியை நெற்றியில் இடுவான். கோபுரத்தை நோக்கி ஒரு கும்பிடு போடுவான். அதே சமயம் அவன் வீட்டுத் தெய்வம் வீராயி பிரசன்னமாவாள் சிரித்த முகத்தோடு பல்லாயும் கையுமாய்.

"வந்துட்டியா வீராயி" என்று சொல்லி அவன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரிப்பான். அவளிடத்தில் என்ன மாயசக்திதான் இருந்ததோ? தன் முந்தானையால் அவன் முகவேர்வையைத் துடைத்துவிட்டு, பல்லாயை அவன் கையில் கொடுப்பாள் அவள். அந்தக் கருப்புட்டி நீரை அவன் நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு குடிப்பான். அதற்கு ருசியளித்தது கருப்புட்டியல்ல, அவள் அன்பு தான் என்று அவனுக்குத் தெரியாதா? வெற்றிலையும் பாக்கும் அவன் கையில் அளித்துவிட்டு, திருநீற்றுப் பையை—ஆம், அதில்தான் அன்றாடம் 'சம்பாரிச்ச' துட்டு வைத்திருப்பான்—எடுத்துக்கொண்டு அவள் போவாள். ஆனால் வெகுநேரம் வரையில் அவள் உருவம் அவன் கண்ணினின்றும் மறையாது, பரந்த முகம், காலணா அகலத்திற்குமேல் நெற்றியில் குங்கு

மக்கோலம், குறுகுறு என்ற சுழன்ற கண்கள், எல்லாவற்றிற்கும் மேலாக அன்பின் ஜீவனைக் காட்டிய அந்தச் சிரிப்பு. இவை அவன் மனத்தகத்தேபாயும். சோறு ஆக்கறேன் சுருக்க வந்திடுங்க என்று அவள் சொல்லிய சொல் காதிலே ஒலிக்கும். இந்தப் பெண் தெய்வத்தின் மாய சக்தியின்முன் அவன் என்ன செய்ய முடியும்? சிற்சில தடவைகள் அவன் முறண்டிருக்கிருன் என்பது உண்மைதான். ஆனல் முடிவில் அவள்தான் ஜயித்தாள். அவன் குடிப்பழக்கமும் ஒழிந்துவிட்டது. குடும்பமும் சீராக நடந்தது. இப்பொழுது அவனுக்கு வீராயிதான் உண்ணும் சோறும், பருகுநீரும், தின்னும் வெற்றிலேயும்! எல்லாம் அவள் மயம்!

இரவு வீடு திரும்பியதும் அன்ருடம் அவனுக்கு நேர்ந்த அனுபவங்களையெல்லாம் அவளுக்குச் சொல்லுவான். "இன்னிக்கு பாரு வீராயி! ஒரு செட்டியாரு வந்தாரு தொந்தியை சரிச்சுக்கிட்டு. இன்னமே நமக்கு குடிசை வாணும். நாம் இரண்டுபேருமே அவர் வவுத்துக்குள்ளே குடித்தனம் போட்டுடலாம்" என்று சொல்லி விழுந்து விழுந்து சிரிப்பான். அவளும் நகைப்பாள். இருவர் குரலும் ஒன்றுபட்டு இழையும். ஆனல் இந்த இன்ப வாழ்க்கை வெகுநாள் நீடித்திருக்கவில்லே.

இந்த ஏழைகளைத்தேடி எங்கிருந்துதான் நோய் நொடிகள் வருகின்றனவோ. ஒரே நாள் காய்ச்சல், அவ்வளவுதான். தன் கைக் குழந்தையை விட்டுவிட்டு, வேலனிடமும் சொல்லிக்கொள்ளாமல் வீராயி போய்விட்டாள். ஏழைவேலனைப்பற்றி என்ன சொல்ல?

"அடி வீராயி! ஊரிலுள்ளவங்களை என் வண்டியிலே வச்சுச் சுமந்தேன். உன்னைச் சுமக்க நான் ஆள் தேட வச்சுட்டிலே......... கூரை ஒளுகுதுன்னு செட்டியார் வவுத்திலே இடம் தேடிக்கிட்டியா. உன் குஞ்சையும் என்னையும் உட்டுட்டியே. எங்களுக்கும் நல்ல இடமாய் ஒதுக்கி வை..............."

வேலன் பிரலாபத்திற்கு வீராயி செவி சாய்த்தாளா?

குழந்தையும் இரண்டு மாதத்தில் தாயைத் தேடிக் கொண்டு போய் விட்டது.

வேலன் இருந்தான் துக்கமும் தானுமாய். இப்பரந்த உலகத்திலே அவன் கதையை "ம்" என்று கேட்பார்கூட ஒருவருமில்லே.

அவள் இறந்து ஒரு வருடம் ஆய்விட்டது. இன்று 'தெவஷ' தினம்.

'வீராயி! வந்துட்டியா? இதோ கொஞ்சம் இப்படிக் குந்து. சோறு ஆக்கிப் படைக்கிறேன். இதோ பாரு வெல்லம் வாங்கியாந்திருக்கேன் பாயாசம் வைக்க. அட! ஏன் இப்படி துறுதுறுன்னு துள்ளறே. கொஞ்சம் குந்து. உன் கிட்ட இல்லாட்டி யார் கிட்ட சொல்லுவேன் என் கதையை......அண்ணக்கிப்பாரு, வளக்கமா வாறவ சந்து முனைக்கு வல்லே. வீட்டுக்கு ஓடியாந்து பாத்தா, மூலையிலே முடக்கிக்கிட்டு கிடக்கிரு. புள்ளே ஒரு பக்கத்திலே கத்துது. மழையோ கொட்டுது. குச்சு முளுதும் ஒளுகி ஒளுகி நிற்க இடமில்லே. உடம்பைத் தொட்டா நெருப்புக் கணக்கா இக்குது. கஞ்சிகாய்ச்ச அடுப்பே வாணும் என்னு செய்ய! வீராயி! என்னங்கறேன் "ம்" இன்னு கேக்ககாணும்? நீ கூட கேக்கமாட்டியா? வீராயி!......

இடியிடி யென்று சிரிப்புச் சத்தம் கேட்கிறது. வேலனுக்குச் சுயஞாபகம் வருகிறது.

''என்னப்பா ரிக்ஷா!' நாலுநாழியாய்க் கூப்பிடுகிறேன். என்னமோ வீராயியைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கின்ருயே நீ? உன் குடிசை வாசலிலே அவ காத்துக்கொண்டிருக்கிருள். என்னை என் வீட்டில் விட்டுவிட்டு நீ உன் வீராயியைத் தேடிப்போ" என்ருர் வந்த மனிதர் வண்டிக்குள் ஏறிக்கொண்டே. வேலன் சிரித்தான் ஒரு சோகச் சிரிப்பு!

மரியாதை

டி. சேஷாத்திரி

ஸுலோசனாவைத் தாங்கி, சாய்வு நாற்காலி பெருமை அடைந்து கொண்டிருந்தது. தன் அழகிய கைகளில் ஏறும் பாக்கியத்தைப் பெற்றிருந்த அந்தப் பத்திரிகையை அவள் படித்துக்கொண்டிருந்தாள். எதிரே கட்டிலில் படுத்திருந்த அவள் தமையன் ராஜீவி 'ஸோச்சி, மாப்பிள்ளைக்குப் பழம் கொண்டு போய்க் கொடுத்தாயோ?' என்று கேட்டான்.

ஸுலோசனாவின் உதடுகள் மட்டும் அசைந்தன. "இல்லையே" என்று சொன்ன அவள், சற்று உரத்த குரலில், 'படுத்துக்கொள்ளும் போது மறந்து போகாமல் பழம் சாப்பிடுங்கள்' என்று சொன்னாள். அது முன்கட்டு அறையில் இருந்த அவள் கணவனுக்குப் பிறப்பிக்கப்பட்ட தாக்கீது. அதை அழுத்தம் செய்ய விருப்பியவள் போல...... 'என்ன?' என்றும் ஒரு கேள்வியைக் கேட்டாள்.

ராஜீவி வெடுக்கென்று எழுந்தான். 'நீ, ஏன் அண்ணா எழுந்திருக்கிறாய்?' என்று கேட்டவளுக்குப் பதில் சொல்லாமல் 'பழம் எங்கே வைத்திருக்கிறாய்?' என்று கேட்டான். 'சரிதான் அண்ணா, என்னைவிட உனக்கு மாப்பிள்ளையிடம் ரொம்ப அக்கரையோ? படுத்துக்கோ அண்ணா, நேற்று ராத்திரி முழுவதும் கண் முழிச்சது' என்று ஸுலோசனா அன்பாய் அதட்டினாள்.

ராஜீவிக்கு இது பிடிக்க வில்லை. அவனும் ஆண் பிள்ளையல்லவா? 'நீ சொல்லேன், நான் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்' என்று சொல்லும்போதே வெளியறையிலிருந்து அவர் வெளியேறி வந்து விட்டார். 'நீங்க இரண்டு பேரும் அலட்டிக் கொள்ளாதீர்கள்! சும்மா இருங்கள்' என்று சொல்லிக் கொண்டே வந்த அவர், சமையலறைக்குச் சென்று வலை பீரோவைத் திறந்து ஒரு ஆரஞ்சையும் ஒரு ஆப்பிளையும் எடுத்து வந்தார்.

சுளையை விட்டுத் தன்னைப் பிரிப்பதற்குப் புகைவது போல் ஒரு திராவகம் வெளியேறிக் கண்ணில் வீச அவர் ஆரஞ்சை உரித்தார். இரண்டு சுளைகளை ராஜீவியிடம் கொடுத்தார். பிறகு நாற்காலிப் பக்கம் சென்று இரண்டு சுளைகளை ஸுலோசனாவிடம் கொடுத்தார். ஸுலோசனாவும் கொஞ்சம்கூட மரியாதை காட்டாமல் படுத்தபடியே கையை நீட்டி அதை வாங்கிச் சாப்பிட்டாள்.

ராஜீவி கண்கள் அகன்று சிவந்தன. அவன் மனம் அலைந்து குலைந்தது. அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'இது என்ன இவள் இப்படி இருக்கிறாள்? இந்த ஸுலோசனாவைப் பற்றித்தானா அம்மா என்னென்னவோ பெருமையடித்துக் கொண்டாள்! ஸுலோசனா மாப்பிள்ளை எள்ளென்பதற்கு முன் எண்ணெயா யிருக்கிறாளடா? என்றாளே, இதுதானா அது? தனியாகக் குடித்தனம் பண்ணும்போதும் சரி, மாமியார் இருந்தாலும் சரி, அவளே எல்லோர் காரியத்தையும் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறாள் என்று சொன்னாளே. அது உண்மையில்லையே! ஒருகால் தாயுள்ளம் உண்மையை மறைத்து விட்டதோ? அது சரி; புத்தி எங்கே போயிற்று இவருக்கு? அதட்டி வேலை வாங்காமல் படுக்க வைத்துச் சுச்ரூஷை செய்கிறாரே!'

மறு நாளும் ராஜீவி கவனித்தான். காலையில் முதலில் மாப்பிள்ளைதான் எழுந்திருந்தார். தாமே இருந்து வெந்நீர் அண்டாவை நிரப்பினார். வேலைக்காரி வந்ததும் தாமே இருந்து வெந்நீர் அடுப்பை மூட்டச் சொன்னார். வெந்நீர் ஆனதும் தாமும் குளித்து ராஜீவியையும் குளிக்கச் செய்தார். அதுவரையில் ஸுலோசனா எழுந்திருக்கவேயில்லை. மனிதன் அந்தப் பக்கம் போய் எழுப்ப வேண்டுமே! பேசாமல் தூங்கட்டும் என்றிருந்து விட்டார்.

ராஜீவி, அவள் உண்மையாகத் தூங்கவில்லை என்றே நினைத்தான். தமையனுக்கும் தன் பெருமையைக் காட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் அந்தமாதிரி பாசாங்கு செய்கிறாளோ என்றுகூட நினைத்தான். மேலும் ஒவ்வொரு காரியத்திலும் அவள் அவருக்குத் தகுந்த மரியாதை செய்வதாகத்

தெரியவில்லை. அவரோ அவளை எல்லாவிதத்திலும் திருப்தி செய்ய முயன்று கொண்டிருந்தார்.

ராஜீவி பம்பாய்க்குத் தன் தங்கையைத் தன் ஊருக்கு அழைத்துப்போக வந்திருந்தான். அவளுக்கு ஏழு மாதம். எண்ணெய் கொடுக்க அழைத்துப் போக அவன் தாய் அவனை அனுப்பியிருந்தாள். ஞாயிற்றுக் கிழமை நல்ல நாள் என்று அவன் பார்த்து வந்திருந்தான். அவர் அதற்குப் பிறகு ஒரு நல்ல நாள் பார்க்கிறேன் என்றார். 'அவள் இன்னும் கொஞ்சம் நாள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று பார்க்கிறேன். நீயும்தான் இரண்டு மூன்றுநாள் இருந்துவிட்டுப் போகக் கூடாதா?' என்று கேட்ட அவர் சொல்லை அவனால் தட்டமுடியவில்லை. வியாழக்கிழமை நாள் பார்த்து அதே மாதிரி அம்மாவுக்கும் தெரிவித்து ஆபீசுக்கும் எழுதி, தன் லீவை அதிகரித்துக்கொண்டான்.

அன்று முதல் அவள் கணவனுக்கு உத்தரவுகள் இட்ட மணியம்தான். 'அப்பள டப்பியைத் திறந்துவைத்துவிடாதீர்கள்; கிளப்பில் சாப்பிட்டால் சமையற் கட்டைத் திறக்காமலே இருந்துவிடவேண்டாம்......' ஒவ்வொரு சாமானைப் பார்க்கும்போதும் ஒரு உத்தரவு. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி எண்ணும் போதும் ஒரு கட்டளை.

இது எல்லாம் பார்த்த ராஜீவிக்குத் தாளவில்லை. புதன்கிழமை யன்று 'ஸுலோ' என்று அதட்டிக் கூப்பிட்டான். அவள் கிட்ட வந்தாள். என்றுமே அவள் அண்ணனிடம் பயமும் மரியாதையும் கொண்டவள். அவன் அதட்டலுக்கு அநேக தடவை கண்ணீருகுத்தவள். மணமான பிறகும் அநேக தடவைகள் அவன் அவளை அழவைத்திருக்கிறான். இன்றும் அவள் கண்கள் கரைந்து காட்டின. 'இது என்ன இது? இதுதான் பெண்கள் காட்டும் மரியாதையோ?' என்று அவன் கொஞ்சம் கண்டிப்பாய்க் கேட்டான்.

'ஏன் அண்ணா கோபித்துக்கொள்கிறாய்?'

'பின் என்ன ஸுலோ இது? நானும் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். பிரமாதமாய் அதிகாரம் பண்ணிக்கொண்டேயிருக்கிறாயே! பாவம், ஆபீசு வேலை செய்து அலுத்துவருபவருக்கு இதுதான் ஆயாசம் தீர மருந்தோ?'

அவள் கண்கள் கோழைத்தனம் செய்தன. 'அண்ணா கோபித்துக் கொள்ளாதே. இனி மேல் அப்படிச் செய்யவில்லை' என்றாள்.

அதற்குள்ளே மாப்பிள்ளை வந்தார். அவள் கண்களில் நீரைக்கண்டு அவர் வெலவெலத்துவிட்டார். நாம் ஏதாவது பிசகு செய்துவிட்டோமோ? என்ற எண்ணம் தோன்றுவதுபோல அவர் நடந்துகொள்ள ஆரம்பித்தார்.

ராஜீவி, 'வாங்கோ மாப்பிள்ளை' என்று சொல்லி ஒன்றுமில்லை என்று அவர் எண்ணும்படி வேறு ஏதோ பேச ஆரம்பித்தான். அவளும் காபி எடுத்துவர உள்ளே சென்றுவிட்டாள். அவர் நாற்காலியில் அமர்ந்தார். காபி கொண்டுவந்த ஸுலோசனா அதைக் கொடுத்துவிட்டு வெற்றிலைத்தட்டை எடுத்து அருகே வைத்தாள். பக்கத்தில் நின்றுகொண்டு பாக்குவெட்டியை எடுத்துப் பாக்கு வெட்ட ஆரம்பித்தாள்.

'அசடே, இதென்ன மரியாதை. உன் தமையன் தானே, உட்கார்' என்றார் அவர். தாமே கையை நீட்டிப் பாக்கையும் பாக்கு வெட்டியையும் வாங்கிக்கொண்டார். 'வேண்டாம், பரவாயில்லை..............' என்றாள் ஸுலோசனா.

"சொன்னால் கேள். உங்க அண்ணா வேண்டுமானால் மனைவியைப் பெஞ்சுமேல் வேண்டுமானாலும் நிறுத்தி வைக்கட்டும். நான் உனக்காக வருத்தப்படுகிறேன். நீ உன் குழந்தைக் காவது..........."

மறுபடியும் அவள் ராஜ்யம்தான்!

அன்று இரவு மாப்பிள்ளையும் மைத்துனனும் சினிமாவுக்குச்சென்றனர். ஸுலோசனா வரவில்லை. திரும்பி வரும்போது அவர், 'ராஜீவி' என்றழைத்தார்.

'ஏன் மாப்பிள்ளை?' என்றான் ராஜீவி.

'உன் தங்கையை நீ அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது,'

'ஏன் நான் இல்லாதபோது.........' என்று ராஜீவி சிரித்தான். ராஜீவிக்கும் அவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயது.

'இல்லை ராஜீவி. பரிகாசம் செய்யாதே. உண்மையிலேயே சொல்கிறேன்' அவர் குரலில் அழுத்தம் தொனித்தது.

ராஜீவி விளையாட்டை நிறுத்திக் கவனித்தான்.

'கேள் ராஜீவி, பெண்கள் தாயாகும் நிலையில் இருக்கும்போது அவர்களுடன் மிகவும் ஜாக்கிரதையாகப் பழகவேண்டும். கடவுளே அவர்களுக்கு இரக்கம் காட்டுகிறார். குழந்தை அழகாய் இருக்கவேண்டும் என்று அவர்களுக்கு ஓர் தனியழகை அளிக்கிறார். அவர்

கள் உடல் நிலையும் மனோநிலையும் பிறக்கும் குழந்தையை மிகவும் பாதிக்கும். ஆகையால் அவர்களை எந்த விதத்திலும் சந்தோஷப் படும்படி வைத்துக் கொள்ளவேண்டியது நம் கடமை. அதுவும் உன் தங்கை வெகுநாள் கழித்துக் குளிக்காமல் இருக்கிறாள். ஏற் கனவே பலவீனம்......

'உன் தங்கை எனக்கு ஒரு வேலைக்காரி போல வேலைசெய்து வந்திருக்கிறாள். நான் அப்பொழுதெல்லாம் வேண்டாம் என்று சொன்னதில்லை. இன்று நானே அவளை வேண்டாம் என்கிறேன். ஆனால் அவள் அந்த உரிமையை அதிகாரம் என்று கருதினால் நான் கொடுத்தேயிருக்கமாட்டேன்......'

ராஜீவி கண்ணெதிரே ஓர் குழந்தை உரு வம் வந்து நின்றது. குறுகுறு என்ற முகம். அழகிய சிறு உடல். மழமழ என்று கைகள். அந்த முகத்தில் அழகிய இரு நீல விழிகள். ஆனால் அந்த விழிகளில் அனாவசியமாக ஆட் டம். நிலையில் நிற்காதவாறு அங்கும் இங் கும் ஓடும் அவ்விழிகள் ஞாபகம் வந்தவுடன் ராஜீவி ஆடிவிட்டான். அவன் உள்ளத்தில் ஒரு திருகல் ஏற்பட்டது. அவன் மாப்பிள்ளை சொன்ன மற்ற வார்த்தைகளைக் காதில் வாங் கவேயில்லை. 'அவர்கள் மனோ நிலையும் உடல் நிலையும் குழந்தையைப் பெரிதும் பாதிக்கும்' என்ற அவர் வாக்குமட்டும் அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

அவன் எதிரே தோன்றியது அவன் குழந்தைதான். அந்தக் குழந்தையின் ஓடும் விழிகள் அவனுக்குத் துயர்தரும் புதிராகவே யிருந்து வந்தன. இன்று அவர் வாக்கியம் அவனுக்கு ஏதோ புது விளக்கேற்றி வைத் தது போல இருந்தது.

ராஜீவியின் மனைவியின் முதல் பிரசவ சம யம் கொஞ்சகாலம் அவர்கள் தனியே குடித் தனமிருந்தார்கள். ராஜீவியின் மனைவி கல் யாணி மிகவும் நல்ல பெண்; குடித்தனப் பெண்ணுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

திடீரென்று அவள் நடவடிக்கையில் சில மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்தன. கண வனே எல்லாம் என்று தன் சுக சௌக்யங் களையே மறந்திருந்த அவள் தன்னைப் பற்றி எண்ண ஆரம்பித்தாள். கணவனுக்குத் தன் கடமையை மறந்த அவள் அவன் தனக்கு உபகாரம் செய்யவேண்டும் என்றும் எதிர் பார்க்க ஆரம்பித்துவிட்டதாக எண்ணும்படி நடந்துகொண்டாள். சில சமயம் அவன் இருப்பதையே, அவனுக்குத் தன்னிடமுள்ள உரிமையையே மறந்துவிட்டாள். ராஜீவி 'இது என்ன புதுக் கோலம்' என்று ஆச்சர் யப்பட்டவன் 'இவள் அகங்காரம் அதிகரித்து விட்டது' என்று ஆத்திரப்படவும் ஆரம் பித்துவிட்டான்.

வரவர அவள் கொட்டம் அதிகரித்தது! முதலில் பொறுத்துப் பார்த்தான். பிறகு வினயமாகச் சொல்ல ஆரம்பித்தான். ஆனால் அவள் என்ன நினைத்தாளோ நடத்தையில் மாறுதலே ஏற்படவில்லை.

எல்லாவற்றையும் தோற்க வைத்தது அவள் சீமந்தத்துக்கு மறுநாள் செய்தது. ராஜீவி தாயார், 'கல்யாணி இங்கேயே இருக்கட்டும், நாலு நாள் சென்று கொண்டு போய்விடலாம்' என்று சொன்னாள். ராஜீவி யும் தன் தாயின் அபிப்பிராயத்தை மெது வாக மனைவியிடம் சொன்னான். அவள் சாக்குச் சொல்லி மறுத்துவிட்டாள். ராஜீவி யும் எப்படியோ அவள் வார்த்தையில் மயங்கி விட்டான். அவன் கோபம் எல்லாம் மறுநாள் அவள் ஊருக்குப் போன பிறகு தான் உருவாயிற்று. அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினான்.

இவனுக்குச் சீமந்தம் நடந்தது பிறந்த கிராமத்தில். வேலை பார்க்கும் ஊருக்கு மாமனார் ஊர் வழியாகத்தான் போக வேண்டும். மனைவி போகும்போது கண்டிப் பாய் வந்து போகவேண்டும் என்று சொல்லி யிருந்தாள். அவன் அங்கே இறங்காமலேயே போய்விட்டான். அவள் வெள்ளையுள்ளத் துடன், 'நீங்கள் ஏமாற்றலாமா' என்று எழுதிக் கேட்டாள். அதற்குப் பதில் எழுத வில்லை. மறுபடி ஒரு தடவை அவள் எழுதி னாள். அதற்குப் பதில் அவன் தன் மாமனா ருக்கு, 'அவள் அங்கிருக்கும்வரை தங்கள் பெண். ஏதாவது வேண்டுமானால் நானும் நீங்களும் எழுதிக்கொள்ளலாம்' என்று எழுதிவிட்டான். பெண் குழந்தை பிறந்தது. புண்யாகவாசனத்துக்கு அவன் தாய் கூடப் போகவில்லை. கிராமத்திலிருந்த ஒரு சொந்தக்காரக் கிழவிமட்டும் போய்வந்தாள். குழந்தை பிறந்து ஒரு வருஷம் கழித்துத் தான் கோபம் தணிந்தது. சென்று குழந்தை யைப் பார்த்தான்.

அந்தக் குழந்தையைப் பார்த்தவுடன் அவன் உள்ளத்தில் இருந்த "கணவன்" மறைந்தான். தந்தை மேலோங்கி நின்றான். அப்பொழுதுதான் குழந்தையின் ஓடும் விழிகள் அவனைச் சஞ்சலத்துக்குள்ளாக்கின. உடனே கல்யாணியிடம் வர்மத்தை மறந்து "இது ஏண்டி இது?" என்று கேட்டான். அவள் பேதை 'குறுகுறு என்று இருக்கு, இல்லை?' என்று கேட்டு வெண் முறுவல் காட்

டினாள். அவனுக்குச் சந்தேகம் தீரவில்லை. மாமனாரைக் கேட்டான். பயமொன்றுமில்லை என்று தைரியம் கூறினார் அவர். டாக்டரைக் கேட்டான். 'நரம்புத் தளர்ச்சி. வயது ஆனால் சரியாய்விடும்' என்றார். கொஞ்சம் தைரியம் கிடைத்தாலும் நிம்மதி கிடைக்கவில்லை.

மோட்டாரில் வந்து கொண்டிருந்த ராஜீவிக்கு இந்த விஷயங்கள் எல்லாம் மீண்டும் ஒரு முறை ஞாபகம் வந்தன. அவன் வேண்டும் என்றே கல்யாணியை வாட்டிய காலத்தில் அவள் உருவத்தைக் கொஞ்சம் கற்பனை செய்து பார்த்தான். கண்ணீர் வடித்துக் கலங்கும் முகம்; அழகும் பலவீனமும் எதிரொலிக்கும் கண்கள். ஒரு சமயம் கோபித்தும், ஒரு சமயம் மன்னித்தும் புரளும் விழிகள்—எல்லாம் தோன்றி அவனை ஒரு முறை வருத்தின. அந்தத் தோற்றத்துக்கும் தன் குழந்தை முகத்துக்கும் ஒரு அழுத்தமான சாம்யம் இருப்பதாகத் தோன்றிற்று அவன் உடைந்த உள்ளத்துக்கு. அவன் உள்ளம் அவனை வைதது.

* * *

மோட்டாரிலிருந்து இறங்கியதும் இருவரும் உள்ளே வந்தனர். உள்ளே வரும் சப்தம் கேட்டு லைட் போட்டவுடன் ஸுலோசனா எழுந்திருக்கப் பார்த்தாள். 'வேண்டாம், ஸுலோசனா, படுத்துக்கொள்' என்று அடக்கிவிட்டான் அவள் அண்ணன். தானே சென்று பாலையும் எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

ஸுலோசனாவுக்குக்கொஞ்சம் அதிசயமாயிருந்தது.

ஆனால் அன்று பதினொரு மணிக்கு அவள் விழித்திருந்தால் இன்னும் ஒரு அதிசயமான விஷயத்தைப் பார்த்திருப்பாள்.

ராஜீவி தன் மனைவி விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். அவள் இரண்டாம் பிரசவத்துக்குத் தாயார் வீடு சென்றிருந்தாள்.

அந்தக் கடிதம் என்ன தெரியுமா?

''உனக்குப் பிடித்த புத்தகங்களை எல்லாம் வாசி. கூடியவரையில் மகிழ்ச்சிதரக்கூடிய காரியங்களையே செய். பணம் வேண்டும் என்றால் எழுத யோசிக்காதே. தவிர என்னை எப்பொழுதாவது பார்க்க வேண்டும்போல் இருந்தால் அசடு மாதிரி இருந்துவிடாதே. உடனே எழுது. நான் எப்படியாவது லீவு எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்......''

என்ன ஒருமாதிரி இருக்கிறதே என்கிறீர்களோ?

பாவம், நெருப்பைத் தொட்டவனுக்கு அல்லவா தெரியும் அதன் சூடு!

உயிர்க் கூடு

வை சுப்ரமண்யன்

வானவெளியின் பரந்த வீதிகளில், அம்பு போலப் பறந்து சென்று திரும்பிய வண்ணமிருந்தது பறவை அடிக்கடி. திரும்பிய ஒவ்வொரு தடவையிலும், அதன் மூக்கில் குப்பையும், செத்தையும், சருகுகளும், குச்சிகளும் தென்பட்டன.

அந்த வாதா மரத்தின் ஒரு கிளையில், தன் அருமைக் குஞ்சுகளுக்கு இருப்பிடம் அமைப்பதில் பொழுது பூராவும் ஈடுபட்டிருந்தது அது. உற்சாகம் இருந்ததோ, இல்லையோ தெரியவில்லை: தளராத உழைப்புமட்டும் அதனிடமிருந்தது. பசிக்கு இரை தேடி அலையும் பருந்துகளிடமிருந்தும், பாம்புகளிடமிருந்தும் தன் உயிரை – உயிருக்குயிரான தன் குஞ்சுகளை – காப்பாற்றுவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தது.

உயிருக்குக் கூடு அமைத்துக்கொண்டிருந்த பறவையின் போக்கை நினைந்து வியந்து கொண்டிருந்தான் அவன். அந்த மரத்தடியில் அன்று காலைமுதல் நின்றிருக்கிறானாதலால், அதன் செய்கையை விடாமல் கவனித்துக்கொண்டுதானிருந்தான். கூட்டினின்றும் இப்போதுதான் வெளியே வந்த உயிர்கள் அவை – இந்த உயிர்ப் பிண்டங்கள் – பறவைக் குஞ்சுகள். இந்த உலகத்தின் ஸ்பர்சம் பட்டுவிடவே, இனி அவைகளுக்குச் செயற்கைக் கூடு அவசியம் வேண்டியதுதான்.

*　　　*　　　*

பறவை அமைத்த கூட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவன் மனம் சிந்தனையில் ஈடுபட்டது.

தன் உயிரை எதிர்நோக்கி நிற்கிறான் அவன். அவனைப் பொறுத்தவரை அவன் உயிர் கூட்டினின்றும் வெளியேதான் இருந்தது. அவன் உடல் அந்த உயிரின் கூடு. நான்கு வருஷங்களுக்கு முன் அவன் இதயத்தில் அந்த உயிர் திடீரெனத்தோன்றி நிலைத்தது. அதுகாறும் உணர்ச்சியற்றிருந்தது போன்ற அந்த இதயம், அப்போதுதான் உணர்ச்சிபெற்று இயங்கத் தொடங்கியது!

அந்த உயிரின் உருவாக விளங்கியது யார்? அவள்......! ஸ்ரீதேவி! உயிரும் கூடுமாக இருவரும் மாறுமுன், பரஸ்பரம் ஒருவரின் வாழ்க்கையில் ஒருவர் குறுக்கிட முக்கியமான கட்டங்கள் மூன்று தோன்றின. இந்த மூன்று கட்டங்களில் இரண்டு முறைகள் அவர்கள் மறக்க முடியாத சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டனர். முதன் முறை கலாசாலை; இரண்டாம் முறையாகச் சிறைச்சாலை!

இரண்டு கட்டங்கள் தீர்ந்துவிட்டன; மூன்றுவதுகட்டம் இதுதான்! வாதாமரத்தடியில் அவன் நின்றுகொண்டிருந்தான். உயிரையும் கூட்டையும் பற்றிய விசேஷத்தை – தத்துவத்தை – விளக்கிக்கொண்டிருந்தது அந்தப் பறவை!

*　　　*　　　*

சந்திரசேகரன், பி. ஏ. வாசித்துக்கொண்டிருந்த சமயம்; ஸ்ரீதேவி வகுப்புக்குப் புதிதாக வந்தாள்.

இரண்டே மாதங்கள்தான் சென்றிருந்தன.

சந்திரசேகரன் ஸ்ரீதேவியைக் கவர்ந்துவிட்டான்; அவன் மேற்கொண்டிருந்த வாழ்க்கை அவளைக் கவர்ந்து விட்டது. ஸ்ரீதேவி மயங்கி நின்றாள்! அவனுடன் கொண்ட தொடர்பு எந்த வழியில் செல்கிறது என்று அவளுக்கே பிடிபடவில்லை. அவள் ஆராய்ச்சி செய்தாள். அவனிடம் பேசிக் கொண்டிருக்கும்போது இதை உணர விழைந்தாள்.

ஹோட்டலில் அறைவைத்துக் கொண்டிருந்தான் அவன். அவனிடம் அடிக்கடி வருவாள் அவள். படிப்புத்தான் இயற்கைச் சாதனமாய் நின்றது.

ஏன் அவனை நாடிவருகிறாள் என்று அவளுக்கே தெரியாது. அவனும் சந்தர்ப்பங்களை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை! அவள் வருவதைத் தடை செய்யவில்லை.

காலத்தின் ஓட்டம் அதிக வேகம் பெற்றிருந்ததோ என்று இருவரும் சம்சயித்தனர். ஏனெனில், அவன் படிப்பு முடிந்து பட்டம் பெற்றாகி விட்டது. கலாசாலையினின்றும் வெளியேற வேண்டும் அவன்.

ஸ்ரீதேவிக்கு உலகத்தின் போக்கே பிடிக்க வில்லை. தன்னிடமிருந்து சந்திரசேகரனைப் பிரிக்கிறதே அது என்றெண்ணினுள். வாழ்க்கையின் வேகத்தில் சென்றுகொண்டிருந்தவள், ஒட்டுப் புல் போல அவனிடம் ஒட்டிக்கொண்டுவிட்டாள்! இந்தப் பிரச்னையே இன்னதென்று தீர்வதற்குமுன் இருவரும் பிரியவேண்டும். அவன் பிரிந்து சென்ருல் என்ன நேரும்? தெள்ளிய வாழ்க்கைச் சுனையில் ஒரு கல் போல அவன் வந்து விழுந்து அலைகளை உண்டுபண்ணி விட்டான். அவனுடைய கவர்ச்சிகரமான வாழ்க்கை முறை அவளை அவனிடம் கட்டுண்டு போகும்படி செய்துவிட்டது! பேச்சுவாக்கில் அவனிடம் கேட்டாள்.

"நம்மிடையே தோன்றியுள்ள உணர்ச்சியின் தன்மை எனக்குப் புலப்படவில்லை. தாங்கள் எப்படி இதை அனுபவிக்கிறீர்கள்.?"

"ஏன்? இதற்கென்ன அவசியம் நேர்ந்தது இப்போது?"

"இல்லை, நாமிருவரும் மாணவர்கள் என்ற முறையில் கொண்ட தொடர்பு எந்த ரீதியில் அமைந்துள்ளது என்று தெரியவில்லை. தாங்கள் பிரியப் போகிறீர்கள் என்பதறிந்த பின், என் மனதில் இந்த விஷயம் அவிழ்க்க முடியாத முடிச்சாக மாறி நிற்கிறது. முதலில் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.!"

"ஸ்ரீ தேவி, இதை நீ எப்படி உணர்கிருய் என்று தெரியவில்லை. ஆனுல் நான் இந்த உணர்ச்சியை என்றைக்கோ தெரிந்து அனுபவிக்கத் தொடங்கிவிட்டேன். பொதுவாக உன்னை என்னுல் மறக்க முடியாது! என் இதயத்திற்கு உணர்வு மூட்டிய உன்னை என் உயிராகக் கொண்டு விட்டேன், நான் அந்த உயிரை மூடிக்கொள்ளும் உடல்!"

அவன் பேசிக்கொண்டிருந்தபோது ஸ்ரீதேவி உணர்ச்சி பரவசமாகி நின்ருள். அவள் வாய் அகல விரிந்திருந்தது. கண்களின் ஓரத்தில் இரண்டு பொட்டுக் கண்ணீர் முட்டிநின்றது.

அவள் பேச விரும்பினுள். தொண்டை அடைத்தது.

இதுதான் காதலா?

ஒரு நாள்; சந்திரசேகரன் உண்மையாகவே பிரயாணப்பட்டுக்கொண்டிருந்தான். ஸ்ரீதேவி திக்பிரமை பிடித்து நின்றிருந்தாள்.

"ஸ்ரீ, நான் செல்லுகிறேன், நீ படிப்பை முடித்துக்கொள், நாம் எப்படியும் தம்பதிகளாகிவிடுவோம். இடைக்காலத்தில், என் வாழ்க்கையைத் தேசியத்துக்குச் செலவிடப் போகிறேன்! என் வாழ்க்கைமுறை என்று சொல்லி நீ அதிசயப் பட்டுக் கொண்டிருந்தாயே! அது வேறு ஒன்றுமில்லை; இது தான்! இத்தனை காலம் என் போக்கு உனக்குச் சரியாகப் பட்டிருக்காது. காரணம், நான் பறைசாற்றிக் கொள்ளாததுதான்."

சந்திரசேகரனும் ஸ்ரீதேவியும் பிரிந்தனர். உயிரைப் பிரித்துவைத்துவிட்டுக் கூடு மாத்திரம் சென்றுவிட்டது! கூட்டைவிட்டு உயிர் செல்வது இயற்கை; விக்கிரமாதித்தன் காலத்துச் சரித்திர அதிசயம். ஆனுல் இது புதுமை!

* * *

1940-ஆம் வருஷம் இந்தியாவெங்கும் பேச்சுரிமைப்போர் நடந்துகொண்டிருந்தது. தலைவர்கள் சிறைக்குள் அடைபட்டனர். சந்திரசேகரனும் தன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துத் துடித்துக்கொண்டிருந்தான்.

அவன் முறை வந்தது. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் பேச்சுரிமை கொண்டாடினுன். சிறை வாயில் அவனை அழைத்தது.

ஸ்ரீதேவி பத்திரிகை வாயிலாக அவன் சிறை சென்றதை அறிந்தாள். அவன் தன் வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். ஆனுல் அவளோ? அவளுடைய வாழ்க்கைக்கும் முக்கியமான கட்டங்கள் இருக்கத்தான் செய்தன. அவனைக் கலாசாலையில் சந்தித்த முதல் கட்டத்தையடுத்து, அவனுடன் சம்பாஷித்து உறவாடின சந்தர்ப்பங்கள் அனைத்தும் முக்கியமானவையாகத்தான் தோன்றின.

இப்போது இன்னெரு முக்கியமான கட்டம் வந்தது. சிறை வாயிலையணுகி அவனைச் சந்தித்தாள்.

அவளைக் கண்டு புன்னகை செய்தான் அவன்.

"உங்கள் லட்சியம் நிறைவேறிவிட்டது... ...." என்ருள் அவள்.

"அதற்குப் பிறகு? ஏதோ குறைபாடு இருப்பதுபோலத் தோன்றுகிறது, உன் குரலில்!"

"குறைபாடு ஒன்றுமில்லை............நீங்கள் விடுதலையடைந்து வாருங்கள்.........எல்லாக் குறையும் தீர்ந்து விடும்............"



மசாலா தோசை சாப்பிட்டிருக்கிறீர்களா—

டால்டாவினுல் தயாரித்தது?

6 மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து $1\frac{1}{2}$ கரண்டி அரிசியும் $\frac{1}{2}$ கரண்டி உளுத்தம்பருப்பும் வெவ்வேருக நன்ருக அரைத்துக்கொள்ளவும். இரண்டு மாவுகளையும் சேர்த்து ருசிக்குத்தகுந்தபடி உப்பைபோட்டு 12 மணி நேரம் வைத்திருக்கவும். பிறகு ஜலம் ஊற்றி 10 நிமிடங்கள் நன்ருய்கலந்து சுமாருக கெட்டியாகவும் ஒரே மாதிரி இறுக்கமுள்ளதாயும் செய்து கொள்ளவும். சூடான தோசைக்கல்லில் டால்டாவைப்பூசி, ஒரு கரண்டி கலந்த மாவை ஊற்றி, கரண்டியின் பின்புறத்தால் வட்டமாக பரத்தவும். சிறிது டால்டாவை தோசையின் விளிம்பைசுற்றி விடவும். பக்குவமானதும், மறுபக்கம் திருப்பி வேகவைக்கவும். பிறகு மசாலா சேர்த்த உருளைக்கிழங்கு பொடியை மத்தியில்போட்டு தோசையை மடிக்கவும். தோசைகளை சூடாக சாப்பிடுங்கள்!

பச்சை உணவுகள் சமைத்த உணவுகளைவிட மேலானவையா ?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 78-23 TM

அவள் சென்ற பின், அவள் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் நிறைந்தன; அந்த அறையிலும் நிறைந்து எதிரொலித்தன. உற்சாகமாக ஏற்ற சிறை வாழ்க்கை, அவன் மீது பாரமாக விழுந்து கொண்டிருந்தது. விடுதலையை நாடியது அவன் மனம்.

குறிப்பிட்ட சமயம் விடுதலையடைந்தான். அதையடுத்து 1942ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம். அவனுடைய ஆர்வம் அவனை உந்தித் தள்ளியது. இடையில், ஸ்ரீதேவியும் அவன் நினைவில் தோன்றி மறைந்தாள். அவன் அபிலாஷை வெற்றி பெற்றது. உணர்ச்சியை அடக்கிக்கொள்வோம் என்றெண்ணினன். புரட்சியில் அவன் சம்பந்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு.

மீண்டும் சிறைவாசம் லபித்தது சந்திரசேகரனுக்கு. கடமையும், அதையடுத்து உள் உணர்ச்சிகளும் மாறி மாறித் தோன்றின. கடமை வெற்றி பெற்றுக்கொண்டே தான் போயிற்று. இம்முறை அவனை அலிபுரத்துக்கு அனுப்பிவிட்டனர். மூன்று வருஷங்கள் கழித்துத்தான் திரும்ப வேண்டும் அவன்.

ஸ்ரீதேவிக்கு இன்னமும் பொறுமையைக் கொள்ள முடியவில்லை. உள்ளடக்கிய பொறுமை, நீண்ட பெருமூச்சுக்களாக மாறி வெளியேறிக்கொண்டிருந்தது. பெண்மை பேதலித்து நின்றது. காலத்தின் சுழல் அவள் முன் நிழல்களைக் கொண்டுவந்து சேர்த்தது. அந்த நிழல்களின் நடுவே சந்திரசேகரனைத் தேடிக்கொண்டிருந்தாள் அவள். அவள் முன் தோன்றிய நிழலுருவங்கள் அவளுக்குப் பார்த்த வரன்கள்! கூட்டைப் பிரிந்து நின்ற உயிர் தவித்துக்கொண்டிருந்தது.

அந்தக் கூட்டில் உயிர் இல்லாவிடினும், தன் கடமையின் வலிமையை உயிராகக் கொண்டு அது வான வெளியின் வீதிகளில் பறந்து திரிந்துகொண்டுகிடந்தது! உயிரைப் பற்றிய நினைவு அதற்கு இந்த மண்ணில் பாவிய பிறகுதானே வரும்?

* * *

நீண்டகால சிறை வாசம்—தனிமை—மனதில் பண்பாடுகளையும், எதிர்காலத்தைப் பற்றிய திட்டங்களையும் வகுக்கும். சந்திரசேகரன் மனமும் பண்பட்டிருந்தது. ஸ்ரீதேவியுடன் கூடிய தன் எதிர்காலத்தைக் கற்பனை செய்துகொண்டு திரும்பி வந்தான் அவன். அவள் படிப்பு முடிந்திருக்கும்; அவள் தன்னை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பாள். இரண்டு முக்கியமான மகத்தான சந்திப்புக்குப்பின், மூன்றும் முறையாகச் சந்திக்கப் போகிறோம் என்ற பெருமிதத்துடன் வந்தான் அவன். உயிரின் அவசியத்தை இப்போதுதான் உணர்ந்ததுபோலும் அந்த விசித்திரமான கூடு!

* * *

பறவை வாதா மரத்தில் கூடு கட்டி முடித்துவிட்டது. அவனும் ஆசை திரவேடிக்கை பார்த்து முடித்து விட்டான். வெயிலின் வெப்பம் தணிந்தது. மரத்து நிழலைவிட்டு வெளியேறினன். ஸ்ரீதேவியைப் பற்றிய ஞாபகம் அவனைத் தெருவுக்குள் போகத் தூண்டியது. தன்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான் அவன். 'ஐயோ, நம்மை அவள் அடையாளம் கண்டு கொள்ளுவாளோ இல்லையோ?' என்று சந்தேகப்பட்டான். பொழுது சாய்ந்து விட்டது.

கைகளைப் பின்பக்கம் கட்டிக்கொண்டு உலாவிக்கொண்டிருந்தான். வாதா மரத்துக்கும் கோபுர வாசலுக்குமாக நடந்துகொண்டிருந்தான். சிந்தனை அவன் உள்ளத்தில் பெருகிக் கிடந்தது. நெஞ்சில் ஏதோ குறுகுறுப்பு இருந்தது; மார்பு அடித்துக்கொண்டது. காலடிச் சுவட்டின் எல்லைக்குள் ஸ்ரீதேவியின் முகம் தெரிந்தது.

அவன் திருஷ்டியில் திடீரென்று ஒரு பெண் மணியின் அசைவு தெரிந்தது. அவள் ஸ்ரீதேவிதான்! அவன் அவள் வருகைக்காகக் காத்திருப்பதை உணர்ந்தவள்போல, அங்கே வந்தாள்! கையில் கோயில் விளக்குக்கு எண்ணெய்.

நான்கு கண்களும் எதிர்த்து நின்றன. அவள் பார்வை கீழே விழுந்தது. நடையில் வேகம் மறைந்தது; உடலில் உணர்வு மறைந்தது; நெஞ்சில் திடீரென்று குறுகுறுத்தது; மார்பு அடித்துக்கொண்டது.

சந்திரசேகரன் வெறித்துப் பார்த்தான். அவள் மாற்றத்தைக் கண்டு அவன் உள்ளம் ஏமாந்தது. அவள் ஸ்ரீதேவிதானு? அவள் அக்காவோ? அல்லது அவள் தாயாரோ? அல்லது அவளுக்கேதான் அத்தனை வயதாகி விட்டதோ? நடுவில் அவளுக்கு மாத்திரம் காலம் நீண்டு சென்றுவிட்டதோ? அவள் மாற்றத்தின் சின்னங்களில் அவளுக்குக் கல்யாணம் ஆகியிருப்பது தெள்ளத் தெளியத் தெரிந்தது. அவன் கால்கள் ஆடின.........

"ஸ்ரீதேவி......" என்ருன். புலன்களுக்கு வெளியுலகம் மறைந்து மழுங்கிவிட்டது. இருள் கவ்வி நின்றது.

ALWAYS LOOK FOR THE NAME



When buying a watch!

வாட்ச் வாங்கும் பொழுது

எப்பொழுதும் தயாரிக்கும்

கம்பெனியின் பெயரை கவனிக்கவும்!



வெளித் தோற்றத்திலிருந்து ஒரு வாட்சை வாங்குவது எளிது: ஆனல் அதைச் செய்த கம்பெனியின் பெயரை நாம் கவனிக்க மறந்து விடுகிறோம் இதனல் ஏமாற்றமே கண்ட பயன். ஒரு வாட்ச் வாங்குங்கால் அதன் பெயரைக் கவனிக்க மறந்து விடாதீர்கள்! அப் பெயர் 'வெஸ்ட் எண்ட் வாட்ச்' ஆக இருக்குமானல், நீங்கள் எவ்விலை கொடுத்து வாங்கினலும் உங்கள் பணத்தின் மதிப்பிற்குரிய பொருளையே வாங்குவதாக உறுதி கொள்ளலாம். தோற்றம், வேலைத்திறன நாணயம் இவையே வெஸ்ட் எண்ட் வாட்சின் அணிகலன்கள் எங்கள்பிரகயாகிலைப் பற்றியும் நாங்கள் விறகும் வாட்சுகளை பற்றியும் பெருமையடைகிறோம.

தி ஸிலிடார்
(கிரிஸ்டல் வடிவம்)
எவர்ப்ரைட் ஸ்டீல்உடன்கூடிய
நிக்கல் ஸில்வர் Rs. 62/-

West End Watch Co.

BOMBAY
CALCUTTA

போதுமான ஸ்டாக்குகள் வராமலிருப்பதால், விளம்பரம் செய்யப் படும் வாட்ச் வகைகள் அனுப்ப முடியாமற் போகவும் நேரிடலாம். ஆனல் முடிந்தவரையில் கைவசமுள்ள ஸ்டாக்குகளினின்று உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்று வருகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் :: கல்கத்தா.

"நான்......காத்திருந்தேன். என்னை மென் மேலும் காத்திருக்கப் பெரியோர் அனுமதிக்க வில்லை........."

எப்படியோ இந்த வார்த்தைகளைக் கூறி முடித்தாள் அவள். சந்திரசேகரன் அங்கே நிற்கவில்லை; அவள் கண்ணுக்கு மறைந்து கொண்டே இருந்தான். கொஞ்சநஞ்சம் தெரிந்ததைக்கூட அவள் கண்களில் பெருகி யிருந்த நீர் மறைத்தது. மூன்ருவது முக்கிய கட்டம் முடிந்தது. அன்றைக்குத் தற்காலிக மாகத் தன்னிடமிருந்து பிரித்த உயிரை நிரந்தரமாகப் பிரித்து வைத்தது அந்தக் கூடு. அந்த உயிரை இன்று ஏற்க முடியாத நிலையில் பாழ்த்துப்போய், சூன்யம் நிறைந்த வெறும் கூடாகத் திரும்பிச் சென்று விட்டது அது!

* * *

வாதா மரத்தின் அடியில் குப்பையும், செத்தையும், குச்சிகளும் சிதறிக் கிடந்தன. கூடு சிதைந்துபோய் நிர்மூலமான காட்சி யைக் காட்டியது!

நாலைந்து சிறுவர்கள் அதைச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந் தனர். "ஐயோ, பாவம்டா; குஞ்செல்லாம் செத்துப் போயிடுத்து போலிருக்கு. கழுகு வந்து தின்னுருக்கும்! இதோ பார் சிறகு: அதோ வேறே. எங்கே பார்த்தாலும்......" என்றனர்.

பறவையைக் காணவில்லை. ஆனல், பறந்து கிடந்த வானவெளியில் அந்த ஒற்றைப் பறவை கண்ணுக்கு ஒரு புள்ளி போலத் தெரிந்துகொண்டு, பறந்துகொண்டிருந்தது. உயிரைப் பறிகொடுத்த துக்கத்தில், இந்தப் பூமியில் இறங்க மனமில்லாமல் பறந்து கொண்டிருந்ததோ, என்னவோ?



காரைக்குடி ஆராய்ச்சி நிலயம்



நா.கி.நாகராஜன்

இவ்விதழ் வாசகர்களை யடைவதற்குள் தலைவர் நேருவை வரவேற்கும் பேற்றைச் செட்டிநாடு பெற்றிருக்கும். ஜூலை 25-ஆந்தேதியன்று அவர் காரைக்குடியில் மின்வேதி ஆராய்ச்சி நிலையத்தின் (Electro-chemical Laboratory) அஸ்திவாரக் கல்லை நாட்டியிருப்பார். வள்ளல் அழகப்பரின் ஈகையின் பயனாய் இந்தியா முழுதிற்கும் பொதுவான இந்த ஆய்வுக் களம் தமிழ் நாட்டில் அமைக்கப் பெறுகிறது. இங்கு நடைபெறப்போகும் ஆராய்ச்சிகளால் தமிழ் நாடும், மற்ற மாகாணங்களும் தொழில் வளர்ச்சியில் பெரிதும் முன்னேறலாம். ஆகையால் காரைக்குடி ஆராய்ச்சி நிலையம் நிறுவப் படுவது இந்நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவமாகும்.

மின்சாரம் மனிதனது முதன்மையான வேலையாள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இரசாயன நூலோ வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணையாக விளங்குகிறது. இவ்விரண்டையும் ஒன்றுகூட்டி மானிடன் பயன்பெறும் வகையில் ஈடுபடுத்துவதே வேதி மின்னியல் (Electro-chemistry) என்ற விஞ்ஞானப் பிரிவின் நோக்கமாகும். வெப்பத்தையும், ஒளியையும் மின்சாரத்தால் பெறலாம் என்பது நாமனைவரும் அறிந்ததே. அது எந்திரங்களை ஓட்டுவதையும் நாம் காண்கிறோம். ஆனால் மின்சாரம் இரசாயன விளைவுகளையும் விளைக்கவல்லது என்பதை அறிந்தவர் சிலரே. சில இரசாயனப் பொருள்களின் வழியே மின்சாரத்தைச் செலுத்தினால் அவற்றில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. இது மின்சாரத்தின் வேதி விளைவு எனப்படும். இவ்வகையில் மின்சாரம் நேரடியாக இரசாயனத் தொழிலில் பயன்படுகிறது.

இன்னொரு வகையிலும் மின்சாரம் இரசாயன விளைவு நிகழ உதவுகிறது. இரசாயன விளைவுகள் பல நிகழ மிகுதியான வெப்பம் தேவை. மின்சாரத்தை எளிதில் வெப்ப ஆற்றலாக மாற்றிப் பொருள்களைச் சூடேற்றப் பயன் படுத்தலாம். ஆகையால் இரசாயன விளைவுக்கு வேண்டிய வெப்பத்தை மின்சாரத்தின் உதவியாற்பெற்று விளைவைநிகழ்த்தலாம். மின்சாரத்தாற் பெறும் வெப்பத்தின் அளவை மிகத் திருத்தமாகக் கட்டுப் படுத்தலாம். ஆகையால் விளைவுக்கு வேண்டிய வெப்பத்தை அளவிட்டு அளித்து அது மிகச் சீராய் நடக்குமாறு செய்ய இம்முறையால் இயலும். ஆகையால் இவ்வகையில் மின்சாரத்தை இரசாயனத் தொழிலில் பயன்படுத்துவது இக்காலத்தில் மிகப் பொதுவாய்விட்டது. இதுவும் வேதிமின்னியல் என்ற துறையிலேயே அடங்கும்.

இவ்வகைகளில் இரசாயனத் தொழிலில் மின்சாரத்தைப் பயன்படுத்துமுன் சில நிபந்தனைகள் சரிவர உள்ளனவா என்று கவனிக்க வேண்டும். ஒரே இரசாயன விளைவை நிகழ்த்தப் பலமுறைகள் இருக்கலாம். அவற்றுள் மிக மலிவாய் விளையும் பொருள்களை வீணாக்காது பயன்படுத்தும் முறையே வழக்கத்திற்கு வரும் என்று கூறத் தேவையில்லை. ஆகையால் மின்சார முறையே மற்ற முறைகளினும் ஒரு விளைவைத் திறம்பட நிகழ்த்தும் என்று ஏற்பட்டால் அது விரைவில் வழக்கத்திற்கு வந்து மற்ற முறைகளை வழக்கொழியச் செய்து நிலைபெறுகிறது. இரசாயனத் தொழிலில் பன்முறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. இதனால் விலையுயர்ந்தனவாக விருந்த பொருள்கள் பல ஏழைகளும் பயன்படுத்தும் மலிவான பொருள்களாக மாறிவிட்டன.

மேலும் ஒரு இரசாயனத் தொழிலில் மின்சாரம் பயன்பட அது தொழிற்சாலை யின் அருகிலேயே ஏராளமாகவும், மலி வாகவும் கிடைப்பதாயிருக்க வேண்டும். இல்லையேல் மின்சார முறையைக் கையா ளுவதில் செலவு அதிகமாய்விடும். ஆனால் இவ்வாறிருந்தாலும் சில சமயங்களில் வேறுமுறைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் எளிதிற் கிடைக்காமலிருக் கலாம். அப்போது மின்சார முறை மட் டும் இயன்றதாகிறது. இரசாயன விளை வுகள் பெரும்பாலனவற்றில் தண்ணீர் மிக அதிகமாகத் தேவை. தொழிலுக்குத் தேவையான மின்சாரத்தை ஒரு நீரோட் டத்திலிருந்து பெறுவதாயின் அதிலிருந்தே விளைவுக்கு வேண்டிய நீரையும் பெறுதல் எளிதாகிறது. இது காரணமாகவே அமெரிக்காவில் நீரோட்டமின்னுக்க நிலை யங்களைச் சுற்றிப் பல மின் வேதித் தொழில்கள் வளர்ந்துள்ளன.

நீரின் ஆற்றலைக் கொண்டு மின் சாரத்தைப் பெறுது கரியை எரித்து, நீராவியைத் தோற்றுவித்துப் பெறுவ தும் உண்டு. சென்னை நகருக்குத் தேவை யான மின்சாரம் இவ்வாறுதான் பெறப் படுகிறது. அத்தகைய இடங்களிலும் மின் வேதித் தொழில்கள் வளர இட முண்டு. ஏனெனில் வேதி விளைவுகள் பலவற்றில் நீராவி இன்றியமையாப் பொருளாகும். ஆகையால் மின்னுக்க நிலையத்தில் தோன்றும் அமுக்கம் நிறைந்த நீராவியை எந்திரங்களின் வழியே செலுத்தியபின் அது வீணாகாது வேதி விளைவுகளிற் பயன்படுமாறு செய்யலாம். இதனால் நீராவி மின் சாரத்தை அளிப்பதோடு மட்டுமன்றி நிக ழும் வேதி விளைவுகளிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. இதன் விளைவாகச் செலவு குறையும்.

மேற்கூறிய இருவகைகளிலும் நம்நாட் டில் மின்வேதித்தொழில்கள் பெருக இட முண்டு. நீரின் உதவியால் நாம் இப் போது பெறும் மின்சாரத்தைப்போல் ஐம்பது மடங்கைப் பெற இயலும் எனக் கணக்கிடப் பெற்றிருக்கிறது. அப்போது ஏராளமான மின்சார ஆற்றல் மலிவாகக் கிடைக்கும். தென்னாட்டிலும் மற்ற இடங்களிலும் மட்ட ரகமான நிலக் கரியைப் பெறலாம் என்பதும் அண்மை யில் அறியப்பட்டதொரு உண்மை. ஆகை யால் இதை எரித்து மின்சாரத்தைப் பெறலாம். ஆகையால் மின்சாரத்தின் உதவிகொண்டு இரசாயனத் தொழில் நடத்தல் நம் நாட்டிற்கேற்ற முறை யாகும்.

செம்பு முதலிய மட்ட உலோகங்க ளான பாத்திரங்களுக்கும், நகைகளுக் கும், வெள்ளி அல்லது தங்க முலாம் பூசும் தொழில் சிற்றூர்களிலும் இப் போது நடந்து வருகிறது. மின்வேதித் தொழிலுக்கு இது மிகப் பொதுவான மேற்கோள். இதைச் செய்ய முலாம் பூசவேண்டிய பொருளை வெள்ளி அல்லது தங்கத்தையுடைய ஒரு கரைவில் தொங்க விடுவார்கள். அதற்குச் சிறிது தூரத் தில் முலாம் பூசவேண்டிய உலோகத்தின் கட்டி யொன்று கரைவில் தொங்கும். இவ்விரண்டையும் ஒரு மின் கடத்தின் இரு முனைகளோடு இணைத்து மின்சாரம் பொருளின் வழியே கரைவுக்குள் நுழைந்து உலோகக் கட்டியின் வழியே மீளுமாறு செய்யப்படும். இப்போது இருவினைகள் நிகழ்கின்றன. உலோகக் கட்டி சிறிது சிறிதாகக் கரைந்துவரும். அதே சமயத்தில் கரைவிலுள்ள உலோ கம் தனியே பிரிந்து பொருளின் மேற் படிகிறது. முலாம் பூசும் முறை பல துறை களில் பயன்படுகிறது. நாகமுலாம்பூசிய இரும்புத் தகடுகள் எங்கெங்கும் பயன் படுகின்றன. நிகலம் (Nickel), குருமியம் (Chromium) முதலிய உலோகங்களால் முலாம் பூசப்பட்ட பொருள்கள் துருப் பிடிக்காமலும், பளப்பளப்பாகவும் இருக் கும். அவை தேய்ந்து போகாமல் நெடு நாள் உழைக்கும் வலிமையைப் பெறு கின்றன. தொழில் முறைகளில் முலாம் பூசுவதன் பயன் நாளுக்குநாள் அதி கரித்து வருகிறது. தற்காலத்தில் பொருள்களுக்கு ரப்பர் முலாம் பூசு வதிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

தொழில்களுக்கு இன்றியமையாத பல மூலப் பொருள்களை மின்சாரத்தின் உத வியின்றிப் பெற இயலாது. சாதாரண உப்பு நீரின் வழியே மின்சாரத்தைச் செலுத்துவதால் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல பொருள்கள் கிடைக் கின்றன. இம்முறையால் சோடா உப்பு, வெளுக்கும் உப்பு (Bleaching Powder),

முதலிய பயனுள்ள இரசாயன உப்பு களும், நீரகம் (Hydrogen), தீயகம் (Oxygen), பாசிகம் (Chlorine) முதலிய வாயுக்களும் வெளியாகின்றன. இவ் விளைவில் வரும் ஒவ்வொரு பொருளுக்கும் எண்ணிறந்த பயன்கள் உண்டு. இவை ஆயிரக்கணக்கான வேறு தொழில்களிற் பயன்படுகின்றன என்பதிலிருந்தே இவ்விளைவு எவ்வளவு முதன்மையானது என்பது புலனாகும். உலகெங்கும் மிக அதிகமாக வழங்கிவரும் மின்வேதி விளைவு இதுதான்.

அலுமினியத்தின் பயன் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இரும்புக்கு அடுத்தாற்போல் பயனுள்ள உலோகமென இதை மதிக்கலாம். அது முதன்முதற் கண்டு பிடிக்கப்பட்டபோது அதைத் தனியே பெறும் முறை மிகச் சிக்கலானதாயும், கடினமானதாயும் இருந்தது. அருமையாகக் கிடைக்கும் கனியப் பொருள் ஒன்றிலிருந்து மட்டும் அதைப் பெற முடிந்தது. அதனால் அது விலையுயர்ந்த உலோகங்களுடன் சேர்க்கப்பட்டு வழக்கத்திற்கு வராமல் இருந்தது. ஆனால் ஹால் என்னும் மாணவன் பாக்சைட் (Bauxite) என்னும் கனியத்தின் வழியே மின்சாரத்தைச் செலுத்துவதால் இவ்வுலோகத்தைத் தனியே பிரித்துவிடலாமென அறிந்தான். இக்கனியம் உலகெங்கும் ஏராளமாகக் கிடைக்கிறது. அதனால் இப்போது அலுமினியத்தை ஏராளமாகப் பெற வழியேற்பட்டது. இதனால் ஏற்பட்ட மாறுதலால் விந்தைப் பொருளாக இருந்த அலுமினியம் மானிடனது அன்றாட வாழ்க்கையில் பெரிதும் பயன்படும் உலோகமாக மாறிவிட்டது. இதைப்போலவே மின்சாரமுறை இல்லாவிடின் நிலவியம், உவரம் முதலிய வேறு பல உலோகங்களும் அருமையான பொருள்களாகவே இருந்திருக்கும். உலோகத் தொழிலில் மின்சாரம் விளைத்திருக்கும் மாறுதல்கள் எண்ணிறந்தவை. இவற்றால் மின்சாரம் உலோகங்களின் பயனையே மிகைப்படுத்தியுள்ளது எனலாம்.

மின்சாரம் வேதி விளைவுகளை நேரடியாக நிகழ்த்தாவிடினும் பொருள்களைச் சூடேற்றி அவ்விளைவுகள் நிகழ உதவலாம் என மேற்கூறப்பட்டது. சுண்ணயக்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர், ராயப்பேட்டை.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	- ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ 53.00 000
ரிஸர்வ் நிதி	- ரூ. 62,00,000

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்
செக்ரெடரி

கரிதை (Calcium Carbide) என்னும் பொருள் இரசாயனத் தொழிலில் முதன்மையான தொரு மூலப்பொருளாகும். இது சுண்ணும்பு, கரி இவ்விரு பொருள்களை ஒன்று சேர்த்துச் சூடேற்றுவதாற் கிடைக்கிறது. இதற்குத் தேவையான மிகுதியான வெப்பத்தை மின்சாரமே அளிக்கவல்லது. சுதையக் கரிதை செயற்கை உரங்கள் செய்யவும், கரிய இரசாயனத்தில் மிக முதன்மையான அசிடிலீன் (Acyteline) என்னும் வாயுவைத் தயாரிக்கவும் பயன்படுகிறது.

இதைத் தவிரப் பென்சிலில் உள்ள வரையி (Graphite) என்னும் பொருளைச்செயற்கையில் தயாரிக்கவும், உப்புக் காகிதம் போன்ற தீட்டும் பொருள்களைச் செய்யவும் மின்சாரம் இன்றியமையாததாக விளங்குகின்றது. மணலையும் கரியையும் ஒன்று சேர்த்து மின்சார அடுப்பில் சூடேற்றினுல் அவை ஒன்று சேர்ந்து 'கார்பொரண்டம்' என்னும் மிக உறுதியான பொருளாக மாறுகின்றன. தீட்டும் தாள்களும், சக்கரங்களும் இப்பொருள்களாற் செய்யப்படுகின்றன. இதே விளைவில் மின்னடுப்பின் வெப்ப நிலையை உயர்த்தினுல் பொருளில் வேறு மாறுதல்கள் நிகழ்ந்து கரி தனியே பிரிந்து வரையியாக மாறுகின்றது.

சாயங்கள், வர்ணங்கள், மருந்துகள் படப் பிடிப்புப் பொருள்கள் முதலியனவெல்லாம் பெரும்பான்மை கரியை ஒரு மூலப்பொருளாகக் கொண்டவை. ஆகையால் இவை கரியப்பொருள்கள் (Organic substances) எனப்படும். இவற்றை எளிய பொருள்களிலிருந்து சிக்கலான முறைகளால் தயாரிக்கின்றனர். இரசாயன முறைகளால் மட்டும் இதுவரை இவை செய்யப்பட்டு வந்தன. மின்சாரத்தின் உதவிகொண்டும் இவற்றைத் தயாரிக்கலாம் என அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மின்சார முறையிற் செய்யப்படும் பொருள்களிற் சில பழைய முறைகளாற் பெறப்படும் பொருள்களினும் சிறந்தனவாக உள்ளன. ஆகையால் இத்துறையில் வருங்காலத்தில் மின்சாரத்தின் பயன் அதிகரிக்கலாம். இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் சென்னையில் இராசதானிக் கல்லூரியில் நடந்துவருகின்றன. இவை காரைக்குடி நிலையத்தில் தொடர்ந்து நடைபெற்று நாட்டுக்கு நன்மை பயக்கும் உண்மைகளை வெளியாக்க உதவலாம்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் ஆண்டிற்கு நாலரைக்கோடி ரூபாய் பெறுமானமுள்ள இரசாயனப்பொருள்களை வேற்று நாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்துவந்தது. போரின் விளைவாய் இரசாயனத் தொழில் இப்போது ஓரளவு நம் நாட்டில் நிலைபெற்றுள்ளது. இத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களில் பெரும்பான்மையானவை நம் நாட்டில் உள்ளன. முதன்மையான இரசாயனப் பொருள்களைச் செய்யத் தென்னுட்டில் போதிய வசதியுள்ளது. அலுமினியத்தின் கனியமான பாக்சைட்டும், நிலவியத்தின் கனியமான மாக்னசைட்டும் (Magnesite) தமிழ் நாட்டில் ஏராளமாக உள்ளன. ஆகையால் இவற்றைப் பயன்படுத்தி மின்வேதித் தொழில்களைத் துவக்கத் தமிழ்நாடு மிகவும் தகுதியுடையது. ஆகையால் காரைக்குடியில் நிறுவப்பெறும் கழகத்தால் தமிழ்நாடு பெரிதும் பயன் பெறும் என்பது திண்ணம். இவ்வகையில் பண்டித நேரு காரைக்குடியில் நாட்டும் அஸ்திவாரக்கல் தமிழ் நாட்டின் நல்வாழ்வுக்கு அடிகோலவே நாட்டியதாகும் எனல் மிகையாகாது.

எனது லண்டன் பிரயாணம்

M. S. V. தாதம்.

லண்டன் நகர நாட்கள்

இங்கிலாந்தில் தென்புறத்தில் கடற்கரை ஓரமாக இருக்கும் "போர்ன்மத்" என்ற ஊருக்கு அருகில் சுமார் பகல் 2 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். மழையில் வந்தோம். விமானம் கீழே இறங்கும் சமயமே மழை நின்றது. வழக்கமான பாஸ்போர்ட்டுப் பரிசோதனை, வைத்திய பரிசோதனை, சுங்க ஆபீசர்களின் பரிசோதனை எல்லாம் முடிந்ததும் அங்கே அருகில் இருந்த விடுதியில் எங்களுக்கு டீ கொடுத்தார்கள். யாத்ரிகர்கள் தாங்கள் சௌக்கியமாக வந்து சேர்ந்த செய்தியைத் தத்தம் ஊர்களுக்குத் தந்தி அடிக்கவும் அங்கே வசதி இருந்தது.

அதற்குமேல் எங்களை அழைத்துக் கொண்டு ஒரு ஸ்பெஷல் ரெயில் அந்த ஊர் ஸ்டேஷனிலிருந்து 4–15 மணிக்குப் புறப்பட்டு லண்டனுக்கு 6–15 மணிக்குப் போய் சேரும் என்றும், அது லண்டனில் விக்டோரியா ஸ்டேஷனில் 16 நெ. பிளாட்பாரத்தில் நிற்கும் என்றும் ஒரு ஒலி பெருக்கியின் மூலம் தெரிவித்தார்கள்.

பிறகு ஒரு மோட்டார் கோச்சில் எங்களை எங்களுடைய சாமான்களுடன் சேகரித்து அந்த ஊர் ஸ்டேஷனில் கொண்டு போய்விட்டார்கள்.

விக்டோரியா ஸ்டேஷனை நாங்கள் அடைந்த சமயம் இருட்டிவிட்டது. மேலும் ஒரு கனத்த மூடு பனி வந்து லண்டன் நகரம் முழுவதையும் மூடிக் கொண்டிருந்தது. நான் ரயிலிலிருந்து இறங்கினதும் ஒரு இங்கிலீஷ்காரர் என்னிடம் வந்து, "தேத்தம் என்றுவது வ—என்றுவது பெயருடைய யாரையாவது உங்களுக்குத் தெரியுமோ?" என்று கேட்டார்.

"ஏன்? அவர்களைக் கைது செய்ய வாரண்டு வைத்திருக்கிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

எங்களுடைய நண்பர் ஒருவர் கேட்டுக் கொண்டதின்பேரில் அவர் எங்களைச் சந்திக்க அங்கே வந்ததாகவும், அந்த நண்பர் ஸ்காட்லாந்து போயிருப்பதால் தாம் நேரில் வரமுடியாமல் இவரை அனுப்பியதாகவும், அவர் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார். நாங்கள் தங்குவதற்கு என்று ஒரு விடுதி அமைத்திருப்பதாகவும் கூறினார்.

இதற்குள் ரே என்ற ஒரு வங்காளி வாலிபர் அங்குவந்தார். எங்களுடைய மற்றொரு நண்பரால் (அந்த நண்பர் வேல்ஸ் சென்றிருந்தாராம்) அனுப்பப்பட்டுத் தாம் வந்ததாக அவர் கூறினார். இங்கிலீஷ்காரர் தமது மோட்டாரில் எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு போய் அவர் எங்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியில் விட்டார். அந்த விடுதி விக்டோரியா ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருந்தபோதிலும் கனத்த மூடு பனியின் காரணமாக மிகச் சிரமப்பட்டே அவர் தமது மோட்டாரை அங்கே செலுத்தினார்.

எங்களுடைய. சாமான்களை அங்கே வைத்துவிட்டு, ரே என்ற நண்பருடன் ஒரு இந்தியச் சாப்பாட்டு விடுதிக்குச் சென்று சாப்பிட்.டோம். இங்கிலீஷ்காரர் விடை பெற்றுச்சென்றார்.

நாங்கள் திரும்பி வந்ததும் எங்களுடைய வீட்டுக்காரர் எங்களுடன் நீண்ட

நேரம் சம்பாஷித்தார். நாசுக்காக எங்களுடைய அந்தஸ்து, அவருக்குச் சேர வேண்டிய வாடகைப்பணம் சரிவரக் கிடைக்குமா, நாங்கள் சரியாக நடந்து கொள்வோமா என்ற விஷயங்களைத் தெரிந்துகொண்டார். லண்டன் நகர வாடகை விடுதிக்காரர்களுக்கு அவரை ஒரு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். மிகவும் கணக்கு, மிகவும் ஜாக்கிரதை, பண விஷயத்தில் பேராசை என்றே சொல்லலாம்.

காலைச் சிற்றுண்டியை 7-30 மணிக்கு அனுப்புமாறு அவரிடம் சொல்லிவிட்டுப் படுக்கச் சென்றோம். புது இடம், இவ்வளவு தூரதேசம் வந்திருப்பது, எங்களுக்கு வெகு நேரம் வரை தூக்கம் வரவில்லை. சமீபத்தில் ஒரு ஸ்நான அறை இருந்தது. யார் அங்கே சென்று குழாயைத் திறந்தாலும் அது எங்களுக்கு எங்கள் அறைக்கதவைத்தான் யாரோ தட்டுகிற மாதிரி தோன்றும். "உள்ளே வா" என்று கத்துவோம்.

காலை 7-30 மணிக்கு ஒரு வேலைக்காரி தட்டில் எங்கள் இருவருக்கும் ஆகாரம் எடுத்துக்கொண்டு வந்து அறைக்கதவைத் தட்டினாள். ஓட்ஸ், கஞ்சி, ரொட்டி, டோஸ்ட், ஜாம், டீ, ஆகியவை தட்டில் இருந்தன. ஒரு வாரத்திற்கு உரிய சர்க்கரை ரேஷனை வீட்டுக்காரர் எங்களுக்குக் கொடுத்திருந்தார். அதை வாரம் முழுவதும் காணும் விதம் நாங்கள் வைத்துக் கொள்ளவேண்டும்.

முதல் இரண்டு மூன்று தினங்கள் வேலைக்காரி வருவதற்கு முன் நாங்கள் எழுந்து ஆடைதரித்து, தயாராக இருந்தோம். அது பிறகு அவசியமில்லை என்று விட்டு விட்டோம். கதவையும் தாளிடுவதில்லை. தாளிட்டால் அல்லவோ அவள் வந்து தட்டும் சமயம் எழுந்திருக்க வேண்டும்? அவள் கணக்காக 7-30 மணிக்குச் சிற்றுண்டியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விடுவாள். நான் போர்வையைத் தூக்கி என் நண்பன் விழித்திருக்கிறானே என்று பார்ப்பேன்.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ. 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		...	ரூ. 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
ஷா கம்பெனி மங்களூர். (S. K.)
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தராம்தோலா தெரு, கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

அவன் தூங்கிக்கொண்டு இருப்பான். நானும் மறுபடி தூங்குவேன். சிறிது நேரம் கழித்து அவன் தலையைத் தூக்கிப் பார்ப்பான். நான் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவனும் மறுபடி படுத்துக்கொள்வான். இவ்விதம் 10 மணி வரையில் நாங்கள் தூங்குவது சகஜமாகி விட்டது.

* * *

முதல் தினம் லண்டன் நகரத்தைப் பார்க்கப் புறப்பட்ட எங்களுக்கு ஒரு விஷயம் நூதனமாக இருந்தது. ஏற்கனவே சொல்லியவிதம் காலைச் சிற்றுண்டியை எடுத்துக்கொண்டு ஒரு பெண் வந்தாள். பஸ்ஸில் ஏறினால் கண்டக்டர் ஒரு பெண்மணி. பூமிக்கு அடியில் செல்லும் மின்சார ரயிலுக்கு டிக்கட்டு வாங்கச் சென்றால் அங்கும் ஒரு பெண்மணி பிளாட்பாரத்தில் ஒரு பெண்மணி "தயை செய்து வேகமாய்ப் போங்கள்," "கதவு ஜாக்கிரதை" என்று விடாமல் எச்சரிக்கை கூறிக்கொண்டிருந்தாள். ஹோட்டல்களுக்குச் சென்றால் சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பது ஒரு பெண். டெலிபோனில் பேசினால் பெண்களே பதில் சொல்லுவார்கள். யாரையாகிலும் பார்க்கச் சென்றால் அவருடைய செக்கரட்டரி பெண்ணாக இருப்பாள். அவளுடன் பேசியே மூல மனிதருடன் பேசுவதற்குச் சமயம் நிர்ணயிக்க வேண்டும். சினிமா சென்றால் அங்கே டிக்கட்டு விற்கிறவள் பெண்மணி. ஷாப்புகளில் சாமான் விற்கிறவர் அனேகமாய்ப் பெண்களாக இருப்பார்கள். இவ்வளவு பெண்களுடன் சகஜமாகப் பழகுவதற்கு எங்களுக்குச் சில நாட்கள் பிடித்தன.

* * *

நாங்கள் இருந்த வீட்டில் இன்னும் சுமார் பதினைந்து, பதினாறுபேர்கள் ஆண் பெண்கள் குடியிருந்தனர். ஒரு அறையில் எங்கள் இருவருக்குமாக இரண்டு கட்டில்கள் போட்டுக் கொடுத்திருந்தார்கள். அறைக்கும் காலைச் சாப்பாட்டிற்குமாக வாரம் 5 கினி (சுமார் 70 ரூ.) கொடுத்தோம். பகல் போஜனம், இராப்போஜனம் எல்லாம் வெளியே சாப்பிட்டுக் கொள்ளவேண்டும். கணப்புக்கு நாங்களே காசு போட்டுக்கொள்ளவேண்டும். ஆறு பென்ஸ் நாணயம் ஒன்றைப் போட்டால் கணப்பு ஒரு மணி நேரம் எரியும் என்று வீட்டுக்காரன் சொன்னான். ஆனால் எங்கள் அனுபவத்தில் அது முக்கால் மணி நேரம்கூட எரியவில்லை.

* * *

லண்டன் நகரத்திற்குப் புதிதாக வருகிறவர்கள் காணும் காட்சிகள், பிரிட்டிஷ் மியூசியம், பார்லிமெண்டரிக் கட்டிடங்கள், மிருகக் காட்சிச் சாலை, டவர், க்யூ தோட்டம் முதலியவை. அவைகளை நாங்களும் பார்த்தோம். யுத்த காலத்தில் வெடிகுண்டிற்கு இரையாகாமல் இருக்க வேண்டுமென்று மியூசியத்தில் இருந்த உயர்ந்த பொருள்களை எல்லாம் அப்புறப் படுத்தியிருந்தார்கள். நாங்கள் மியூசியம் பார்க்கச்சென்றிருந்தசமயம் சில மாத்திரமே திருப்பிக்கொண்டுவரப்பட்டிருந்தன. ஆனால் மிருகக்காட்சிச்சாலையில் எல்லா மிருகங்களும் திரும்பி வந்துவிட்டன. ஹிமாலயத்திலும், திபேத்திலும் காணப்படுவதான பூனை போன்ற ஒரு சிவப்பு ஜந்து இருக்கிறது. அதற்குப் பண்டா என்று பெயர். சைனாவில் ஒரு பண்டாக் குட்டியைப் பிடித்து அதை லண்டன் மிருகக் காட்சிச் சாலைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தார்கள். பண்டாக் குட்டி வரப்போகிறது என்றசெய்தியைப் பத்திரிகையில் பெரிதாகப் போட்டார்கள். அது ஜலவிமானத்தில் (Sea plane) வரப்போகிறது, அதற்கு முக்கிய ஆகாரமான மூங்கில் நிறையச் சேகரிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்திகள் அடுத்தபடி வெளிவந்தன. பிறகு பண்டாக் குட்டி இன்னும் வரவில்லை, அதற்காகத் தயாரித்த மூங்கில் எல்லாம் வீணாகிவிட்டன என்று செய்தி வந்தது. பிறகு பண்டாக் குட்டி புறப்பட்டு விட்டது என்றார்கள். அப்புறம் திடீரென்று 'அந்த ஜல விமானத்தைக் காணோம். அதற்கு எங்கேயோ ஏதோ விபத்து நேரிட்டது போலிருக்கிறது' என்றார்கள். அதற்கு மேல் ஒரு தினம், பண்டா வந்து விட்டது என்ற செய்தி கிடைத்தது. சினிமா செய்திக் காட்சியில் (News Reel) பண்டாவைக் கொண்டுவரும் ஜலவிமானம் வந்து இறங்குவது, அதிலிருந்து பண்டா வெளியே

எடுக்கப்படுவது முதலிய விஷயங்களைக் காண்பித்தார்கள். மறுதினம் மிருகக் காட்சிச்சாலையில் ஒரே சிறுவர் மயமான கூட்டம். பண்டாக்குட்டியைப் பார்க்க அவர்கள் ஆவலுடன் வந்திருந்தார்கள்.

* * *

இங்கிலாந்தில் இவ்விதம் அவர்கள் செய்யும் செய்கைகள் சிறியது பெரியது எல்லாமும் பத்திரிகைப் பிரசாரத்தின் மூலம் உற்சாகம் உண்டாக்கி, உற்சாகத்தின் மூலம் பெருமை, தன்மதிப்பு, தைரியம் எல்லாமும் ஜனங்களுக்கு உண்டாக்குபவையாக உபயோகிக்கப்படுகின்றன. பிரிட்டனே உலகத்தில் உயர்ந்த தேசம். பிரிட்டிஷ்காரர்களுக்கு ஈடு எவரும் இல்லை என்பது சிறுவயது முதல் போதிக்கப் படுகிறது.

* * *

பார்லிமெண்டு சபையில் அக்கிராசனர் பதவியை வகிக்கும் ஸ்பீக்கர் தமது அறையிலிருந்து சபைக்கு எழுந்தருளுவது நானூறு, ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு எவ்வளவு ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டதோ அதே விதம் இன்றைக்கும் நடக்கிறது. ஸ்பீக்கருக்கு முன்பாக ஒரு ஆள் நடந்து சென்று "Strangers, take off your hats" "புதிதாக வந்திருப்பவர்களே உங்கள் குல்லாயைக் கழற்றுங்கள்" என்று சொல்லிக்கொண்டே போகிறான். ஸ்பீக்கர் கம்பீரமாகச் சபையில் வந்து அமர்கிறார். முன் பெஞ்சியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எதிரில் ஒரு மேஜை இருக்கிறது. அது அவர்களுக்கு இரண்டு கால்களையும் தூக்கி வைத்துக் கொண்டு ஆசனத்தில் சுகமாகச் சாய்ந்து கொண்டுஇருப்பதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கிறது. பின் பெஞ்சிக்காரர்களுக்கு அவ்வித வசதி எதுவும் கிடையாது. அவர்கள் வெறும் பின் பெஞ்சிக்காரர்களே (Back Benchers). நான் சென்ற சமயம் தொழிலாளர் சர்க்கார் பதவிக்கு வந்திருந்த படியால் சர்ச்சில் துரையும், ஈடன் துரையும் எதிர்க் கட்சிப் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தனர்.

* * *

இங்கிலாந்தில் சரித்திர சம்பந்தமானதோ அல்லது மற்றும் விசேஷமானதோ யாத்ரிகர் வந்து காணும் பிரதேசம் எதுவாக இருந்தாலும், அதைப் பற்றிய விவரம், அதன் படம் (Map) ஆகியவை சரியாக அச்சடிக்கப்பட்டு யாத்ரிகர்களுக்குக் கிடைக்கும். அங்கே இருக்கும் வழிகாட்டிகளும் தாங்கள் கூறும் விஷயத்தைப் பற்றி நன்றாக அறிந்திருப்பார்கள். மதுரைக்கு வரும் அமெரிக்க யாத்ரிகர்களிடம் நமது பண்டாக்கள் "மீன்கண் தெய்வம்" (Fish eyed goddess) என்று பேசுவது போல் இராது. லண்டனின் டவர் பார்ப்பது எங்களுக்குக் கஷ்டமாக இல்லை. ரஸமாகவும் இல்லை.

* * *

உலகத்தில் கீர்த்தி பெற்றவர்களை எல்லாம் மெழுகுப் பொம்மையில் செய்து வைத்திருக்கும் டஸ்ஸாட் அம்மையின் ஹாலையும் பார்த்தேன். மகாத்மா காந்தியின் உருவம் நன்றாக இல்லை. ஒருகால் நாற்பது வயதில் காந்தி அடிகள் அம்மாதிரி இருந்தாரோ என்னவோ. இப்பொழுது அம்மாதிரி இல்லை.

லண்டனில் ஸினிமாக்கள் அநேகமாகப் பகல் 3-30 மணிக்கு ஆரம்பிக்கிறார்கள். படம் முடிந்ததும் மறுபடியும் அதையே காண்பிக்கிறார்கள். இவ்விதம் இரவு 9-30 மணிவரை மூன்று முறைகள் ஒரே காட்சி காண்பிக்கப்படுகிறது. குறைந்த விலை டிக்கட்டுகளில்கூட ஆசனங்கள் மிகவும் சௌகரியமாக இருக்கின்றன. ஆனால் மிகக் குறைந்த டிக்கட் இரண்டரை ஷில்லிங் (ரூ. 1 அணு 6.) ஹால் முழுதும் சூடு ஏற்றப்பட்டு, குளிருக்கு அடக்கமாக இருக்கும். ஒரு டிக்கட்டு வாங்கினுல் எத்தனை காட்சிகள் வேண்டுமானாலும் காணலாம். சில சினிமாக்களில் செய்திக் காட்சிகள் மாத்திரம் சிறிய தமாஷ் படங்களுடன் காண்பிக்கிறார்கள். இவ்வித சினிமாக்கள் காலை 10-30 மணி முதல் மாலை 9-30மணி வரை காண்பிப்பார்கள். ஒரு காட்சி சரியாக ஒரு மணி நேரம் காண்பிக்கப்படும். குளிர்காலத்தில் மாலையில் என் அறையில் தனிமையில் உட்கார்ந்து அங்கிருக்கும் கணப்பிற்குக் காசு போட்டு அதை எரிய வைத்துக்கொண்டிருப்பதைவிட இவ்வித செய்திக் காட்சிச் சினிமாக்களில் சென்று

உட்கார்ந்திருப்பது எனக்குப் பிடிக்கும். மலிவாகவும் இருக்கும்.

லண்டன் நாடக சாலைகளில் நடிப்பு மிகவும் உயர்வானது. கிருஸ்துமஸ் சமயத்தில் குழந்தைகளுக்கென்று ஏற்படுத்தப்படும் "பாண்டோமைம்" என்ற "நடிப்பு நாடகங்களில்" ஆடைகள் ஸீன்கள் எல்லாமும் மிக உயர்வாக இருக்கும். இவ்வித நாடகங்களுக்கு அநேக சமயம் டிக்கட்டுகள் மாதங்கள் முன்பாகவே விற்றுப்போய் விடும்.

*　　*　　*

வட இந்தியாவில் டில்லி, பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் இருப்பதைவிட லண்டனில் இருப்பது எனக்கு மிகவும் சகஜமாக இருக்கிறது. முக்கிய காரணம் அந்த ஊர் மொழி தெரிந்திருந்ததே. ஹிந்துஸ்தானியும், குஜராத்தியும், வங்காளியும் பேசும் ஊர்களைவிட இங்கிலீஷ் பேசும் ஊர்களில் இருப்பது சகஜமாக இருந்தது. மேலும் இங்கே இருக்கும் ஜனங்கள் பொதுவில் இன்னும் அதிக மரியாதையுடன் நடந்து கொண்டனர். ஒருவிதமாகப் பார்த்தால் அதிக யோக்யதையும் இருந்தது எனலாம். விடியற்காலையில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பால்காரன் பால் புட்டியை வைத்துவிட்டு, முந்திய தினத்தின் காலிப் புட்டி அங்கே வைத்திருப்பதை எடுத்துச் செல்வான். வீட்டுக்காரர் காலை கண் விழித்துக் கதவைத்திறந்துஅதை எடுத்து, கொள்ளும் வரை அது அப்படியே இருக்கும். தெருவில் பத்திரிகை விற்கும் பையன் ஓர் இடத்தில் பத்திரிகையை வைத்துவிட்டு எங்கேயாகிலும் போக நேர்ந்தால், பத்திரிகை வேண்டுவோர் ஒவ்வொரு பென்னிக் காசை அங்கே வைத்து விட்டு, தங்களுக்கென்று கணக்காக ஒரு பத்திரிகை எடுத்து செல்வார். ரஸ்தா ஓரத்தில் வைக்கப் பட்டிருக்கும் அந்தக் காசை எவரும் தொடமாட்டார்கள். லண்டனில் பிச்சை எடுக்கக் கூடாதென்பது சட்டமாகையால் சில ஏழைகள் நடை பாதையில் சித்திரங்களை எழுதி ஜனங்களை விநோதப்படுத்தி அவர்கள் கொடுக்கும் காசை வாங்கிச் செல்வார்கள். இவ்விதமானவர்கள் சித்திரத்தை எழுதிவிட்டு, அதன் அருகில் தங்கள் குல்லாயை வைத்துவிட்டுச் செல்வார்கள். வருகிறவர் போகிறவர் அந்தக் குல்லாயில் காசைப் போட்டுவிட்டுப் போவார்கள். இவ்விதம் குல்லாயில் சேரும் காசையும் எவரும் தொடமாட்டார்கள். ஆனால் ஊரில் மோட்டார்கள் திருட்டுப் போகும், பாங்கிகள் கொள்ளை அடிக்கப்படும். அதெல்லாம் வேறு.

*　　*　　*

லண்டன் நகரப் போலீஸ் உலகத்திலேயே உயர்ந்த ரகப் போலீஸ் என்பது பிரசித்தம். லண்டன் போலீஸ்காரனை நான் எப்போது போய் வழிகேட்டாலும் அவன் மரியாதையுடனும், தெளிவாகவும், சுருக்கமாகவும் அதைச் சொல்வான். ஆனால் அவன் அவ்விதம் பேசுவதில் அவனுடைய வேலைக்குத் தவக்கம் இல்லாமல் பார்த்துக்கொள்வான். பாரிஸ் நகரத்தில் நான் ஒரு போலீஸ்காரனை வழிகேட்ட சமயம் அவன் தனது பையிலிருந்து ஒரு நகரப்படம் எடுத்துப் பெரிதாகச் சைகைகள் செய்து விவரங்கள் கூறினான். அந்த நாலைந்து நிமிஷம் வரை எல்லா வண்டிகளின் போக்குவரத்தும் தடைப்பட்டது. எல்லாரும் என்னை விறைத்துப் பார்க்கலானார்கள்.

விக்டரி ஊர்வல தினத்தன்று லண்டனுக்கு வந்திருந்த ஏராளமான கும்பலை லண்டன் போலீஸ் சமாளித்த சமயம் நான் அவர்களுடைய முழுத்திறமையையும் காணச் சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் அற்புதமாக வேலை செய்தனர்.

அந்த யுத்த விஜய ஊர்வல தினத்தன்று லண்டனில் ஏராளமான கும்பல். முதல் தினம் மாலையே முக்கிய இடங்களில் ஜனங்கள் வந்து உட்கார ஆரம்பித்து விட்டனர். அச்சமயம் என்னுடைய சித்தியாவும் லண்டனுக்கு வந்திருந்தார். "நாம் நாளைக்கு இங்கே இருக்க வேண்டாம், ஊரில் சாப்பாடே கிடைக்காது, கும்பல் தாங்க முடியாது, வெளியூர் போவோம்" என்று அவர் சொன்னார்.

இந்த ஊர்வலத்தை அவசியம் பார்க்க வேண்டுமென்று சொல்லி நான் அவருக்குச் சாப்பாட்டிற்கு உத்தரவாதம் அளித்து இருக்கச் செய்தேன். ஊர்வல தினத்தன்று காலை சுமார் 9-மணிக்கு

ஹைட் பார்க் என்ற தோட்டத்தின் மூலே ஒன்றின் அருகில் ஒரு பஸ் ஸ்டாண்டு இருப்பதைக் கண்டு அதன் கூரைமேல் ஏறி நாங்கள் இருவரும் ஊர்வலம் பார்க்க உட்கார்ந்தோம். அந்தக்கூரை சற்றுக் கடபுடா என்று ஆடிற்று. எங்கள் இருவருடைய கனத்தையும் தாங்குமா என்று சற்று ஜாக்கிரதையுடன் பரீக்ஷித்துப் பார்த்தே உட்கார்ந்தோம். சற்று நேரத்திற்கெல்லாம் இன்னும் நாலைந்து பெண்களும் அதன்பேரில் ஏறி உட்கார்ந்து விட்டனர். நல்ல வேளையாகக் கூரை எல்லோரையும் தாங்கிற்று.

10-30 மணிக்கு அரசர் குடும்பம் ராயல் கோச்சு வண்டியில் ஊர்வலம் வந்தது. அதற்குப் பிறகு டாங்கிகள், பீரங்கிகள், ஜீப்புகள் முதலிய மெஷின் படை வந்தது. அடுத்தது அமெரிக்கக் காலாட்படை. அதற்கும் அடுத்த ஸ்தானம் ருஷ்யப் படைக்கு என்று வைத்திருந்தார்கள். ஆனால் ருஷ்யர்கள் இங்கே வந்து ஊர்வலம் செல்ல மறுத்துவிட்டனர். ஆகையால் பிரஞ்சு சிப்பாய்கள் அடுத்தபடியாக வந்தனர். கானடிய, ஆஸ்திரேலிய, ஆப்பிரிக்க துருப்புகள் சென்ற பிறகு இந்தியத் துருப்புக்கள் வந்தனர். உண்மையிலே அவர்கள் மிகத் திறமையுடன் நேர்த்தியாக அணிவகுத்துச் சென்றனர். இந்தியத் துருப்புகளுக்கு அந்தக் கூட்டம் கொடுத்த கரகோஷமும், வாழ்த்தும் வர்ணிக்க இயலாது. தங்களுடைய முழு உள்ளத்துடனும் இந்தியர்களின் வீரத்தை ரசித்து அந்த லண்டன் நகரக் கூட்டம் அவர்களை ஆர்ப்பரித்துக் கொண்டாடிற்று. இந்த யுத்தத்தில் இந்தியர்கள் ஆப்ரிகாவிலும், இத்தாலியிலும் காண்பித்த திறமையும், தைரியமும் இங்கிலாந்து மனிதரின் மனதையே கொள்ளை கொண்டுவிட்டிருக்கிறது எனலாம். நமக்கு இவ்வளவு சீக்கிரத்தில் சுயராஜ்யம் கொடுக்கப் பிரிட்டன் முன்வந்திருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் நமது இந்தியத் துருப்புகளின் திறமையாகும்.

கூரைமேல் உட்கார்ந்து இருந்த எங்கள் இருவருக்கும், இந்தக் கூட்டத்தில் உள்ளத்திலிருந்து பொங்கிவரும் இந்த உணர்ச்சி மிகவும் ஆச்சர்யமும் பெருமையும் உண்டாக்கிற்று.

சுமார் 1-30 மணிக்கு ஆகாய விமானங்கள் நாங்கள் இருந்த இடத்திற்கு அருகில் பறந்தன. மழையும் ஆரம்பித்தது. ஊர்வலம் பார்த்ததுபோதுமென்று நாங்கள் எங்களுடைய சாப்பாட்டிற்கென்று முன்பே சொல்லி ஏற்பாடு செய்திருந்த "தில்தார்" என்ற ஹோட்டலுக்குச் சென்றோம்.

* * *

தில்தார் ஹோட்டல்காரர் மேனன் என்ற ஒரு மலையாளி. பாரிஸ்டர் பரீக்ஷைக்காகப் படிப்பதற்கு லண்டனுக்கு வந்தவர். பிறகு மனதை மாற்றிக் கொண்டு இந்தியர்களுக்கென்று ஒரு ஹோட்டல் வைத்து ஜீவனம் செய்துவருகிறார்.

இங்கிலீஷ் சிற்றுண்டிச் சாலைகளில் சாதாரணமாகச் சாப்பாடு எந்த விதம் இருந்தபோதிலும், மேஜைமேல் விரிக்கும் துணி நல்ல வெளுப்பாக இருக்கும். கீழே சமையற்கட்டு, மேலே சாப்பிடுமிடம். ஒரு சிறிய தூக்கில் (Lift) சாப்பாடு வைத்து மேலே அனுப்பப்படும். அங்கிருக்கும் வேலையாள் அதை எடுத்து எல்லோருக்கும் கொடுப்பான். இன்னும் வேண்டியதை ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதிக் கீழே அனுப்புவான். ஆனால் லண்டனில் இருக்கும் இந்தியச் சிற்றுண்டிச் சாலைகளில் இவ்விதம் இராது. துணி சுத்தமாக இருக்காது. நாம் கேட்கும் சாப்பாட்டை வேலையாள் அந்தத் தூக்கிவரும் கிணற்றண்டை சென்று கீழே இருப்பவர்களுக்குக் காது கேட்கும் வண்ணம் கத்துவான். தில்தார் ஹோட்டலில் துணி சுமாராக வெளுப்பாக இருக்கும். அநேக சமயம் நமது தேவையை மேனன் கடிதத்தில் எழுதி அனுப்புவார். சில சமயமே இரைவார். அந்த ஹோட்டலில் காப்பி நன்ருக இருக்கும். இங்கிலீஷ்காரர் யாரையாகிலும் ஒருமுறை அங்கே அழைத்துச் சென்றுமேயானால் பிறகு மீண்டும் மீண்டும் அங்கே காப்பி சாப்பிடுவதற்கென்று அழைத்துப் போகுமாறு வேண்டுவார். சப்பாத்தி, பூரி தவிர தயிரும் அங்கே கிடைக்கும்.

லண்டனில் நெ. 10, டவுனிங்தெரு என்பது பிரதம மந்திரி வாசம் செய்யும் வீடு. வீடு சாதாரணமாகத்தான் இருக்கும். ஆனால் அந்த 10 என்ற நம்பர் போட்ட பிளேட்டைப் பளபளவென்று துடைத்து வைத்திருப்பார்கள். நாங்கள் அதைப் பார்க்கச் சென்றிருந்த சமயம் அருகில் காவலாக இருந்த போலீஸ்காரனை இந்த வீட்டைப் படம் பிடிக்கலாமா என்று கேட்டோம். பிடிக்கலாம், அமெரிக்காவிலிருந்து வரும் பத்திரிகை நிருபர்களும் யாத்ரிகர்களும் இதைப் பார்த்துப் படம் எடுக்காமல் போவதில்லை என்று பெருமையாகச் சொல்லிவிட்டு "உங்கள் படத்தில் விழும்படி நானும் நிற்கலாமா?" எனக் கேட்டான். நாங்கள் சந்தோஷமாகச் சம்மதித்தோம்.

* * *

கிறிஸ்துமஸ் சமயத்தில் லண்டனிலும் இங்கிலாந்திலும் அந்தப் பண்டிகையை எல்லோரும் ஒருமித்து மிகச் சந்தோஷத்துடன் கொண்டாடுகிறார்கள். நம்மில் அவ்வளவு சந்தோஷமாக நாம் எந்தப் பண்டிகையையும் கொண்டாடுவதில்லை. அச்சமயம் கணவனும் மனைவியும், உறவினர்களும் ஒருவருக்கொருவர் பரிசு கொடுத்துக் கொள்வார்கள் என்பது நமக்குத் தெரிந்ததே. அந்தப் பரிசு அழகாக இருக்கவேண்டும். உபயோகமாக இருக்கவேண்டும். பரிசு பெறுபவர் தமக்கு வேண்டுமென்று ஆசைப்படுவதாக இருக்கவேண்டும். பரிசு கொடுப்பவரின் பணத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். "என் மனைவி இந்தப் பரிசு கொடுத்தாள்" "என் கணவர் இந்தப் பரிசு கொடுத்தார்" என்று பெருமையாக வெளியில் சொல்லிக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேம்பட்டதாக அது பரம ரகசியமானதாய், பரிசு வாங்கிக்கொள்ளப்போகிறவரால் அது எதுவாக இருக்கும் என்று சிறிதும் ஊகிக்க முடியாததாக இருக்கவேண்டும். இவ்வித உத்தேசத்துடன் வீட்டு வேலையை முடித்துக் கொண்டு மாலை 2 மணிக்கு மனைவி புறப்பட்டு ஷாப்பிற்குச் செல்வாள். இதே உத்தேசத்துடன் கணவன் ஆபீஸில் பிற்பகல் லீவு எடுத்துக்கொண்டு வருவான். இருவரும் ஷாப்பில் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டு இரகசியம் தெரிந்துவிடுமே என்று பயந்து வெவ்வேறு வழியாக ஓடி வேறு கடைக்குச் செல்வார்கள். கிருஸ்துமஸ் சமயத்தில் எங்கே பார்த்தாலும், யார்முகத்திலும் சந்தோஷமும் கொண்டாட்டமுமாக இருக்கும்.

* * *

லண்டன் பத்திரிகைகளைப் பற்றியும் அவர்கள் செய்தியைப் பெரிதாக எழுதுவதைப்பற்றியும் முன்பே குறிப்பிட்டேன். யுத்தகாலத்தில் இங்கிலாந்து வாசிகளுக்குப் பழங்களே கிடைக்கவில்லை. நான் சென்றிருந்த சமயம் ஒரு கப்பல் வாழைப்பழம் வந்தது. அதை ஒருவாரம் பத்திரிகைகள் கொண்டாடின. "வாழைப் பழம் வரப்போகிறது" "நாளை வந்து விடும்" "சர்க்கார் வாழைப்பழ வினியோகத்திற்காகச்செய்திருக்கும் ஏற்பாடுகள்," வாழைப்பழம் வந்துவிட்டதாம்," "வாழைப்பழம் கப்பலிலிருந்து இறக்கப் படும்காட்சி" "குழந்தைகள்வாழைப்பழம் வாங்கித்தின்னும் காட்சி" என்றிம்மாதிரி.

இந்திய கிரிக்கட் கோஷ்டியினர் அங்கே வருவதாகச் செய்தி வந்ததும் லண்டன் பத்திரிகைகளில், "ஹோட்டல்களில எப்போதுமே இடம் கிடைப்பது கஷ்டம். இந்நாட்களில் அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சமீபத்தில் வரவிருக்கும் இந்தியகிரிக்கட் கோஷ்டியினர் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்வதுபற்றி வரவேற்புக் கமிட்டியார் மிகவும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. இரண்டு மூன்று பேர்களுக்கென்று சேர்ந்து ஒரு அறை ஏற்படுத்தினால் அது சரிப்படாதாம். ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறை வேண்டுமாம். 'அவன் ராத்திரி இரண்டு மணிக்கு எழுந்து உட்கார்ந்து யோகாப்யாசம் செய்வான். என் தூக்கம் கெட்டு விடும்' 'இவன் சாப்பிடுவதைப் பார்ப்பது எனக்கு அருவருப்பாயிருக்கும்.' 'நான் சாப்பிடுவதை அந்நியர் பார்க்கவே கூடாது' என்றெல்லாம் அவர்களுக்குள் புகார் ஏற்படுமாம்."

"மர்ச்செண்டு என்பவர் உண்மையில் ஒரு வியாபாரிதானும். அவர் தகப்பனார்

என்னுடைய மகளின் பிரஸவம் கவலையின்றி முடியும்படி உறுதி கொண்டேன்
... பிரஸவத்திற்குமுன்பும் அதற்கு பிறகும் விஷ கிருமிகளால் அபாயம் நேராமல் பாதுகாக்க'டெட்டால்' உபயோகிக்கவும்
நல்லது, வீட்டில் 'டெட்டால்' இருப்பதால், விஷ கிருமிகளால் யாதொரு அபாயமும் நேராமல் அது பாதுகாக்கும்
நினைக்கிறாள் அவள் சௌக்கியமாய் இருக்கிறாள் என்று கேட்க எவ்வளவ ஆறுதல்
'டெட்டாலின்' உதவியால் பூரணமான சௌஸ்தம்
பிரஸவ சமயத்தில் ஒவ்வொரு ஸ்திரீகளும் 'டெட்டாலை' யே நம்பி உபயோகிக்கும்படியும் மற்றும் எல்லா சமயங்களிலும் 'டெட்டாலை' வீட்டில் வைத்திருக்கும்படியும் சிபார்சு செய்கிறேன்
ANTISEPTIC
DETTOL
NON-POISONOUS GERMICIDAL
'DETTOL'
TRADE MARK
அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிட்டெட். 201 செல்டா ரோடு கல்கத்தா
B 4

பம்பாயில் ஆலைமுதலாளியாம். லக்ஷாதிபதியாம்.''

''அமர்நாத் என்ற பெயரை, அமர் நாத் என்று எழுதுவதா, அமர்நாத் என்று சேர்த்து எழுதுவதா'' என்றெல்லாம் பத்தி பத்தியாக வம்புச் செய்திகள் வெளியாயின.

ஒருவன் ஒரு போஸ்ட் ஆபீசுக்குச் சென்று அங்கே கொடுத்து வைத்திருந்த பணத்தைத் திருப்பிக் கேட்டான். அதற்குப் போஸ்ட் மாஸ்டர் உன்னுடைய அத்தாக்ஷிக்கார்டை (Identity Card) காண்பி என்று கேட்டாராம். யுத்தசமயத்தில் லண்டனில் ஒவ்வொருவருக்கும் அவரை அவர்தான் என்று ருசுப்படுத்துவதும், அவரைப் பற்றின விவரம் அடங்கியதுமான ஒரு கார்டு கொடுக்கப் பட்டிருந்தது. அதிகாரிகள் எப்போது கேட்டாலும் அதைக் காண்பிக்கவேண்டியது ஒவ்வொருவருக்கும் கடமை.

''என்கார்டு என்ஜேப்பியில்இருக்கிறது. ஆனால் இது என்ன யுத்த சமயமா? அதை நான் உனக்கு எதற்காகக் காண்பிக்க வேண்டும்? நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டால் என்னுடைய கார்டைக் கேட்க உனக்கு என்ன அதிகாரம்?'' என்று அவன் போஸ்ட் மாஸ்டரை எதிர்த்துக் கேட்டானாம். இதைப் பத்திரிகையில் வழக்கம்போல் பெரிதாக எழுதினார்கள். கன்சர்வேடிவ் பத்திரிகைகளில், ''இங்கிலாந்தே பாழாகிவிட்டது! குட்டிச்சுவராகிவிட்டது!(எல்லாம் இந்தத் தொழிலாளர் சர்க்காரால் என்ற தோரணையில்) சாம்ராஜ்யம் அழிந்துவிட்டது. மனிதரின் சுதந்திரம் போய்விட்டது. கொடுத்த பணத்தைத் திருப்பிப் பெறுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எதற்கு எடுத்தாலும் அத்தாக்ஷிக் கார்டு கேட்கிறார்கள்!!'' என்று எழுதினார்கள்.

* * *

யுத்த சமயம் எல்லா இங்கிலீஷ்காரரும் சண்டைக்குச் சென்றுவிட்டனர். அமெரிக்க சிப்பாய்கள் கப்பல் கப்பலாக வந்து இங்கிலாந்தில் இறங்கினர். அவர்களுக்கு நல்ல சாப்பாடு சாப்பிட்டு வாட்ட சாட்டமான சரீரம். கையில் நிறையப் பணமும் உண்டு. இங்கிலீஷ் பெண்களெல்லாம் அவர்களைக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டனர்.

நாலைந்து வருஷமாக இங்கே இருந்த அமெரிக்க சிப்பாய்கள் இப்போது திரும்பி தமது யுத்தக் கப்பல்களில் ஊருக்குப்போய்விட்டார்கள். இவர்களுடைய மனைவிகளும், குழந்தைகளும் எப்படி அமெரிக்கா போவது? அவர்களுக்குக் கப்பல் கிடையாது. அவர்கள் ''நாங்கள் எப்படி கணவரிடம் போகிறது?'' என்று புகார் செய்கிறார்கள். அமெரிக்காவில் இருக்கும் பெண்களோ என்றால் ''எங்கள் ஊர் பிள்ளைகள் சண்டைக்குப்போய்விட்டு வந்து எங்களைக் கல்யாணம் செய்து கொள்வார்களென்று காத்திருந்தோம்! இப்போது எங்களுக்கு எப்படி கல்யாணமாகும்? அந்த மனைவிகளெல்லாம் இங்கே வந்தால் இனி எங்களுக்குத் தொழில் செய்து ஜீவனம் செய்வதுகூடக் கஷ்டமாகிவிடும். அவர்கள் போட்டிக்கு வருவார்கள். அவர்களெல்லாம் அவர்களுடைய ஊர்களிலேயே இருக்கட்டும். இங்கே வரவேண்டாம்'' என்று கூறுகிறார்கள். இவர்களுடைய சச்சரவுகள் எப்படி இருந்தபோதிலும் அமெரிக்க சர்க்கார் தங்களுடைய சிப்பாய்களிடம் கொண்டிருக்கும் பக்ஷபாதத்தினால் கப்பல்கள் தயாரித்து, கப்பல்களில் குழந்தைகள் விளையாடுவதற்கு இடம், விளையாட்டுச் சாமான்கள், மேற்பார்வைக்கு ஆயாக்கள் எல்லாம் தயாரித்து இந்தச் சிப்பாய்களின் மனைவிகளை, அவர்கள் இங்கிலாந்தில் எந்த இடத்தில் இருந்தபோதிலும், ஒரு பைசா செலவில்லாமல் சர்க்கார் செலவில் அழைத்துக்கொண்டு போய் அமெரிக்காவில் விடுகிறார்களாம். ஆனால் மற்றொரு சிக்கல் ஏற்படுகிறதாம். அமெரிக்க கணவனுக்கும் இங்கிலீஷ் மனைவிக்கும் ஒற்றுமை ஏற்படுவதில்லையாம். சண்டை இடுகிறார்களாம். சில பெண்கள் விவாக ரத்து செய்துகொண்டு மீண்டும் இங்கிலாந்து வந்துவிடுகின்றனராம். சில கணவன்மார்கள் தங்கள் மனைவிகளுக்கு ''நீ இங்கே வரவேண்டாம். அங்கேயே இரு. இங்கிருந்தே நான் உன்னை விவாக ரத்து செய்துவிடுகிறேன்'' என்று தந்தி அடிக்கின்றனராம்.

198046

"காந்தி உங்களிடை எவ்விதப் பதவியை வகிக்கிறார்?" "ஜின்னா என்பது யார்?" "நீங்கள் ஏன் உங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதில்லை?" என்ற கேள்விகளையே மீண்டும் மீண்டும் என்னை இங்கிலாந்தில் கேட்டார்கள். இங்கிலாந்தில் பொது மக்களிடை இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பது பற்றி இரண்டு வித அபிப்பிராயம் கிடையாது. அதைக் கட்டாயம் கொடுத்துவிட வேண்டும் என்றே எல்லாரும் விரும்புகின்றனர். இங்கிலீஷ்காரர் இந்தியாவில் வந்து சில தவறுகள், குற்றங்கள் அல்ல, சில தவறுகள், (Blunders) செய்திருப்பதாயும் சிலர் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் சமாதானத்தை நிலைப்படுத்தும் வகையில் சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கின்றனர். நான் இங்கிலாந்திற்குச்சென்ற வேலையின் நிமித்தமாகப் போன இடங்களில் எல்லாம் இவ்விதம் அரசியல் விஷயத்தைப் பேச ஆரம்பித்து விடுவார்கள். நானும் விடை அளிப்பேன். மணிக்கணக்கில் பேசிக்கொண்டு இருந்து விடுவோம். நான் சென்ற வேலையை முடித்துக்கொள்ளாமல் வீடு வருவேன். இவ்விதம் பல முறை நடந்தது. இருந்தும் இங்கிலாந்தில் நான் கழித்த நாட்களை வீண் என்று நான் கருதவில்லை. மிக்க திறமைசாலிகளான ஒரு குலத்தினரிடம் பழகினோம் என்ற உணர்ச்சியே இருக்கிறது.

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
[ற.ட நெ 61, மெடிகேட்ட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதவும்.
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி
முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸூம் கூந்தல் செழிப்புக்கு நீங்களே
தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.
டிப்போக்கள்: மதுரை, கோவை, கும்பகோணம், பம்பாய்.

அந்தகனூர்

ரா. ஸ்ரீ. தேசிகன்

அந்தகநல்லூர் கடற்கரை மணல்மீது அமர்ந்து இருவர் பேசிக்கொண்டிருந்தனர். அந்திப் பொழுதில் எங்கே பார்த்தாலும் ஒரு தனி யெழில் தாண்டவமாடுகின்ற தருணத்தில், இவர்கள் உள்ளம் இருண்டு கொண்டே வந்தது. புறத்தில் ஒரு புகலரும் அமைதி விரிந்து சிவந்தது; ஆனல் இவர் அகத்தில் ஒரு பெரும் புயல் ஓலமிட்டது. அவ்வோலமும் பேச்சின்மூலம் ஓர் உருவம் எடுத்தது.

"நம்முடைய ஊருக்கு அந்தக நல்லூர் என்ற பெயர் வந்த காரணம் தெரியுமா?" என்று வினவினுர் சந்திர சேகரர்.

"தெரியாதே," என்று பதிலளித்தார் கோபாலராம்.

"யமனுக்கு 'அந்தகன்' என்ற மற்ருெரு பெயர் உண்டென்பதை நீங்கள் அறியீரோ?"

"ஆம்; தெரியும்"

"இந்த ஊரிலுள்ளோர் யமனைத் தங்கள் ஞானத்தால் வென்றுவிட்டார்களாம். அவன் அவர்களுக்கு நல்லவனுகி விட்டானும்"

"யமனை வெல்ல முடியுமா?"

'முடியும்', யமனை வெல்லுவதென்ருல் நாம் சரீரமில்லை, அழிவற்ற ஆத்மா என்ற ஞானமடைவதே. சிவபிரான் சுடு காட்டில் தாண்டவம் செய்கிருன் என்பதைப் பற்றிக் கேட்டிருப்பீர்களே"

"ஆம் கேட்டிருக்கிறேன்."

"அதன் உண்மை இதுதான். அண்டங்கள் ஒன்ருேடு ஒன்று முட்டி நொறுங்கி, கீழே சாம்பற் குவியலாய்ப் போனுலும் சரி, பிரபஞ்சம் மடிந்து எலும்புக் குவியலாய் மண்டை ஓடுகளின் மலையாய்க் காட்சியளித்தாலுஞ் சரி, என்னை அழிக்க வல்லதோ இந்தக் கொடுங் கூற்றம் என்று வீர வாசகம் பேசி வெற்றி முரசொலிக்கிடையே ஆத்மா தாண்டவமாடுகின்றது. அதுதான் சிவபிரானின் நடனம்"

"இதை நான் இதுகாறும் உணரவில்லையே. இத்தகைய ஆத்ம தரிசனங் கண்ட சான்ருேர்கள் வாழ்ந்த ஊர் அந்தகனூராய்ப் போய்விடும் போலிருக்கிறதே".

"அந்தகன் என்ருல் என்ன? யமன் என்றது தெரியும்"

"குருடனுக்கும் பெயர்"

"சிலேடையாய்ப் பேசினீர்களா? இப்பொழுது விஷயம் விளங்கிற்று. ஏன் இப்படி சொல்லுகிறீர்கள்?."

"சொல்லாமலே விளங்கும். சற்றுக் கண்ணைத்திறந்து பார்க்க வேண்டியதுதான். விஜயநதிப் பாலம் உடைந்து ஆயிரக்கணக்காக ஜனங்கள் அழிந்த செய்தியை அறியாதார் யார்?"

"நன்கறிவேன்."

"புதிதாய் அமைக்கப்பட்ட பாலம் அழிந்ததன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தீர்களா?"

"இல்லை"

"அறிவுள்ள இஞ்சினீயர்கள் இந்த நாட்டை விட்டு அகன்றுவிட்டனர்."

"எங்கே போனுர்கள்?"

"வேதபுரிக்கு"

"அது எங்கேயிருக்கிறது"

"வடக்கே இரண்டாயிரம் மைலுக்கப்பாலுள்ளது." அறிவாளிகள் போய் விட்டால், அஞ்ஞானம் வந்து சூழத்தானே செய்யும். இருட்டில் வழியிழந்த அந்தகனைப் போலத் துழாவ வேண்டியது தான்."

"உண்மை வெளியாயிற்று"

"வகுப்பு வெறி பிடித்து அறிவாளிகளின் மமதை விழுந்து பிடுங்குகின்றனர். அபிமான அந்தகாரம் அறிவின் ஒளியை மறைத்துவிட்டது. அறிவுத்தாகம் தணிய

மாணவர்கள் வேதபுரிக்குப் போய்க் கொண்டே யிருக்கின்றனர். வகுப்புப் பொருமையையும் பகைமையையும் வளர்க்கக்கூடிய பள்ளியில் படித்த இஞ்சினீயர்கள் கட்டிய பாலம் நிலைத்து நிற்குமா? கட்டினவர்கூட அந்த வகுப்பிலே உள்ள அறிவாளிகள் இல்லை; பொதுக் காரிய அமைச்சருக்கு வேண்டிய வராயிருத்தல் வேண்டும். பொதுக் காரியத்தில் விருப்பு வெறுப்புக்கு இட முண்டோ?."

"இருக்கக் கூடாது தான்; இருக்கிறதே நாம் என்ன செய்ய முடியும். மனச் செம்மை, நல்லறம், அன்பு இவைதாம் சமுதாயத் தூண்கள். இவைகள் அஸ்தி வாரமாக அமையாது போனால், எந்தச் சமூகமும் அழிந்தே போய்விடும்"

"ஏன் அவர்கள் உணரவில்லை"

"இந்த வெறியில் ஒன்றும் உணரமுடி யாது. அஞ்ஞானம் அறியாமை மீது ஆணைசெலுத்துகிறது. இதில் உண்மை ஒளிக்கு இடமுண்டோ?"

"இல்லை தான்"

"ஏன் வேறு கேள்வி கேட்கின்றீர்கள்"

கட்டிட வேலையோடு இந்த அறியாமை நின்று விடுகிறதில்லை. ஒவ்வொரு துறை யிலும் அது பரவுகின்றது. சங்கீதமா, வகுப்புச் சங்கீதம், கவிதையா வகுப்புக் கவிதை, வைத்தியமா வகுப்பு வைத்தியம், வக்கீல்தொழிலா வகுப்பு வக்கீல்தொழில். எல்லாம் வகுப்பு மயம் ஜகத்"

"வக்கீல் தொழிலிலும் வகுப்பு லட்சி யம் வந்தால், பொருளுக்குச் சேதம் வந்து விடுமே"

"ஆம், வரத்தான் வரும்"

"வைத்தியத்தில் வகுப்பு முறையைப் பார்த்தால் என்ன வரும் தெரியுமா?" என்றார் சந்திர சேகரர்.

"உயிருக்குச் சேதம்"

நம் நாட்டிலுள்ள பிரபல வக்கீல்கள் அகன்றுவிட்டனர். தக்க வைத்தியர்க ளுக்கும் இடமில்லை. அவர்களும் வேத புரியை அலங்கரிக்கின்றனர்."

"இந்த ஊரிலுள்ள வக்கீல்களும் வைத் தியர்களும் யாருக்குப் பயன்படப் போகி றார்கள்." ஒரு விதத்தில் பயன் படுவார் கள். அவர்கள் விரோதிகளுக்கு வைத் தியம் செய்யட்டுமே; அவர்கள் தம் பகை வர்களின் வழக்குகளைத் தீர்த்துவைக் கட்டுமே."

"இந்நிலையில் என்ன ஆகும்?"

"ஓரிடத்தில் இருள் செறிந்து வளரும்; மற்றோரிடத்தில் ஒளி எழும்பு மன்றோ?"

"ஆம்"

"இந்த நாட்டில் அந்தகாரம்; வேத புரியில் ஞான ஒளிதான்.

இவ்விருவர் மனத்தில் எத்தனையோ சலனங்கள் எழுந்து எழுந்து ஓய்ந்தன. இரவும் வளர்ந்து கொண்டேயிருந்தது. நீண்ட இரவோடு விரிந்துகொண்டே போயிற்று இவர் சிந்தனைச் சாகரமும்.

* *

வேதபுரியில் ஒரு தெருவில் நகர மாந் தர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

"ஊரில்" ஜனங்கள் அதிகமாகிக் கொண்டுவருகின்றனரே; விலை வாசிகள் வளர்கின்றனவே" என்கிறான் ஒருவன்.

"விலைவாசிகள் உயர்ந்தால் என்ன? மகான்கள் குடியேறிவிட்டனர். நமக் கொன்றும் குறைவில்லை. நாட்டின் நாக ரிகம் பொருட் செல்வத்தில் மட்டுமில்லை, கவிதையிலும், சிற்பத்திலும், ஓவியத்தி லும், சாத்திர நுட்பத்திலும், ஒழுக்கத் திலும், அன்பிலும், அருளிலும், அது திகழ்கின்றது" என்று பதில் சொல்லு கின்றான் மற்றொருவன்.

ஒரு பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத் தியாயர் உட்கார்ந்திருக்கிறார். உள்ளே வராதபடி தடுக்க அவர் வாசற்படியில் ஒருவருமில்லை. ஒரு மாணவன் உள்ளே அச்சமின்றிச் செல்கிறான்.

"யார் நீ, உட்கார்"

"அந்தகநல்லூரிலிருந்து வந்திருக்கி றேன்" என்று தன்மார்க்குப் புத்தகத்தை நீட்டுகிறான் அம்மாணவன்.

அம்மாணவன் மார்க்குகளை அவர் உற்று நோக்குகின்றார். வியப்புக் குறி கள் அவர் முகத்தில் எழுகின்றன.

"எந்தத் துறையில் உனக்கு இடம் வேண்டும்"



அஞ்சலி தேவியின்

சருமம் லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகப் படுத்துவதால் மிருது வாகவும் மென்மை யாகவும் இருக்கின்றது.

"லக்ஸ் டாய்லட் சோப் என்னுடைய தவறாமல் அழகு படுத்தும் முறை" என்று அழகிய அஞ்சலி தேவி சொல்கிறார். "அதனுடைய வெண்ணிறம் கொண்ட நுரை என்னுடைய சருமத்தை மிருதுவாகவும் தூய்மையாகவும் சுத்தம் செய்கின்றது. மென்மையான சருமத்தை விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் நான் செய்வது போல லக்ஸ் டாய்லட் சோப்பினால் சுத்தம் செய்து கொள்ளவேண்டும்."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS 189-23 TM

"கணக்குத் துறையில் இறங்க விழை கின்றேன்"

"நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கிருயே அங்கே இடமில்லையா?"

"குறைத்து வாங்கினல் இடமுண்டு"

"அப்புண்ணியத்தை நீ ஏன் செய்ய வில்லை? அங்கேயே இடம் கிடைத்திருக்குமே!" என்று குறும்பு நகை உதட்டில் அரும்பச் சொன்னர்.

"அறிவை ஏன் பகவான் கொடுத்தான் என்றதற்கு வருந்துகிறேன்"

"இங்கே அறிவுக்கிடம் உண்டு; ஆற்ற லுக்கு இடமுண்டு; இதோ அனுமதி தந் திருக்கிறேன்; வேண்டிய வகுப்பில் சேர் வாயாக" என்று தலைமை உபாத்தியாயர் உத்தரவளிக்கின்ருர். மாணவன் உள் ளத்தில் புகலரும் உவகை பொங்கி எழு கின்றது.

* *

"வெகு அழகாய் வைத்தியம் செய்கி றீர்களே. உங்களூரில் உங்கள் அரு மையை அறிய முடியவில்லையே" என்று நோயாளி கேட்கிருன்.

"மந்தர் குலத்தில் நான் பிறந்திருக்க வேண்டும். அந்தப் பாக்கியம் நான் புரிந் திலேனே".

'நீங்கள் எந்தக் குலத்தைச் சார்ந்தவர்.'

"பூசுர குலம்"

"பூசுர குலத்திற்கு அங்கே இடமில் லையா?"

"இல்லை"

* * *

சங்கீதச் செயலாளரை ஒரு சிறந்த வித்வான் சந்திக்கிருர். சங்கீத வித்வான் கல்லுங்கரைய யாழொத்த குரலில் சாத் திரமுறைப்படி பாடுகின்ருர்.

"உங்கள் சங்கீதம் தேவகானமாயிருக் கிறதே. தங்கள் நாடு இதை நுகரப் பாக் கியம் பெறவில்லையே"

"அது எங்கள் தலையெழுத்து."

"இல்லை, எங்கள்பாக்கியம் சாதி, மதம் பார்க்காது. உங்களூர் கவிவாணரை எங் களூர் அரண்மனை வித்வானுக்கினேம். உங்களை அரண்மனைச் சங்கீத வித்வா ஞக நியமித்திருக்கிருேம்."

"தன்னியனுனேன். கைம்மாறு என்ன செய்யப் போகிறேன்."

'கைம்மாறு என்ன? தங்கள் தேவ கானந்தான்."

அந்தகநல்லூரில் சங்கீதத்தைச் சனி யன் என்று திட்டினேனே, தேவி என்னை மன்னிப்பாயாக. நீ என்னைக் கைவிட மாட்டாய் என்பது எனக்குத் தெரியும் என்று மனத்தில் எண்ணி அகலுகின்ருன் வித்துவானும்.

இன்னெரு காட்சி நம்முன் விரிகின்றது. அற்புதமான கட்டிடங்கள் வேதபுரி யில் மிகக் கவின் பெற எழுகின்றன. உயர்ந்த சிற்பம் உயர்ந்த ஓவியம், உயர்ந்த கவிதை, உயர்ந்த கானம் எல்லாம் நம் நாட்டில் திகழ்கின்றன.

அந்தகநல்லூர் செய்த புண்ணியம் தான் நம் நாடு செழிந்தோங்குகின்றது 'அந்த கர் நாடு நீடுழி வாழ்க" என்ற ஆரவாரம் எங்குங்கேட்கின்றது.

நாளுக்கு நாள் கோபாலராம் உள்ளத் திலும், சந்திரசேகரர் உள்ளத்திலும் துயர்க்கடல் விரிந்து கொண்டே போகின் றது. அதற்கோர் கரையை அவர்கள் காண இயலவில்லை.

"ஒரு நாள் அந்தகர் நாடு அந்தகர்க்கே. அறிவாளிகள் அகலலாம்" என்ற சட்ட மும் பிறந்து விட்டது. மறைவில் எங் கேயோ ஒலித்துக் கொண்டிருந்த வெம் பகை முரசு அம்பலத்தில் முழங்கத் தொடங்கி விட்டது.

அந்தகநல்லூரில் கடைசியாய் நின்ற இவ்விருவரும இனி ஒளிக்கு வழி இல்லை யென்று தேர்ந்து, அளப்பரும் சோகம் மனத்தகத்தே படர,வேதபுரியை நோக்கி தங்கள் நீள்வழியே நடக்கலுற்றனர். தங்கள் பல்லாயிரம் நினைவு மணம் கம ழும் நாட்டை திரும்பித் திரும்பிப் பார்த் துக்கொண்டே தள்ளாடியே சென்றனர் அவர். அந்தகநல்லூர் பூர்ண அதிகார இருளைப்பெற்று அரசு செலுத்தத் தொடங்கிற்று. அது நீடுழி வாழ்க.

கே. சுந்தரம்மாள்

காப்பியைக் குடித்துவிட்டு, "உஸ், அம்மாடி" என்று கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்த வண்ணம். நாற்காலியில் சாய்ந்துகொண்டு, "திவான் சாகேப்! குட்டி பலேஜோர், ஆட்டம்அதியற்புதம். மூக்கறுந்தவன் கதை போல், கலை, 'பெண்கள் முன்னேற்றம்' என்றெல்லாம் இவர்கள் செய்த ஏற்பாட்டை எல்லோரும் பின்பற்றி, தேவடியாள் பிழைப்பு என்பதே அடியுடன் போய் விட்டதே. அப்படியில்லாவிட்டால் இன்று எவ்வளவு ஆயிரம் ரூபாயானாலும் கொடுத்து இவளை அடைந்தே விடுவேன்"; என்றார்.

"என்ன? நீங்களே இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? உலகத்தையே ஈடாக வைத்தாலும் கிட்டாத வஸ்து. அக்கினிப் பிழம்பு என்று அறிந்து கொள்ளுங்கள்."

"அட, நான் என்ன சொல்லி விட்டேன். அந்த வழியில்லை. கலியாணம் செய்து கொள்ள, சாமான்யன் இவளை நினைக்கக்கூட முடியாது. உங்கள் யுவராஜா பரநாரி சகோதரன். முறைப் பெண் வளர்ந்து வருகிறாள். எனக்கு நாலு இருக்கு. ஐந்தாவதாகக் கட்டிப்போட்டால் ஆட்டமோ பாட்டோ, இருக்கலாமே என்பதைச் சொல்லவே அவ்விதம் சொன்னேன்."

"இப்படி மனம் போனபடி பேசுவது தங்களைப் போன்றவர்களுக்கு அழகாகுமா? நடனக்கலை ஒன்றேதான் அவள் வாழ்க்கைத் துணை. எம். ஏ. பட்டதாரி. அரசாங்க விஷயத்தில் பங்கெடுத்துக் கொள்ள உரிமையுடையவள். மஹாராஜாவின் கண்ணின் கருமணி. இன்று நடனத்திற்கு ராஜா ரவிவர்மன் நேரில் சென்று அழைத்து வந்தானென்றால், அவளின் செல்வாக்கு எப்படி என்பதைச் சொல்ல வேண்டுமா? அமைதியாக உமக்காக ஏற்படுத்தப்பட்ட நடனத்தைப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள். யார் காதிலாவது விழுந்தால் உமது நிலைமை மோசமாகிவிடும். சீர்திருத்தவாதி பேசும் பேச்சா இவைகள்?" என்றார் அமைதியாக.

'சீர்திருத்தவாதி' என்றால் மனிதனின் இயற்கையான இச்சை போய்விடுமா? முன் எப்பொழுதோ சின்ன குட்டியாக இருக்கும் பொழுது பார்த்தேன். அப்பொழுது ஆட்டத்தில்தான் மனம் சென்றது. இன்று அவளது பூர்ண யௌவனத் தோற்றம் என்னைப் பைத்தியமாக்கிவிடும் போலிருக்கிறது. நீங்கள் ஒரே ஓர் உதவி செய்தால் போதும். அவள் வீட்டிற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நானாகச் சென்றால் உசிதமாகாது" என்றார்.

"இப்பொழுது உனது மூளையில் தோன்றும் விஷயம் மட்டும் உசிதம் என்பது உன் அபிப்பிராயமோ?" மஹாராஜா ஏன் இம்மூடத்தை வரவழைத்தார். அப்படி அழைத்ததிலும், வேறு பெண்களை நாட்டியத்திற்கு ஏற்படுத்தாமல் கலாவதியை ஏன் ஏற்படுத்தினார். இது மரியாதையாக ஊர் போய்ச் சேரவேண்டும். ரவிவர்மன் காதில் விழுந்தால் என்ன அனர்த்தம் நேருமோ, என்ற சிந்தனையுடன் "இவன் வாயை எவ்விதம் மூடச் செய்வது" என்று பதில் பேசாமலிருந்தார்.

'என்ன திவான் சாகிப்! கல்லாகச் சமைந்து விட்டீர்களே."

"மன்னிக்க வேண்டும். அவள் வீட்டு வாசலில் கூர்க்கா நின்று கொண்டிருப்பான். மஹாராஜா, யுவராஜா, நாட்டிய ஆசிரியர் சந்திரதாஸ் இவர்கள்தான் செல்ல முடியும்.

நான்கூட மஹாராஜாவின் கூடத்தான் செல்ல முடியும். மற்றப்படி ஸ்திரீகள்தான் தாராளமாகப் போக முடியும். ஆண் பிள்ளைகள் ஒருவரும் அரசர் அனுமதி யின்றிச் செல்ல முடியாது. உங்கள் நன்மைக்கே சொல்லுகிறேன். வீண் பிரயத்தனம் செய்வதில் உபயோகமில்லை. இத்துடன் இப்பேச்சை நிறுத்திக்கொள்வது உத்தமம். யுவராஜா வந்தாலும் வரலாம்."

"சரி, வேண்டாம். பெரியவரிடமே கேட்டுக் கொள்ளுகிறேன்."

ஒன்றும் அறியாதவன்போல் வந்து, அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து தாக சாந்தி செய்து கொண்டான் ரவிவர்மன்.

மறுபடி திரை தூக்கப்பட்டதும் வெண்பட்டு ஒரிழையும், தங்கச் சரிகை ஒரிழையுமாக நெய்த புடவையும், கச்சையும் அணிந்து நடராஜ பிம்பம்போல் நின்று கொண்டிருந்தாள் கலாவதி.

கரகோஷம் அடங்கியதும் "காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே" என்ற பாட்டிற்கு அபிநயம் பிடிக்கும் பொழுது, "வேலைத் தூக்கும் பிள்ளை" என்ற இடத்தில் பாவத்துடன் அவள் நின்ற தோற்றமும் பின்னணி வாத்தியமும் இன்பத்தில் மிதந்து வரும் கீதமும் அதியற்புதமாக அமைந்து யாவர் மனதிலும் நிச்சலமான ஆனந்தத்தைக் கொடுத்தன.

"ஆஹா! நாமும் பவானிபுரமும் செய்த தவப்பயனே கலாவின் உருவாக வந்தது போலும்! காளையாகிய ரவிவர்மனது மனம் இவளை நாடினாலும் வியப்பாகாது. ஆனால் அவன் அதைத் தியாகம் செய்தேயாக வேண்டும். காதல் வசமாகாது, இவள் வாழ்க்கை நாட்டியத்திற்கே அர்ப்பணமாக வேண்டும். அப்பொழுதுதான் கலையின் பொக்கிஷம் காப்பாற்றப்படும். இப்பேரழகியை, கலாவல்லியை வணங்கி, பூஜை புரிய வேண்டுமே தவிர, அணைந்து மாசு படுத்தலாகாது" என்று சிந்தனைகள் எழும் பொழுது அவரை அறியாமலே கடைக் கண்கள், ரவிவர்மனையும், கலாவையும் மாறி மாறிப் பார்த்தன.

கலாவின் இருதய பரவசத்தில், ஹிந்துஸ்தான், மராட்டி, குஜராத்தி நடனங்களை மாறி மாறி ஆடி வந்தாள்.

இவளது அற்புத நாட்டியத்தையும்...... ஜமீந்தாரின் விரசமான பார்வையையும், பார்க்கப் பார்க்க ரவிவர்மனது உள்ளம் தாபத்தை யடைந்தது. நாட்டியத்தை முடித்து, கலாவை அவர் கண்களினின்றும் மறைத்துவிட வேண்டும் என்று எண்ணிய ரவிவர்மன், நாலு பாட்டு முடிந்ததும், தந்தையின் காதருகில், "களைப்படைந்தவள் போல் காணப்படுகிறாள், மங்களம் பாடச் சொன்னால் என்ன?" என்றான்.

அவளைப் பார்த்தால் களைப்படைந்தவளாகக் காணப்படவில்லை. உற்சாகமாகவே ஆடுகிறாள். ஆனால் ரவிவர்மன் நிறுத்த ஆவல் படுவதற்கு ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று நினைத்துக் கலாவிற்குச் சமிக்ஞை செய்தார்.

ஏன் நிறுத்தும்படி சொல்லுகிறார் என்பது விளங்காத நிலைமையில் நிறுத்த மனமில்லாது, ஒரு தில்லானா பாடிவிட்டு மங்களம் பாட நினைத்து, தில்லானாவிற்குப் பாவம் பிடிக்கத் தொடங்கினாள். ஆடும் பொழுதே எதேச்சையாக ரவிவர்மன்மீது பார்வை விழவே திடுக்கிட்டாள், தன்னை அவன் கடுமையாக நோக்குவதைக் கண்டு, பாதியில் நிறுத்தினால் விரசமாகுமென்று சுருக்கமாக முடித்து விட்டாள்.

தன்னுடன் ரவிவர்மன் வருவான், விஷயத்தை அறியலாமென்று நினைத்தாள். ஆனால் வண்டியில் மஹாராஜாவே ஏறினார்.

"போகும்பொழுது, கலாவதி உனக்கு உடம்பென்ன? ஒருநாளுமில்லாது இன்று களைப்புத் தட்டியது ஏன்?" என்றார்.

"களைப்பா?" என்று சொன்னவள், சட்டென ரவிவர்மனது கடுமையான பார்வை நினைவில் தோன்றவே, 'முட்டாள்தனம் செய்யப் பார்த்தோமே' என்று நினைத்து, "என்னவோ எனக்கே தெரியவில்லை. ஒரு நாளுமில்லாத களைப்புத் தோன்றினது" என்று கிளிப்பிள்ளைபோல் திருப்பிச் சொன்னாள்.

"ஒருநாளைக்கு ஒரு நாள் உன் நடனம் புதுமையாகவே தோன்றுகிறது. இருந்தாலும் இன்று உன்னை மறந்தே ஆடினாய். நாட்டியக் கலைக்காகவே உன்னைப் படைத்தார் ஈசன். அதற்காகவே நானும் போற்றி வளர்க்கிறேன். என்றும் வாடா மலராக நீ வாழ வேண்டும். கண் திருஷ்டியே இன்று களைப்பை உண்டாக்கி யிருக்கும். வீட்டிற்குச் சென்றதும் ஆகாரம் செய்துவிட்டுப் படுத்து இளைப்பாறு. நாளைக் காலை நமது அரண்மனை லேடி டாக்டர் கமலினியை வந்து பார்க்கச் சொல்லுகிறேன்" என்றார்.

"அடடா, டாக்டர் வரும்படி அப்படி உடம்பு ஒன்றுமில்லை. வேண்டுமானால் சொல்லியனுப்புகிறேன். அனுவசியமாகப் பிறருக்

குத் தொந்தரவு கொடுக்க வேண்டாமெனத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன் மஹாராஜ்" என்றாள்.

"சரி, உன்னிஷ்டம்" என்று சொன்னதும் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. கீழே இறங்கி வணக்கம் செலுத்திவிட்டு, வண்டி சென்றதும் உள்ளே சென்றாள்.

தனது கோரிக்கை ஈடேற வேண்டுமாக, சுக்கிர வாரம் இரவில் சாப்பிடுவதில்லை. ரவிவர்மன் வந்த பின்பு பவானி தேவியைத் தெரிசித்துவிட்டுப் பிறகு பாலும் பழமும் சாப்பிடுவாள். வழக்கப்படி இவள் வந்தவுடன் வேலைக்காரி சூடான காப்பி கொண்டு வந்து கொடுத்ததைச் சாப்பிட்டுவிட்டு, தன் அறைக்குச் சென்று அவ்வுடைகளைக் களைந்துவிட்டு, அலுப்புத் தீர வெந்நீரில் ஸ்நானம் செய்துவிட்டு, தலையைத் தளரப் பின்னல் போட்டு, சிறிது மல்லிகைப் புஷ்பமும் நீலாம்பரமும் கலந்து தலையில் வைத்துக் கொண்டாள். நீலவர்ணப் பட்டுப் புடவையில் ஜரிகைக் கொடி வேலை செய்த பார்டர் போட்டிருந்ததை உடுத்திக் கொண்டாள். அதே போன்ற ஜாக்கெட்டும் அணிந்து கொண்டாள். நடுவில் நீலக்கல் பதித்த வைரத்தோடும், நீலக்கல்லும் வைரமும் கலந்து பதித்த டோலக்கும், நீலமணி ஒன்றும் நல்முத்து ஒன்றுமாகக் கோத்த மாலையும், நீலமும் வைரமும் கலந்து பதித்த நெக்லேஸும், ஒரு கையில் நீலக்கண்ணாடி வளையல்கள் ஏழெட்டும், இரு பக்கத்திலும் வைரங்களையும், ஒரு கையில் நீலக்கல் பதித்த பட்டையில் கடிகாரமும் அணிந்து கொண்டாள். நீலவர்ணக் குங்குமம் நெற்றியில் இட்டுக்கொண்டு, ஒட்டியாணத்தைக் கையில் வைத்துக்கொண்டு, போட்டுக் கொள்ளுவதா வேண்டாமா என்று யோசிப்பவள்போல் நின்றுகொண்டிருந்தாள். கடிகாரம் மணி அடித்தது. நிமிர்ந்து நோக்கினாள். காலத்தைக் குறிக்கும் முள் பத்தரை என்பதைக் காட்டிற்று.

"ஓ, பத்தரையாகி விட்டதா? வரும் நேரம் தான். ஒரு சமயம் வராமலிருந்து விடுவாரோ, வருவாரோ? 'ஒட்டியாணமே, அன்பன் வருவாரோ ஒட்டியாணமே' என்று பாடிய வண்ணம் ஒட்டியாணத்தைப் போட்டுக்கொண்டாள். தனது அலங்காரங்களைச் சரி பார்த்துக்கொண்டு நிமிர்ந்தாள். தாயாரின் படம் கண்ணில் படவே இடுப்பில் கை வைத்தவாறு படத்தை உற்றுக் கவனித்த வண்ணம் நின்றாள். சிந்தனை ஓடி நின்றது. "வாராமலிருப்பாரோ ஒருகால் வருவாரோ அறியேனே" என்று பாடிய வண்ணம் அபிநயம் பிடித்தாள்.

அபிநயம் முடிந்ததும் மணியைப் பார்க்கத் திரும்பினாள். கைகளைக் கட்டிய வண்ணம் சுரங்க வாயிலைத் தாண்டி இரண்டடி முன் வந்து நின்றுகொண்டிருந்தான் ரவிவர்மன்.

திடுக்கிட்டவளாக, அவன் பக்கம் சென்று, "தாங்கள் வந்து வெகு நேரமாகி விட்டதோ?" என்றாள்.

"ஏன்? ஆட்டம் இன்னும் பாக்கியிருந்தால் ஆடிவிட்டுவருவது தானே" என்றான் குரலில் கடுமை தொனிக்க.

"பிரியப்பட்டால் இரவுமுழுவதும் தங்கள் முன் நின்று ஆடுவதற்குச் சலிப்பு ஏற்படுமா?" என்றாள் கொஞ்சலாக.

"அம்மா! அந்த ஆட்டத்தில் என்னத்தைத் தான் காண்கிறாயோ? நான் வந்து கதவு திறக்கும்சப்தம்கூடக் கேட்கவில்லைபோலும். எதற்கும் ஓர் அளவு வேண்டும். அளவுக்கு மிஞ்சினால்?......"என்று நிறுத்தினான்.

எப்பொழுதும் வழக்கம், அவன் வரவை எதிர்பார்த்துச் சுரங்க வாயிலில் நிற்கும் சமயம் அவன் வந்தால், கண்களில் காதல் தேங்க, புன்சிரிப்புடன் கைகளை விரித்தபடி வருவாள். மான் எனத் துள்ளி அவன் கைக்குள் சிக்குவாள். சற்று முன்னதாக வந்தால், அவளறியாமல் வந்து கண்களை மூடி முத்தமிட்டு விளையாடுவான். இன்று நேர் விரோதமாக அவனது சொல்லும் செயலும் தோற்றமும் ஒருவிதமான சலிப்புடன் காணவே கலாவின் மனம் துணுக்குற்றது. ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தபடியே நின்றாள். சற்றுநேரம் சென்றதும் தைரியத்தை வரவழைத்தவளாக, "கலையின் இருப்பிடமாகிய தங்கள், நடன கலாதரர் என்ற பட்டம் பெற்ற தங்கள் வாயிலிருந்தா, நடனத்தைப்பற்றி வெறுப்படைந்த சொற்கள்? யுவராஜ்! காரணம் என்ன? உங்கள் தோற்றம் என்னை மிக்க வேதனைக்குள்ளாக்குகிறது. தயவு செய்து விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று அவன் இரு தோள்களையும் இரு கைகளினால் பற்றிய வண்ணம் கேட்டாள்.

ஆடம்பரமற்ற அவள் அலங்காரமும், அழகிய தோற்றமும், கனிந்த சொல்லும் அவன் மனதிலெழுந்த வேதனையை அகற்றி இயற்கையான கிளர்ச்சியை உண்டாக்கின. தனது தோளைப்பற்றின கையைப்பிடித்து எதிரிலிருந்த சோபாவில் அவளை உட்கார வைத்து, சோபாவின் கையின்மீது தான் உட்கார்ந்துகொண்டு எதிர்க் கையின்மீது ஒரு காலை நீட்டிய வண்ணம், அவள் இரு கைகளையும் பிடித்த வண்ணம், "கலா! நான்

என்ன சொன்னலும் அதன்படி நடக்க உன் மனம் இடமளிக்குமா?''

"அதில் என்ன சந்தேகம்?" என்ருள், சோபாவில் ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்த வண்ணம், அவனை உற்று நோக்கியவாறு. அவனும் அவளைக்கூர்ந்து நோக்கினன். இருவர் கண்களும், மற்றவரின் இருதயத்தின் சாயையைக் கண்கள் மூலம் கண்டுபிடிப்பதுபோன்றன.

சற்றுநேரம் அவளைப் பார்த்தபடியே மௌனமாக இருந்தான். பிறகு, "சந்தேகப்படக்கூடிய விஷயமாதலால்தான் தயங்குகிறேன்''

"அப்படி என்ன விஷயம்? பீடிகை பலமாக இருக்கிறதே; தயங்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள். உங்கள் விருப்பம் எதுவென்ருலும் அது என் மனதிற்கு எவ்வித மாறுபாடாக இருந்தாலும் என் மனம் அதை ஏற்று நடக்கும். என் காதல் புனிதமானல், தெய்வீகம் பெற்றதானல், உங்கள் மனம் விரும்புவதையே என் மனம் விரும்பும்'' என்ருள்.

"அப்படியானல் நான் சொல்லுவதுபோல் நடப்பதாகச் சத்தியம் செய்'' என்ருன்.

“ஏன் என்னிடத்தில் நம்பிக்கையில்லையா? சத்தியம் அவசியந்தானா?”.

“கலா! விஷயம் அறிந்தபின் சத்தியத்தின் அவசியத்தை அறிவாய். எனது பூரணமான காதல் வேண்டுமானால் சத்தியம் செய்” என்றான்.

அவ்விதமான பேச்சும், அவன் தோற்றமும் அவள் மனதைத் தத்தளிக்கச் செய்தன. சட்டெனத் தன் கைகளை விடுவித்துக் கொண்டு, தன்னைச் சோபாவில் சிறை செய்ததுபோல் மறைத்திருந்த காலையும் அப்புறப்படுத்தி நின்றாள். அவனைச் சோபாவில் உட்காரும்படி செய்துவிட்டு, “பவானி தேவி சாட்சியாக, என் தெய்வமாகிய உங்கள் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். நீங்கள் எந்த விஷயத்தைச் சொன்னாலும் மறுக்காமல் ஏற்று நடப்பேன்; இது சத்தியம்” என்று அவன் தலையில் அடித்தாள்.

அடித்த கையைப் பிடித்து, அவளைத் தன் மடிமீது உட்கார வைத்து, இடது கையால் அவள் தலையைத் தாங்கிய வண்ணம் வலது கையால் அவள் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, முகத்தருகில் குனிந்து “கலா!” என்று நிறுத்தினான்.

“ஏன் இவ்வித தயக்கம்? சொல்லுங்கள் சிக்கிரம்.” என்றாள் புன்சிரிப்புடன்.

“இன்றையிலிருந்து நீ பொது ஸ்தலங்களில் நாட்டியம் ஆடும் ஆசையை விட்டுவிட வேண்டும். அரண்மனை ஒன்றைத்தவிர எந்த இடமானாலும், பவானி சந்நிதியானாலும், மகாராஜா உத்தரவிட்டாலும், என் அனுமதியின்றி நீ ஆடரங்கம் ஏறக்கூடாது. சதஸில் ஆடும்படி மஹாராஜா கட்டளையிட்டாலும் என் அனுமதியின்றி ஆடக்கூடாது, அப்படியின்றி என் சொல்லை மீறி நடந்தால் உனக்கும் எனக்கும் நடுவில் அகாதமான பிளவு ஏற்பட்டுவிடும். பிறகு எந்தவிதத்திலும் அதைத் தாண்டி என்னிடம் வருவதென்பது இந்த ஜன்மத்திலில்லை. இது பவானி தேவிமீது ஆணையிட்டுக்கூறும் சொற்கள். நான் வேண்டுமா? நடனம் வேண்டுமா? என்பதை நன்றாகச் சிந்தனை செய்து பதில் கூறு” என்றான் அமைதியாக.

இச்சொற்கள் அவள் மனதில் இன்னதெனச் சொல்லமுடியாத ஓர்வித சஞ்சலத்தை எழுப்பியது. இப்படித் தன்னை அவன் கைக்குள் அடக்கிப் பிடித்தவாறு கேட்பது ஏன், மீறி ஓடி விடுவேனா, சொல்லும் செய்கையும் விபரீதமாக இருக்கின்றன. என்ன இருந்தாலும் ஆண்மையின் செருக்குப் போகாது போலும். நான் உயிரென மதிக்கும் கலையைச் சிதைக்கத் துணிந்துவிட்டார். சுதந்திரத்தைப் பறிமுதல் செய்யாத செய்கை இது. நாமாக அடிமைத் தனத்தை ஏற்றுக்கொள்ளும் உபாயம். கலையை வளர்க்கும் ரசிகர் மனதில் இவ்வெண்ணம் தோன்றக் காரணம்? ஒன்றும் புரியாமல் வாக்குறுதி கேட்கிறார். ஒப்புக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை என்ற சிந்தனை ஓடவே பதில் பேசாமல் அவனையே உற்று நோக்கிய வண்ணமிருந்தாள்.

“ஏன்? பதிலைக்காணோம். சிந்திக்க அதிக விஷயமில்லை. மனதின் தன்மை தெரிய வேண்டும், அவ்வளவே”

“இக்கேள்விக்கு ஏன் இவ்வித பந்தனம்? என் இருதயப் பண்பை ஊடுருவிப் பார்ப்பதாக நினைப்பா? இவ்வளவு நாள் பழகியும் என் மனம் எதை உயிரென மதிக்கும் என்பதைத் தங்கள் மனம் அறியவில்லையா? இதைக் கேட்டுத்தானா தெரிய வேண்டும்?”

“உன் மனம் விரும்பும் இரண்டு வஸ்துவும் சம நிலை என்பதை என் மனம் அறியும். எதற்கு முக்கியத்துவம்? என்பதே என் கேள்வி?”

அவன் அணைப்பும், கேள்வியும் தொடையைக் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும் உணர்ச்சி தந்தது. தக்ஷணம் ஓர் சிந்தனை ஓடிற்று. நிறைவேறாத காதலைவிடக் கலைக்கே தன்னை அர்ப்பணம் செய்தால் என்ன? என்ற சிந்தனை தோன்றியது. ஆனால் மறுகணம் ரவிவர்மனது அணைப்பின் தன்மையும் முகவிலாஸமும் அதை மாற்றி விட்டன. எனக்குக் ‘காதலே வேண்டும்; கலை வேண்டாம் பிரபு! நாதனே வேண்டும்; நடனம் வேண்டாம். கலைத்தெய்வத்தின் அணைப்பில் கட்டுண்டிருக்கும்பொழுது கலை எதற்கு? உங்கள் விருப்பம்போலவே நடக்கிறேன். மீறி நடந்தால் தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன். பதித்துரோகிகள் அடையும் நரகை அடைவேன். யுவராஜ், உலகில் பெண்களுக்கு ஆழ்ந்த பிரேமையுள்ள காதலனைத் தவிர விரும்பக்கூடிய பொருள் ஒன்றும் இருக்கமுடியாது. அன்பில் ஒன்றிய மனதில் வேற்றுமை ஏற்படமுடியுமா? இந் நடன உணர்ச்சியை என் மனதில் வேரூன்றும்படி செய்தது தாங்களும் தங்கள்சமஸ்தானமும்தானே. அறியாத வயதில் அரங்கேற்ற மேடையில் முத்துமாலையிட்டு முன்னேறும் உபாயம் தேடி, என்னைத் தங்கள் முத்தத்திற்கே அர்ப்பணமாகச் செய்ததற்குத் தங்கள் அளவுகடந்த அன்புதானே காரணம்? ‘தாசி’ என்ற சொல் அடியுடன் அழியச்செய்தது தாங்கள் என்மீதுகொண்ட

அபரிதமான அன்பினாலன்றோ? ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தால் நிலைமையானது என்றே எனது உடலைத் தங்களிஷ்டத்திற்கு அர்ப்பணம் செய்திருக்கவேண்டும். இவ்வளவு நாள் இவ்வளவு கண்ணியமான முறையில் என்னை நடத்துவது எவ்வித அன்பு. ராஜாதி ராஜனான தாங்கள் கேவலம் நடனமாதாகிய என்னைக் காண, காலத்தைக்கூடக் கவனியாமல் சுரங்கவழியாக வரும்படி செய்வது எத்தகைய அன்பு? இப்படிப்பட்ட அன்பைப் பெற ஜென்ம ஜென்மங்களாக மல்லிகைமலரெடுத்துப் பவானி தேவியைப் பூஜித்திருக்க வேண்டும். உங்கள் அன்பின் சலுகையினாலேயே நடனத்தில் ஆர்வம் ஏற்பட்டது. பிரபு, இதற்காகத் தாங்கள் என்னிடம் வாக்குறுதி பெற வேண்டிய அவசியம் என்ன? கட்டளையிட்டால் கீழ்ப்படிவேனே" என்றாள் அமைதியாக.

"கலா!" என்றான், மேலே வார்த்தை வெளிவர மறுத்தது. இறுக அணைத்தவாறு கண்களை மூடிக்கொண்டான், உணர்ச்சி வேகத்தினால். அவன் தோளில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள் கலா.

சற்றுப் பொறுத்து 'யுவராஜ்!' என்றாள் கண்களை விழித்து. "ஏன்" என்று முகத்தருகில் குனிந்தான்.

"நான் இப்படிக் கேட்பதற்காக மன்னிக்கவும். என்றுமில்லாத விசேஷமாக இன்று இச்சிந்தனை ஏற்பட்ட காரணம்?" என்றாள்.

"காரணமா? சொல்லுகிறேன் கேட்டுவிட்டு நான் செய்தது தவறு என்பதை முடிவு செய். இன்று சாயங்கால முதல் நான் பட்ட அனுபவம்போல் நீ பட்டிருந்தால் நான் உன்னைக் கேட்டது குறைவென்றே சொல்லுவாய்" என்று, சாயங்காலம், பொது மக்கள்...ஜமீந்தார் இவர்கள் விஷயத்தைச் சொல்லிமுடித்து, "இவைகளினால் என்மனம் எவ்வளவு புண்ணாயிற்று தெரியுமா? புண்பட்ட மனம் நிபந்தனையை நாடியது" என்றான்.

"அம்மா! இதற்குத் தானா, இவ்வளவு உபாயம்? முன்னாலேயே சொல்லியிருந்தால் நானே சதஸில் ஆடுவதில்லையென முடிவு செய்திருப்பேனே."

இண்டோ கமர்ஷியல் பாங்க்
லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :- மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் :- மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

வேலன்

கி. ஸந்தானம்

"ஓ ரிக்ஷா! என்ன தூங்கி விழுகிறாயா? கூப்பிடறது காதிலே விழலே?"

மாலை மங்கி, மயங்கிக் கடைசியில் இருளில் கரைந்து விட்டது. நகரெங்கும் இருட் போர்வை கவிந்திருந்த போதிலும் கொசு வலைக்குள் புகுந்துவிட்ட மசகம் பிடுங்குவது போல வாடைக் காற்று சில்லென்று வீசிக் கடித்தது. தெருவிலே மினுக்கு மினுக்கு என்று எரிந்த விளக்குகளும் இருட்டை எடுத்துக் காட்டின. பனிக் குல்லாயும் 'ஸ்வெட்டரு'மாக ஜனங்கள் அவரவர்கள் வீடு நோக்கி விரைந்தனர்.

தன் வண்டியின் விளிம்பில் சுருட்டி முடக்கிக்கொண்டு அவன் படுத்திருந்தான். அவன் விழிகள் எங்கோ சென்று நிலைத்திருந்தன. அவன் உள்ளத்தில் பெரும் புயல் அடித்துக் கொண்டிருந்தது.

தங்கு தடையின்றி அவன் தன் வண்டியை எங்கும் இழுத்துச் சென்றிருக்கிறான். நெடுக்கில் வளர்ந்தவர்களும் குறுக்கில் வளர்ந்தவர்களும் அவன் வண்டியை அலங்கரித்திருக்கிறார்கள். எவ்வளவு பாரத்தையும் அவன் லக்ஷியம் செய்வதில்லை. குறுக்குச் சட்டத்தின் மேல் தன் வலக்கையும் இடப்பக்கத்துச் சட்டத்தின் மேல் தன் இடக்கையுமாக ஒரு முக்கு முக்கினால் சக்கரம் உருள ஆரம்பித்துவிடும். அப்புறம் தங்கு தடையின்றி ஒரே ஓட்டம்தான். ஆனால் அவன் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்ட அவன் வகையறியவில்லை. அதில்தான் எவ்வளவு சிக்கல்கள் சிடுக்குகள்! வாழைத்தண்டின் நூல்கள் சுற்றிக்கொண்டதுபோல!

வீராயி இருந்த வரையில் அவ்வப்போது அவன் வாழ்க்கையின் உருளைக்கு மசையிட்டு வந்தாள். ஆனாலும் புதிதாக மையிட்டால், சகடம் நன்றாய் உருண்டாலும் எண்ணெய் கொஞ்சம் சிந்திச் சிதறுமல்லவா? அதுபோல் தான் அவன் வாழ்க்கையின் ஆரம்பத்தில் இருந்தது.

நாகரிகம் உச்சநிலை அடைந்திருப்பதாகச் சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில்தானே நாம் பல விசித்திரங்களைக் காண்கிறோம்—சோற்றுப் பங்கீடு முதல் சுதந்திரப் பறிமுதல் வரை, ஆறறிவு படைத்த ஒருவனை வண்டியில் வைத்து மற்றோர் ஆறறிவு படைத்தவன் இழுப்பதென்றால்—இந்த மானமற்ற உலகை மறக்க அவன் கள்ளின் உதவியைத் தேடினானென்றால் அதில் என்ன தப்பென்று அவனுக்கு விளங்கியதில்லை.

ஆனால் வீராயி எல்லாம் அறிவாள். நகரின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை அவன் சுற்றித் திரிந்தபோதிலும் மாலை ஐந்து மணிக்கு அவன் அந்தச் சந்தின் முனைக்கு வந்து விடுவான் என்பது அவளுக்குத் தெரியும். அப்புறம்தான் அவன், தன்னையும் உலகையும் மறக்க வைக்கும் அந்த 'மருந்தை'த் தேடிப்போவான்.

அந்தச் சந்தின் மூலையில் அவனுக்கு என்ன கவர்ச்சி? அங்கிருந்து பார்த்தால் கோவில் கோபுரம் தெரியும். கதிரவனின் செங்கிரணங்கள்பட்டு அதன்மேலுள்ள கலசங்கள் தகத்தகாயமாய் மின்னும். வண்டிப் பெட்டியிலிருந்து பையை எடுத்து விபூதியை நெற்றியில் இடுவான். கோபுரத்தை நோக்கி ஒரு கும்பிடு போடுவான். அதே சமயம் அவன் வீட்டுத் தெய்வம் வீராயி பிரசன்னமாவாள் சிரித்த முகத்தோடு பல்லாயும் கையுமாய்.

"வந்துட்டியா வீராயி" என்று சொல்லி அவன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரிப்பான். அவளிடத்தில் என்ன மாயசக்திதான் இருந்ததோ? தன் முந்தானையால் அவன் முகவேர்வையைத் துடைத்துவிட்டு, பல்லாயை அவன் கையில் கொடுப்பாள் அவள். அந்தக் கருப்புட்டி நீரை அவன் நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு குடிப்பான். அதற்கு ருசியளித்தது கருப்புட்டியல்ல, அவள் அன்பு தான் என்று அவனுக்குத் தெரியாதா? வெற்றிலையும் பாக்கும் அவன் கையில் அளித்துவிட்டு, திருநீற்றுப் பையை—ஆம், அதில்தான் அன்றாடம் 'சம்பாரிச்ச' துட்டு வைத்திருப்பான்—எடுத்துக்கொண்டு அவள் போவாள். ஆனால் வெகுநேரம் வரையில் அவள் உருவம் அவன் கண்ணினின்றும் மறையாது. பரந்த முகம், காலணா அகலத்திற்குமேல் நெற்றியில் குங்கு

பார்க்கவே சம்மதமிருக்காது. அந்த நிலைமையில் உன்னிடம் நடந்துகொண்டேனென்பதே. அப்படித்தானே" என்று அவள் கையை அழுத்திப் பிடித்தவாறு கேட்டான்.

"ஏன் எங்கள் நிலைமை அவ்வளவு கேவலமாகத் தோன்றவேண்டும். தெய்வத்தின் சிரசின் மீதிருக்கும் மலராக நினைக்க முடியாதா?"

"அந்த நினைப்புத்தான் என்னுள்ளத்தில் தோன்றுகிறது. மற்றவர்கள் மனதிலும் இந்த உணர்வு தோன்றலாம். சமயங்களில் அளவு கடந்த அன்பில் வெடிக்கும் மலர்களின் வாசனை மிக மேலானது. அதைப் புரிந்து கொள்ளாமல் சுதந்திரத்தை இழப்பதுதான் நமது விதி என்ற முடிவிற்கு வருவது பெண்மையின் சக்தி. அதற்கு யார் பொறுப்பாளி?"

" ஆம், நாங்களேபொறுப்பாளி. அப்படியே இருக்கட்டும். நீங்கள் சொல்வது செய்வது எல்லாம் தன்னலமற்ற தியாகமே. தேவியின் சன்னிதியை நெருங்கிவிட்டபடியினால் விவாதம் முடிவடையட்டும்" என்றாள்.

வழக்கம்போல் தேவியின் ஆராதனை முடிந்தது.

"கலா! உன் சபதத்தைக் காப்பாற்றுவாய் என்பதைத் தேவி முன் உறுதிசெய்" என்றான்.

"இதென்ன? இவ்விஷயத்தில் இவ்வளவு ஆர்வ்ம்? இவர் மனதில் என்ன விபரீதமான எண்ணம் தோன்றிவிட்டது. கலையின் தெய்வம்! என்ன விந்தை." என்ற சிந்தனையில் அவனை உற்றுநோக்கிய வண்ணம் சற்று நேரம் நின்றாள். "பின்னும் நான் சொல்லை மாற்றிவிடுவேன் என்ற நினைப்பா? அப்படி இவர் என்னிடம் நம்பிக்கை வைக்காமல் போனால் நான் மட்டும் இவரை நம்பவேண்டுமோ?" என்ற சுயமரியாதை எண்ணம் தோன்றவே கல்லாகச் சமைந்து நின்றாள்.

"ஏன் அவ்விதம் பார்க்கிறாய். இஷ்டமில்லாவிடில் வேண்டாம்."

"இஷ்டமில்லாமலென்ன? தேவியின்முன் சபதம் அவசியமா என்று சிந்தித்தேன். உங்களுக்கு அது விருப்பமானால் எனக்கு

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

யாதொரு ஆக்ஷேபனையும் கிடையாது. 'பவானிதேவி! நீ சாக்ஷி. என் தெய்வமாகிய இவர் மனப்படி நடப்பது என் கடமை. இவர் உத்தரவின்றி, சதஸில் நடனமாடுவதில்லையென்று உன் முன்பாக இவர்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். மீறி நடந்தால் இவர் இடும் தண்டனையை ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கமாட்டேன்" என்றாள்.

அவள் சொல்லும் தோற்றமும் அவன் தேகத்தில் புல்லரிப்பை உண்டாக்கின. எங்கோ ஓர் கௌளியும்சொல்லிற்று. "கலா! இச்சமயம் என் கண்களுக்கு நீ சக்தி சொருபமாகக் காட்சியளிக்கிறாய். இதென்று சொல்ல முடியாத ஓர் பரவச உணர்ச்சி உண்டாகிறது. நான் பாக்கியசாலி. உன்னையடைய என்ன தவம் செய்தேனோ?" என்று உணர்ச்சி மிகுதியினால் அவள் கைகளை இறுகப் பிடித்த வண்ணம் கண்களை மூடிக்கொண்டான்.

இதனால் கலாவின் மனம் ஆனந்தத்தில் திளைத்தாலும் தானும் அவனிடம் ஏதாவது சபதம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் தீவிரமாக எழுந்தது. அந்த நிலைமையில் "யுவராஜ்!" என்றாள்.

கண்ணை விழித்து "ஏன்கலா" என்றான் அன்பு ததும்ப.

"நான் ஓர் வரம் தங்களிடம் யாசிக்கலாமா?"

"என்ன வரம்? கலா! கேள். எதுவானாலும் அளிக்கப் பின்வாங்க மாட்டேன். உனது மனம் நோக நான் வாங்கிய சபதத்திற்கு இப்புவனமே ஈடாகாது. நீ ஏதாகிலும் கேட்டால்தான் என் மனம் சற்று நிம்மதியுறும். உன் அன்பிற்கு எது பரிசாகும்? கலா! கேள். அஞ்சாமல் கேள்" என்றான் பரபரப்புடன்.

"எது கேட்டாலும்?"

"எதுவானாலும்"

"பிறகு மனஸ்தாபம் கூடாது. எது நீங்கலாக என்பதை நிர்ணயம் செய்துகொண்டு விடுங்கள். இருவருக்கும் நன்மைதரும்"

"கலா! இதென்ன சந்தேக வசனம். நீ விரும்புவது எதுவானாலும் கொடுக்கக் கடமைப்பட்டவன் நான். தயக்கமே வேண்டாம்"

"அப்படியானால் நான் கேட்பது உங்களுக்கு மனவருத்தத்தைக் கொடுப்பதாக இருந்தால் அதற்காக எனக்கு மன்னிப்பு அளிப்பதாக வாக்களியுங்கள்"

"மன்னிக்கும் சந்தர்ப்பமே ஏற்படாது. அப்படி ஏற்பட்டால் அவசியம் மன்னிப்பு உண்டு. பவானிமாதா சாக்ஷி"

"இன்றையிலிருந்து தங்கள் கரத்தினால் எனக்கு மாங்கல்யம் தரிக்கும்வரை நமக்குள் ஸ்பரிசம் என்பதே கூடாது. இதுவரை நடந்துவந்த பாணியை அறவே விட்டுவிட வேண்டும். அதற்காக நமது சந்திப்பும் நிற்கக்கூடாது. அப்படி நடப்பதாகத் தேவி முன் கூறுங்கள்."

எதிர்பாராத இக் கேள்வியினால் திடுக்கிட்ட ரவிவர்மன் "ஏன் கலா, என் மீது நம்பிக்கையில்லையா?" என்றான்.

"யுவராஜ்! நீங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பதும், இதுவரை என்னை நடத்திவந்த விதமும் பவானிமாதா அறிவாள். தங்களது அபார ஸௌந்தர்யத்திலும், ஆழ்ந்த அன்பிலும், மாசற்ற குணத்திலும் ஈடுபட்ட என் மனம், தாங்கள் என்னருகில் இருக்கும் சமயம் உண்டாகும் மனவெழுச்சியில் என்னையே மறக்கச் செய்துவிடுகிறது. மனம் கட்டிற்கு மீறி உணர்ச்சி வசமாகி விடுகிறது. அச்சமயம் என் செய்கையே தங்கள் மனதைத் தளர விடும்படி செய்து விடுமோவென்றுகூடத் தோன்றுகிறது. அதனால் என் மீதே எனக்கு நம்பிக்கையில்லை. தங்கள்மீது என் மனம் கொண்டிருக்கும் பிரேமைக்கு உபமானம் சொல்லப் பொருளே கிடைக்கவில்லை. உங்கள் அருகிலிருக்கும் சமயம் நான் இன்னது செய்கிறேனென்ற உணர்ச்சியே அற்றுவிடுகிறது. என் பலவீனத்திற்காக இவ்வரம் கேட்கிறேன்" என்றாள்.

"கலா! என்ன சாதுர்யம்! நடன கலா சக்ரவர்த்தினி" என்ற பட்டத்தைவிட சாதுர்ய வசன வல்லப சக்ரவர்த்தினி என்ற பட்டமே பொருத்தமாகும். உம். என்ன? உன்னிடம் உனக்கு நம்பிக்கயில்லை? இது எவ்வளவு கருத்தைத் தாங்கி நிற்கும் வசனம். உனது ஹ்ருதயாகாசத்தில் காதலின் பூர்ண சந்திரன் அதிலாவண்யமாகப் பிரகாசித்துச் சஞ்சல இருளை நீக்கினாலும் நாசி என்ற கவலை மேகம் சமயங்களில் ஜோதியின் பிரகாசத்தை மறைக்கிறது. பெண்மையின் சக்தி உன்னையறியாமலே வாக்கில் சொற்களை அமைத்துவிட்டது. உன் உயிர் நிலையைக் கேட்பது போல் நடனத்தில் சபதம் கேட்டேன். பழிக்குப் பழியாக என்னை மடக்கி விட்டாய்" என நீண்ட மூச்சு விட்டான்.

"உங்களுக்குப் பிரியமில்லாவிடில் வேண்டாம். முன்னதாகவே கேட்டுக்கொண்டிருக்கிறேன். உங்கள் சந்தோஷமே எனது வாழ்க்கையின் லக்ஷியம்."

"என் காதல் காமாதுரமாக இருந்தால் சொன்ன சொல் தவற வேண்டியதுதான். ஆனால் உன்னை என் ஹ்ருதய பீடத்தில் எந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றுகிறேனென்பதையும், இது வரை உன்னிடம் வரம்பு மீறி என்றாவது பேசியோ, நடந்தோ இருப்பேனென்பதையும் பவானி மாதா அறிவாள். பவானிபுர மன்னன் வழித்தோன்றலாக வரும் யோக்கியதையுள்ளவன், தேவி முன் சொன்ன சொல்லை மாற்றமாட்டான். இது வரை உன்னிடம் இன்னவிதமான மனப்பான்மையுடன் நடந்து கொண்டேனென்பதை உன் மனமறியும். இனி என் உறுதியைக் காண்பாய். உலகில் மனிதனின் சக்திக்கு மிஞ்சியது மரணம். அதனால் மாங்கல்யதாரணமாகுமுன் இருவரில் ஒருவர் மரணமடைய நேரிட்டால் அந்தச் சமயம், அல்லது உனக்கு மாங்கல்யதாரணம் செய்த பிறகு உன் ஸ்பர்சத்தை அடைவேன். அது வரை நீலகண்டர் வாழ்க்கைபோல் நாம் நடந்துவருவோம். அவர் 'மனதாலும் தீண்டேன்' என்றார். நான் என்றும் பரஸ்திரீகளை மனதாலும்தீண்டேன். உன்னை மனத்தினால் தீண்டாமலிருக்க முடியாது. கரத்தினால் தீண்டேன். அதற்காக நமது சந்திப்பும் நிற்காது. இது பவானி தேவியறியச் சத்தியம்" என்றான்.

"ஆஹா! எத்தகைய அன்பு என் மீது இருந்தால் இச்சபதம் செய்ய முடியும். நான் பாக்கியசாலி. என் மனம் இன்னதெனச் சொல்லமுடியவில்லை சுவாமி!" என்று அவன் காலைப் பற்றப் போனாள்.

இரண்டடி பின்தள்ளி நின்றுகொண்டு "வேண்டாம் கலா! சத்தியம் செய்து விட்டால் அந்த நிமிஷமுதல் காப்பாற்றப்பட வேண்டும்" என்றான் புன்சிரிப்புடன்.

திடுக்கிட்டு நின்றவளாக, "யுவராஜ், ஏதோ தோன்றிய புத்தியால் கேட்டு விட்டேன். தங்கள் செய்கை என்னை வாட்டுகிறது. வேண்டாம் ஆணையைக் கழித்து விடுங்கள்."

"இல்லை கலா! இப்படி கொஞ்ச காலம் நடந்து வருவதில் நன்மை அதிகம்தான். நமது காதலும் புடம்போட்டதுபோலாகும். கூடிய சீக்கிரம் நமது சபதத்தை ரத்து செய்து விடும்படியாகப் பவானிமாதா அருள் செய்து விடுவாள்; கவலைப்படாதே. இனி தினந்தோறும் சுரங்கவாயிலாக உன்னைச் சந்திக்க வருவேன், நம்பு" என்று சொல்லியவண்ணம் தேவியின் சிரசிலுள்ள புஷ்பத்தை எடுத்து, கலாவின் பக்கம் கையை நீட்டினான். இரு கைகளினாலும் வாங்கி, தலையில் வைத்துக் கொண்டாள்.

16

இதன் பிறகு அவர்கள் சந்திப்பு தினம் ஏற்படலாயிற்று. சாதாரணமாகப் பன்னிரண்டு மணிக்குள் திரும்பி விடுவான். இப்பொழுதெல்லாம், இரண்டு மணிவரை சதுரங்கமாடுவதிலும், வீணைவாசித்துப் பாடுவதிலும், அரசாங்கவிஷயங்களைப்பற்றிச் சர்ச்சை செய்வதுமாகப் பொழுதைக் கழிப்பார்கள். அதுவரை எவ்வளவோ சரசமாக நடந்து வந்த ரவிவர்மன், இப்பொழுது விரல்நுனி கூட அவள் மீது படாவண்ணம் நடந்துவந்த பாணியானது கலாவின் மனதைத் திகைப்படையச் செய்தது. முகத்தில் சலனமோ வருத்தமோ தென்படாது சிரித்துக் கொஞ்சிப் பேசுவான். இவைகளினால் அவன் உயர் குணம்பற்றி அவள் மனம் ஆனந்தமடையும். ஒரு சமயம் தன்மை அறியாமல் இப்படிச் செய்து விட்டோமே. அவர் மனம் எவ்வித தாபங்களை அடைந்து வாடுகிறதோ, எனத் தவிப்பாளே தவிர, வெளிக்குச் சிரித்துப் பேசி மகிழ்வாள். இப்படியே இரண்டு திங்கள் கழிந்தன.

அன்று பௌர்ணமி. இரவு பத்து மணி, உலகை சௌந்தர்ய தேவதையாகச் செய்து கொண்டிருந்தான் தாரையின் காதலன். அன்று அரசாங்க அலுவல்கள் அதிகமிருந்த படியினால் அலுப்புற்றது ரவிவர்மனின் மனம். சாயங்காலம் கலாவைக் காணச் செல்லவில்லை. இரவு செல்ல வேண்டும் என்று நினைத்த பொழுது மணி ஆகவில்லை. பதினோருமணிக்குத்தான் சுரங்க வாயிலால் செல்லமுடியும். அதுவரை நிம்மதியை நாடி உத்யான வனத்தில் நுழைந்தான். ரம்யமான இரவு மனதிற்குச் சாந்தியைக் கொடுத்தது. தடாகத்தின் பளிங்குப் படியில் உட்கார்ந்து ஜலத்தில் பாதத்தை வைத்தான்.

தடாகத்தின் மத்தியில் பூர்ணமதியின் பிம்பம் தோற்றமளித்தது. உற்று நோக்கினான். கலாவின் கமல முகம் காட்சியளித்தது.

"கண்ணில் தெரியுதொரு தோற்றம்—அதில்
கன்னியழகு முழுவதில்லை,
நண்ணு முகவடிவுகாணில்—அந்த
நல்லமலர்ச் சிரிப்பைக் காணோம்"

என்று அவன் பாடினதற்கு,

வெண்ணிலவு நீ எனக்கு
மேவுகடல் நானுனக்கு,
பண்ணுசுதி நீ எனக்குப்
பாட்டினிமை நானுனக்கு

எண்ணி எண்ணிப் பார்த்திடிலோர்
எண்ணமில்லை நின்சுவைக்கே
கண்ணின்மணி போன்றவரே
கட்டழகன் ரவிவர்மா"

என்று சென்ற பௌர்ணமி யன்று மாஹிஷ்மதி வனத்தில், கலாவதி பாடினது நினைவில் தோன்றவே,

சோலை மலரொளியோ—உனது
சுந்தரப் புன்னகைதான்
நீலக் கடலலையோ—உனது
நெஞ்சில் அலைகளடி"

என்று பாடியவண்ணம் எழுந்து நின்றான். ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கினான். கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்தே முக்கால். சரி, சென்றால் சரியாக இருக்கும் என்று சொல்லியவண்ணம் படியேறினான். எதிராக வந்த நரசிம்மன்.

"யுவராஜ், நமஸ்காரம். மஹாராஜா தங்களை உடன் அழைத்து வரச் சொன்னார். நல்ல வேளை முந்திக்கொண்டேன். பவானி காப்பாற்றினாள்."

"என்ன விஷயம்? பவானிமாதா என்ன காப்பாற்றினாள்?"

"தாங்கள் தினசரி தேவி தரிசனத்திற்குச் செல்லுவது வழக்கமாகி விட்டது. எதிர் பாராது மஹாராஜா அழைத்துவிட்டார். தாங்கள் அவ்விடம் சென்றிருந்தால்......... என்ற பயத்துடன் வந்தேன்."

"நான் இவ்விடமிருப்பது?" என்றான் புன்சிரிப்புடன்.

"மணி பதினொன்று அடிக்கவில்லையல்லவா?"

"ஆஹா! உன் அறிவை மெச்சுகிறேன். எதற்காக என்னை அழைக்கிறார் என்பது தெரியுமா?"

"அதெப்படித் தெரியும். சயன அறையில் அவர் மட்டுமிருக்கிறார். மஹாராணி வர நேரமாகும். தனிமையில் உங்களைக் காண வேண்டுமென்று சொல்லச் சொன்னார்."

"சரி, வருகிறேன்."

மஞ்சத்தில் திண்டின்மீது சாய்ந்துகொண்டிருந்தார் மஹாராஜா. உள் நுழைந்த ரவிவர்மன், 'நமஸ்காரம்' என்று கை குவித்தான்.

"தீர்க்காயுஷ்மான் பவ. இப்படி வந்து உட்கார்" என்று மஞ்சத்தில் தம் மார்பின் அருகில் உட்காரும்படி காட்டினார். உட்கார்ந்துகொண்டதும்,

"என்ன விஷயமப்பா?" என்றான்.

"முக்கியமான விஷயம். நம் இருவர் மனம் தான் அறிய வேண்டும்."

"அப்படியே."

"நமது நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. இன்னல்கள் நீங்கிவிட்டன. நமது தலைவர்கள் மகாநாடு நடத்தப்போகும் விஷயம் உலகமறிந்ததே. ஆனால் நாம் அவர்களுடன் ஒத்துழைக்கும் விஷயம்பற்றிச் சிலபேர் தகராறு செய்வதாகவும், அதற்காக நானாவது நீயாவது மஹா நாட்டிற்கு வரவேண்டுமென்றும், நாம் நடக்கும் முறையை அநேகர் பின்பற்ற இது உதவியாக இருக்குமென்றும் உடனே புறப்படும்படி தலைவரிடமிருந்து சற்றுமுன் தகவல் வந்திருக்கிறது. என்னை விட நீயே இவ்விஷயத்தில் நன்மையான வழியை எடுத்துக்காட்ட முடியுமென்ற தீர்மானத்தினால் உன்னை அனுப்பலாமென்று நினைக்கிறேன். உன் அபிப்பிராயமென்ன?" என்றார்.

"தங்கள் இஷ்டப்படி சென்று வருகிறேன் ஆனால் நமக்கும் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையே. நம் சமஸ்தானம் தனிச் சுதந்திரம் பெற்றதுபோல்தானே நடந்து வருகிறது. நம்மிடத்தில்ளது இல்லை. சகலமும் நமது நாட்டில் உற்பத்தியாகின்றன. யந்திர சாதனமில்லையா? ராணுவமில்லையா? நாம் எதற்கும் ஒருவர் கையை எதிர் பார்க்கவேண்டியதில்லையே. அப்படியிருக்க அவர்களிடம் நாம் எதற்ககாகக் கீழ்ப்படிய வேண்டும். நாம் தனிச் சுதந்தரம் பெற்றவர்கள். கீழ்ப்படிய வேண்டாம்" என்றான்.

"ரவிவர்மா! அது சரியல்ல; இந்தியரில் பிளவு வேண்டாம். நம்மை அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. கீழ்ப்படியவும் வேண்டாம். நம்மிடம் அவர்கள் திருத்தி அமைக்கக்கூடிய அம்சம் எதுவுமில்லை. அவர்கள் பிற்காலத்தில் ஏற்படுத்தப் போவதை நாம் முன்னமேயே ஏற்படுத்தி விட்டோம். நமக்குள் பிளவு காண்பிக்காமல் அன்னியர் முன் தலைவர்களுக்குப் பணிந்து நடப்பதாகவே இருக்கவேண்டும். நமதுமீது ஏற்பட்ட நம்பிக்கையினாலும் அபிமானத்தாலுமே இரகசியமாக நம்மை அவசரப்படுத்தி அழைக்கிறார்கள். எல்லாச் சமஸ்தானங்களும் நம்மைப் போல் நடந்துவருகின்றனவா? வசதியிருக்கிறதா? அவைகளைத்திருத்தவேண்டியது அவசியமாகிறதல்லவா? அதனால் நாம் பணிவதாகக் காண்பித்தால் அவர்கள் நிச்சயம் உன்னைப் பின்பற்றுவார்கள். உலக சமாதானமும் ஏற்படும். நமது சுதந்திரத்திற்கும் பங்கமில்லை. அதனால் நீ அவசியம் நாளைக்

காலையிலேயே தலைநகரத்திற்குப் புறப்பட வேண்டும். ஒரு மாதத்திற்குமேல் அவ்விடம் தங்க நேரிடலாம். அதற்கான வசதியுடன் புறப்படு" என்றார்.

"சரி, அப்படியே செய்கிறேன். இது தானே விஷயம்?"

"இரு; இன்னொரு விஷயமும் பேசவேண்டும். ரவிவர்மா! உலகம் முழுவதும் உன்னைப் போற்றுகின்றது. உனது வாக்கு வன்மையை, நீ உலகப் பிரயாணம் செய்தபொழுது பிரிட்டிஷ் சக்ரவர்த்தியே பாராட்டிப் பேசியிருக்கிறார். உன் வாக்குச் சாதுர்யத்தினால் காரியத்தை வெற்றி கொள்வாய் என்று சொல்லியே தலைவர் உன்னை அனுப்பும்படி சொல்லியிருக்கிறார். 'ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்—சான்றோனெனக் கேட்டதாய்" என்பது போல் உன் திறமையைக் கேட்க என் மனம் அளவிலா ஆனந்தமடைகிறது. ரவிவர்மா! உன் மணக்கோலம் காண நமது பிரஜைகள் துடிக்கிறார்கள். என் மனமும் ஆவலுறுகின்றது. நீ மஹாநாட்டிற்குச் சென்று திரும்பியதும் உனது மணத்தை முடித்து விடலாமென்று நினைக்கிறேன். பாமாவும் பருவமடைந்து விட்டாள். உனக்கு ஆக்ஷேபனையொன்றுமில்லையே" என்றார்.

ரவிவர்மன் நெஞ்சு படபடவென அடித்துக்கொண்டது. இவ்வளவு சீக்கிரம் இப்பிரச்னை ஏற்படும் என்று எதிர்பாராத நிலைமையில் அவன் மனம் துணுக்குற்றது. பதில் எப்படிச் சொல்லுவது என்ற பிரச்னையில் மௌனத்தைக் கடைப்பிடித்தான்.

"ஏன் பதில் சொல்லவில்லை, ரவிவர்மா? சங்கோஜமா, சந்தோஷமா?" என்றார் அவன் முதுகைத் தடவியவாறு.

"அப்பா!" என்றான் குனிந்தவாறே. கண்களில் நீர் நிறைந்த அவன் குரலின் தடுமாற்றத்தை உணர்ந்த தந்தை 'என் ரவிவர்மா ஒருமாதிரியாக இருக்கிறாய்?" என்றார்.

"அப்பா, இதுவரை நம்மிடையில் அபிப்ராயபேதம் ஒருகாலும் ஏற்பட்டதில்லை. இனிமேலும் ஏற்படாதிருக்கலாம். ஆனால் இந்தச் சமயம்........."

"இந்தச் சமயமென்ன? அஞ்சாமல் சொல்"

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

"பாமாவிற்கும் எனக்கும் விவாகம் என்பது நடைபெறமுடியாது"

"ஏன்? அழகிலோ, குணத்திலோ, கலையிலோ ஒருவரையொருவர் குறை கூற முடியாதே. காரணம்?"

"காரணம் காதலில்லை."

"யாருக்கு?"

"இருவருக்குமே"

"அப்படியானல் இருப்பிடம் அமைந்திருக்கவேண்டுமே"

"உண்மைதான்"

"எது"

"அப்பா! எப்படிச் சொல்லுவது?

"ரவிவர்மா? ஏன் தயக்கம்? நாம் ஏகாந்தமாக இருக்கிரும். உன் மனதில் உள்ளதைச் சொல்லு. நான் அமைதியுடன் ஏற்றுக் கொள்ளுவேன்."

"அப்பா! இருவரும் ஒன்ருக வளர்ந்தோம். தம்பதிகள் என்று பலராலும் போதிக்கப்பட்டோம். ஆனல் 'காதல்' என்பது தனிப்பட்ட விஷயம் போலும். அக்காதலை விதியானது விசித்திரமான தன்மையில் விளையாடிவிட்டது. பாமாவின் காதல் பாலச்சந்திரனிடம் சென்றது. என் காதல் கலாவதியினிடம் சென்றது. இதை என்னவென்று சொல்வது?"

"விதியின் விசித்திரம். அப்பா! உன் காதல் ஏற்ற இடத்தை நாடியது. ஆனல் சட்டம் இடமளிக்காதே. அதனல் பாமாவின் காதல் கவனிக்கப்பட முடியாத விஷயம். அவளை மணந்துகொண்டு, சுகபோகமாக வாழ்க்கை நடத்து. கலையின் பெயரும் குன்ருது"

"அப்பா! எல்லாமறிந்த தாங்களே இப்படிப் பேசினல் என்ன சொல்வது? உண்மைக் காதலுக்கு இருப்பிடம் ஒன்றுதானிருக்க முடியும். பாமாவின் காதலைச் சிதைத்து அவளையடைந்தால் இருவர் வாழ்நாளும் சுகமென்ற பாதையைக் காணமுடியுமா? இருதாரவாழ்க்கையை நான் ஏற்கமாட்டேனென்பதைத் தங்கள் மனமறியாதா? அப்பா! வளைத்துப் பேசாமல் என் முடிவைத் தெரிவித்து விடுகிறேன். பவானிதேவியின்முன் சத்யம் செய்து சொன்ன சொற்களை நான் காப்பாற்றக் கடமைப் பட்டவனல்லவா? சட்டம், தாங்கள் யாவரும், கலாவதியின் பிறப்பை உத்தேசித்து தாசி என்ற சொற்களை அழித்து, மனமுவந்து அளிப்பதானல் நான் அவளைப் பட்ட மகிஷியாக ஏற்பேன். பாமாவைப் பாலச்சந்திரனுக்களித்து, என் உரிமையில் சமபாகம் அவளுக்கும் அளிப்பேன். அல்லாத பக்ஷத்தில் பிரும்மசரியமே மேல்'. உங்கள் மனப்படி பட்டமேற்று ராஜ்ய காரியங்களைக் குறைவின்றிப் பாதுகாப்பேன். பாமாவின் காதல் மணம் நடந்து அவள் சந்ததியே வம்ச விருத்தியாகும். மனமுவந்து தாங்கள் ராஜ பதவியிலிருந்து என்னை விலகும்படி செய்துவிட்டால் கலையுடன் கலாவை அடைந்து நாடோடியாக நிம்மதியாக வாழ்க்கை நடத்துவேன். அதிலும் தாங்கள் விரும்பினல் சேவகனுக ராஜ்ய விஷயங்களை உங்களுக்கு உதவியாகக் கவனிப்பேன். இவ்விஷயங்களில் தாங்கள் எந்த விதமான கட்டளையிடுகிறீர்களோ அதன்படி நடக்கிறேன். ஆனல் பவானி தேவிமுன் கலாவதிக்கு ஆணையிட்டுக் கூறிய வாக்குக் காப்பாற்றப்படவேண்டும். நான் பிரும்மசாரி என்ருல் அவள் கன்னிகை. அப்பா! இதுவரை நாங்கள் எவ்வளவு பழகியும், வரம்புமீறி நடந்து கொண்டவர்களல்ல, பாமாவும் அப்படியே. பவானிதேவியறிய, சத்தியமாகக் கூறுகிறேன்" என்ருன்.

"ஆஹா! என்ன உலகம்! என்ன விதியின் விசித்திரம்! அழகு, கலை, குணம், பணம், அந்தஸ்து, யாவற்றிற்கும் புறம்பானது காதல்! கலாவதி ராணியானல், நமது சமஸ்தானம் இன்னும் மேலோங்கும். உனது தீரமும் அவளது யூகமும் ஒன்று கூடினல்? அதனல் விளையும் அற்புதங்களைக் கண்டு உலகம் பொருமை கொள்ளும். ஆனல் நான் என்ன செய்ய முடியும். பவானி தேவி அருள் செய்யட்டும். ரவிவர்மா! நீ முதலில் மகாநாடு சென்று வா. அதற்குள் விஷயங்களை ஆலோசித்துச் சீர்திருத்தி ஓர் முடிவுக்குக் கொண்டு வருகிறேன். நீ வந்தவுடன் அனேகமாக உன் எண்ணம் கைகூடும்படி செய்து விடுவேன். உன்னை வளர்த்து, உன் சந்ததியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் எங்களுக்கு உன் கடமையைச் செய்தாகவேண்டும். பிரும்மசர்யம் என்பதும், விடுதலை என்பதும் நடக்காத விஷயம். கவலையில்லாமல் சென்றுவா. பிறகு பார்க்கலாம்" என்ருர்.

பிறகு சற்றுநேரம் மஹாநாட்டில் செய்ய வேண்டிய விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பிரிந்தார்கள். படுக்கை அறைக்கு வந்த ரவிவர்மன் மணி இரண்டு என்பதை அறிந்தும் சுரங்க வாயிலாகக் கலாவதியின் அறைக்கு வந்தான். படத்தின் முன் விளக்கெரிந்து கொண்டிருந்தது. கலாவதியின்படுக்கை அறையில் நுழைந்துவிளக்கைப்

போட்டான். மஞ்சத்தில் ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள் கலா.

அருகில் சென்று இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து, அவள் மார்பின்மீது வைத்தான். திடுக்கிட்டு விழித்து, யார் என்று எழுந்து உட்கார்ந்தாள். "ஆ, தாங்களா! ஏது இவ்வேளையில்? ஒரு மணி வரை எதிர்பார்த்தேன், வரவில்லை. வேலை அதிகம்போலும் என்று எண்ணிப் படுத்துக்கொண்டேன்" என்று சொல்லிய வண்ணம் மஞ்சத்தை விட்டு இறங்கி நின்றாள்.

"முக்கியமான விஷயமாதலால் நடுநிசியில் வந்தேன்." என்று சொல்லிய வண்ணம் மஞ்சத்தில் உட்கார்ந்து ஒருபுறமாகத் தலையணையில் சாய்ந்துகொண்டு, "இப்படி என் மார்பிற்கெதிரில் உட்கார்; என்னைத் தொடாமல் உட்கார இடமிருக்கிறது" என்றான்.

"மன்னிப்பே கிடையாதா? அறியாமல் செய்த பிழை" என்று சொல்லிய வண்ணம் அவன் காண்பித்த இடத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"கலா! நான் என்ன சொல்லிவிட்டேன். மன்னிப்பு எதற்கு? நன்மையான விஷயம் தானே. கூடியசீக்கிரம் இந்த நிலைமை மாறி, அதோ பார் அந்த நிலைமை ஏற்பட்டுவிடும்" என்று எதிரிலிருந்த படத்தைச் சுட்டிக் காண்பித்தான். அதில் ஓர் யுவன் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்தான். அழகிய யுவதி அவன் மார்பின்மீது சாய்ந்து உட்கார்ந்துகொண்டு வெற்றிலைச் சுருளை அவன் வாயில் போட்டுக்கொண்டிருந்தாள்.

"அது நமக்கு அதிசயமல்லவே. போகட்டும், முக்கியமாக வந்த விஷயம் என்ன?"

"நான் நாளைக்காலை மகாநாடு நிமித்தம்......ஊர்செல்லப் போகிறேன். அதைச் சொல்லவே வந்தேன்"

"ஏன் இவ்வளவு அவசரம்? விஷயம் என்ன?"

"இன்று இரவுதான் இரகசிய அழைப்பு வந்தது. அப்பா என்னை உடன் புறப்படும்படி சொல்லிவிட்டார். விஷயம்" என்று மகாநாட்டின் விபரம் முழுவதும் சொல்லி முடித்தான்.

"அப்படியானால் நானும்கூட வருகிறேனே. அதில் கலந்து பேச எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது."

"வரலாம், ஆனால் இதுசமயமல்ல. நீ வந்தால், உன் நடனத்தைக்கொண்டே யாவரையும் நம் வழியைப்பின்பற்றும்படி செய்துவிடலாம். மகாநாட்டில் உன்னைப் பேசவிட்டாலும் தீர்மானம் தோல்வியே அடையாது. ஆனால் அப்பா இதுவிஷயம் இப்பொழுது வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அவர் வார்த்தையை மீறுவதெப்படி? கூடிய சீக்கிரம் தம்பதிகளாகி மகாநாடு செல்லலாம், கவலைப்படாதே"

"இருக்கலாம். ஆனால் நல்ல ருசிகரமான சந்தர்ப்பம் நழுவிவிடுகின்றது. என்ன இருந்தாலும் பெண் ஒரு படி இறக்கந்தானே" என்றாள்.

"அம்மா! இதிலென்ன ஆர்வம்? எது விஷயத்திலும் சலிப்பே கிடையாதா? நீ அமானுஷிகப் பிறவியென்றே தோன்றுகிறது. அதுபோகட்டும் இன்னொரு விஷயம்"

"என்னவோ?"

"நான் திரும்பி வந்ததும் விவாகத்தை நடத்தப் போவதாகச் சொன்னார்."

"யாருக்கு?"

"எனக்கு"

"வதூ"

"பாமா" என்றான் புன்சிரிப்புடன்.

"தாங்கள் என்ன சொன்னீர்கள்?"

"நான் சொல்வதை ஒப்புக்கொள்வதாக இல்லை. பாமாவை முதலில் ஏற்றுக்கொண்டு, பிறகு உன்னையும் ஏற்றுக்கொள்ளச் சொன்னார்."

"தாங்கள் என்ன சொன்னீர்கள்?"

"என்ன சொல்லியிருப்பேன், சொல் பார்க்கலாம்."

"பாமாவைமட்டும் ஏற்பதாகச் சொல்லியிருப்பீர்கள்."

"என் காதலைவிட கலையே பெரிதாக எண்ணிவிட்டாய்போலும்"

"அவ்விடம் கடமை முக்கியமாகும்பொழுது இவ்விடம் கலை முக்கியஸ்தானம் பெறவேண்டியது தானே. விளக்கை அணைத்தால் இருட்டுத்தானே வருகிறது. அதை வாவென்று வாயினால் அழைக்கவேண்டுமா?"

"கலா! நீ மிகவும் பொல்லாதவள்"

"ஏனோ?"

"நான் தடுக்கில் நுழைந்து பேசினால், நீ கோலத்தில் நுழைந்து பேசுகிறாயே."

"எல்லாம் அவ்விடத்துப் பழக்கம்தான். சரி, விளையாட்டுப்போதும். உண்மையான

விஷயத்திற்கு வாருங்கள். அப்பா என்ன சொன்னூர்?''

'' அதுதான் சொன்னேனே ''

''ஐயோ! சொல்லமாட்டீர்களா?'' எனக் கெஞ்சிக் கேட்டாள்.

''என்னத்தைச்சொல்ல, எனக்குச் சாமியா வந்திருக்கிறது ''

''சரி, வேண்டாம். தானாக மட்டைக்கு இரண்டு கீற்று என்று புரிந்துவிடுகிறது.'' என்ருள் முகத்தை மறுபுறம் திருப்பியவாறு.

''அப்பா, கோபம் வந்துவிட்டதா? எங்கே பார்ப்போம் சிவந்த முகத்தை'' என்று அவள் மோவாயைப் பிடித்துத் திருப்பக் கையை மோவாயருகில் கொண்டுபோனவன், ''சட்! என்ன காரியம் செய்யவிருந்தேன். மன வெழுச்சி மறதியைக் கொடுத்துவிட்டது.'' என்று கையை மார்பின்மீது வைத்துக் கொண்டு அவளை உற்று நோக்கினுன்.

திரும்பி, அவளை இரக்கமாகப் பார்த்து விட்டு ஒரு நீண்ட மூச்சுவிட்டான்.

''அப்பா சம்மதம் கொடுத்துவிட்டார்'' என்ருன் அவளைப் பார்த்தவாறு.

''என்ன? உண்மையாகவா?'' என்ருள் ஆச்சர்யத்துடன் அகலவிழித்து. சோக ரேகை மறைந்து இன்ப ரேகை படர்ந்தது முகத்தில்.

''விசையின் சரியான பாகத்தில் கைவைத் தால்தானே பிரகாசத்தைக்காணமுடியும்?'' என்று சிரித்தான்.

''ஐயோ, மறுபடியும் என்னை ஏமாற் றவா?'' என்ருள் கோபச்சிரிப்புடன்.

''இல்லை கலா, உண்மை. இவ்வளவு சீக் கிரம் எதிர்ப்பில்லாமல் நிறைவேறும் என்று எதிர் பார்க்கவில்லை.''

''என்னவெல்லாம் பேசினீர்கள்? சொல் லுங்கள்.''

''சம்பாஷணையை ஒருவிதமாகச் சொல்லி முடித்து விட்டு, ''நான் அப்பவே சொல்லவில் லையா? அப்பா காதலைச் சிதைக்க விரும்ப மாட்டாரென்று எல்லாம் உனது குண விசேஷம்தான்''

''இல்லை பவானிமாதாவின் கருணை; தேவி! உன் அருளை என்னவென்று கூறுவேன்'' என்று ஆனந்த மிகுதியினுல் கண்களை மூடி, கரத்தைக் கூப்பி வணங்கினுள்.

''இனி உன் கவலை தீர்ந்ததல்லவா? நாட்டிய ராணி நாட்டின்ராணியாகிவிட்டாள். இனி நான் ஆர்வமுடன் பேசும்பொழுது உன் முகம் சோகத்தைக் காண்பிக்காதல்லவா?'' என்ருன்.

''ஆஹா! ஈதினமே சுதினம். இவ்வமிர்த மொழி பகர்ந்த தங்களுக்கு நான் என்ன கைம்மாறுசெய்ய முடியும். இனி சபதம் ஏன்? இதோ இதை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கையைப் பற்றப்போகும் சமயம்,

சட்டென எழுந்து நகர்ந்து உட்கார்ந்து கொண்டு, ''வேண்டாம் கலா! உன் ஹ்ருதயா னந்தமே எனக்கு உகந்த பரிசு. தேவிமுன் செய்த சபதம் காப்பாற்றப்படவேண்டும். என் உறுதி காப்பாற்றப்படும். உன்மீது எனக்குச் சற்றும் வருத்தமில்லை. தற்சமயம் நமது மனம் அமைதியுற ஒன்று பாடவேண் டும், அல்லது ஆடவேண்டும். என்ன செய்ய லாம் சொல்'' என்ருன்.

''உங்கள் விருப்பம்போல் எதுவும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்''

''இப்பொழுதிருக்கும் மனநிலை பாடு வதற்குத் தயாராகாது. ஒரு ஆட்டம் ஆட லாம் எடுத்துக்கொண்டுவா!'' என்ருன்.

''சதுரங்கப் பலகையும் காய்களும் கொண்டு வந்தாள். மஞ்சத்தின் மீதே இருவரும் ஆட உட்கார்ந்தார்கள்.

பிறகு சற்றுநேரம் ஏதோ மனம் போனபடி பேசிக்கொண்டிருந்துவிட்டு, சுரங்க வாயிலை அடைந்தார்கள். வாயிற்படியில் நின்றவண் ணம், ''கலா, நான் சென்று வரட்டுமா? உற் சாகமாக இருப்பாயா?'' என்ருன்.

''சந்திரோதயமின்றிப் பிரகாசம் எவ்விதம்? ஏதோ நாளைக் கடத்துவேன். அன்ருடம் நடக்கும் விஷயங்களை அப்படியே இரவு தோறும் எழுதி, தினம் ஒரு கடிதமாக எனக்குக் கிடைக்கவேண்டும்''

''அப்படியே செய்கிறேன். நீயும் எழுத வேண்டும்''

''நான் எழுத என்ன விஷயமிருக்கிறது. சாப்பிட்டேன், தூங்கினேன், என்று எழுத லாம்''.

''அந்த விஷயமாவது உன்கைப்பட எழுதி வந்தால் உன்னைப் பார்ப்பது போல் உன் கையெழுத்துகளைப் பார்த்துச் சற்றே சாந்தி பெறுவேன்.''

''அப்படியானுல் சரி.''

பிறகு பாமா, சந்திரன் ஜாக்கிரதை. ஆறு குளம் தாண்டியாகி விட்டது. வாய்க்கால் தாண்டவும்வசதி கிடைத்துவிட்டது. பாதி யில் சறுக்காமல் கவனித்துக்கொள்''

"உத்தரவு பிரபு."

"கலா சென்றுவரவா? போகவே மனமில்லை. அப்பாவிடம் எவ்வளவோ மன்றாடிக் கேட்டேன், உன்னைக்கூட அழைத்துச் செல்ல. கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஏனோ உன் பிரிவு இன்று மிகவும் என்னைச் சஞ்சலத்திற்குள்ளாக்குகிறது

"இவ்வளவு நேரம்சொல்ல முடியாமல் தவித்தேன். தாங்கள் எவ்வளவோ தடவை பத்துப்பதினைந்து நாட்கள் பிரிந்து சென்றிருக்கிறீர்கள். இன்று ஏதோ மிகவும் வேதனையளிக்கிறது. பவானிமாதா சஹிக்கும் தன்மையைக் கொடுத்தருளவேண்டும்." என்றாள் கண்களில் நீர் நிரம்பினது..

"கலா! கலங்காதே. நீ கலங்கினால் என் மனம் மிகவும் கோழையாகிவிடுகிறது. எவ்வளவு சீக்கிரம் திரும்பமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் திரும்பிவிடுகிறேன் இந்தா" என்று உடைவாளை எடுத்து முத்தமிட்டு அவள் முன்பாக நீட்டினான். அவன் முத்தமிட்ட இடத்தில் அவளும் அவற்கு முத்தமிட்டாள்.

உறையிலிட்டுவிட்டு "நான்சென்று வரவா?" என்றான்.

"சென்று வாருங்கள். பவானிமாதா உங்களைச் சீக்கிரமாக என்னிடம் சேர்த்து விடட்டும். நீங்கள் செல்லும் காரியம் உலகத்திற்கே வெற்றி கொடுக்கட்டும். நமஸ்காரம்" என்று கைகுவித்தாள்.

"ஜெய் ஹிந்த்!" என்றான்.

"ஜெய் ஹிந்த்! என்று பதிலுக்குக் கூறினாள். சுரங்க வாயில் விசையில் கைவைத்தபடி நின்றான்.

"ஒருவர் கண்கள் மற்றவர் கண்களைக்கௌவும் விதமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். மணி நான்கடிக்கும் சப்தம் காதில் விழவே திடுக்கிட்டு 'கலா!" என்றவாறு விசையைத்திருப்பினான்.

"யுவராஜ்!" என்று சொல்லி முடிக்குமுன் வாயில் மூடிக்கொண்டது. பிரிவின் துன்பம் தோன்ற வாயிலைப் பார்த்தபடி அசைவற்று நின்றாள். அவன் எழுப்பினதினதிலிருந்து ஒவ்வொரு விஷயமாக நினைவில் தோன்ற, "அப்பா சம்மதம் கொடுத்துவிட்டார்" என்ற வாக்கியம் அவள் காதில் ஒலிப்பது போலிருந்தது. "அப்பா சம்மதம் கொடுத்துவிட்டார்" என்று வாய்விட்டே சொன்னாள். அவளறியாத ஆனந்தம் மனதில் தோன்றவே "ஆனந்தம் பிரும்மானந்தம் சிதம்பரநாதன், சித்விலாஸ ஜோதி" என்று பாடிய வண்ணம் நடனமாடிக்கொண்டே வந்து அவ்விடம் வைக்கப்பட்டிருந்த நடராஜ பிம்பத்தின் பாதத்தில் தலையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

ரவிவர்மன் சென்று எட்டுத் தினங்கள் ஓடிவிட்டன. சாயங்காலம் அவனிடமிருந்து வந்த கடிதத்தை நான்காவது தடவையாக, அவன் படத்தின் முன் நின்று படித்து முடித்தாள் கலா. மனம் குதூகலம் அடைந்தது. கடிதத்தை வைத்துவிட்டுக் கிராமபோன் பிளேட்ஒன்றைப்பாடவிட்டாள். ரவிவர்மனை முதலில் சந்தித்த அதே இடத்தில் ஆடத் துவக்கினாள். 'இவனாரோ" என்ற காம்போதி ராக பதத்தைப்பாடியவாறு அபிநயம் பிடித்தாள். "பாதத்தில் ஒரு மங்கை பக்கத்தில் ஒரு மங்கை" என்ற இடத்தில் அபிநயம் பிடிக்கும்பொழுது 'சபாஷ்" என்ற சப்தம் கேட்கவே திடுக்கிட்டு, ஆட்டத்தை நிறுத்தித் திரும்பினாள். சுரங்க வாசலில் மஹாராஜா நின்றுகொண்டிருந்தார். ஆச்சரியம் வாயை அடைத்துவிட்டது. கல்லாகச் சமைந்து நின்றாள்.

"கலா! கெடுத்துவிட்டேன். உனதுஅதியற்புத பாவம் மனதைப் பரவசமடையச்செய்துவிட்டது. ஆஹா! என்ன இன்பம். பாதியில் நிறுத்தாதே ஆடு" என்று சொல்லியவாறு அவளை நோக்கி வந்தார்.

நிலைமையைச் சமாளித்துக்கொண்டு "வரவேண்டும்! என்ன ஆச்சரியம். என்ன பாக்யம்? இன்று என் ஜன்மத்தில் சுதினம். இப்படி அமருங்கள். உங்கள் விருப்பப்படி நடனம் செய்கிறேன்" என்று வாய் சொன்னாலும், எதற்காகச் சுரங்க வாயிலாக இரவு பத்து மணிக்கு வரவேண்டும் என்று மனம் சிந்தனையில் ஈடுபட்டது.

நடனம் முடிந்ததும் "ஆஹா! இந்நடனத்தைச் சிறைப்படுத்துவதென்றால் அது எவ்வளவு அறிவீனம்" என்றார்.

"சிறைப்படுத்துவதா?" என்றாள். மேலே பேச நா மறுத்தது.

"கலாவதி! இப்படி வந்து உட்கார்." என்று அவர் உட்கார்ந்திருந்த சோபாவின் பக்கத்திலுள்ள நாற்காலியைக்காண்பித்தார்.

"இல்லை மஹராஜ், இப்படியே உட்காருகிறேன்" என்று தரையில் ரத்ன கம்பளத்தின் மீது அவர் காலடியில் உட்கார்ந்து கொண்டாள்.

"கலாவதி! என் வரவு உன்னைத் திகைப்படையச் செய்யுமென்பதை நானறிவேன். வண்டி ஓடமேறுவதும், ஓடம் வண்டியேறுவதும் காலத்தின் தன்மையே யாகும். நாடாளும் மன்னனாகிய நான், குழந்தையாகிய உன்

னிடம் ஒரு விஷயத்தை யாசிக்க வந்தேன்" என்று நிறுத்தினார்.

கலாவதியின் மனம் அவளறியாமல் வேதனை செய்தது. சற்று முன்னிருந்த குதூகலம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தது. "அரசே! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. தங்கள் கட்டளைக்குத் தங்களிருப்பிடம் ஓடி வரக்கடமைப்பட்டவளிடம் இரவு பத்து மணிக்கு மேல் சுரங்கவாயிலாக நடந்து வந்து, நடனத்தைச் சிறைப் படுத்துதல், யாசகம் என்றெல்லாம் சொல்லுவது ஏன்? குழந்தையாகிய என்னைப் பரிசோதனை செய்யாமல் விஷயத்தை......" என்று தடுமாறினாள்.

"உன்னிடம் யாசிப்பது ரவிவர்மனை உனது காதலிலிருந்து விடுதலை செய்துவிட வேண்டுமென்பதே. உங்கள் இருவரின் நன்மைக்கே இதை யாசிக்கிறேன். உங்கள் காதல் கைகூடுமானால் உனது நடனம் பிரகாசமற்றுப் போய்விடும். அவன் பதவியிழக்க நேரிடும். நீ தெய்வாம்சம் பெற்றவள். கலைதான் உன்னைத்தீண்ட முடியும். கலைஞன் உன்னைத் தீண்ட முடியாது. அவனை விடுதலை செய்துவிடு" என்றார்.

ஒரு சட்டி நெருப்பை அவள் மீது வீசினால் எவ்விதமிருக்குமோ. அவ்விதம் மனம், தேகமெல்லாம் பற்றி யெரிந்தது. "அரசே! தாங்கள் அறியாத விஷயமல்ல. காதலை விடுதலை செய்ய முடியுமா? என்றால் முடியாது. மன்னியுங்கள்" என்று கண்களில் நீர் வடிய அவர் பாதத்தில் தலையை வைத்து வணங்கினாள்.

"கலா! என்ன செய்வது? இது விஷயம் மிகவும் சிக்கலானது. எனக்காக, என் குல கௌரவத்திற்காக நீ அவனை விடுதலை செய்தாக வேண்டும். உங்கள் இருவரையும் ஏற்பதானால் நான் நிம்மதி அடைவேனே. அவன் அப்படிச் செய்யமாட்டான். நீ மனம் வைத்தால் அவனை விடுதலை செய்ய முடியும்."

(தொடரும்)

“வெற்றி”

எஸ். கிருஷ்ணன்

நள்ளிரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு சுற்றுப்புறமெங்கும் நரிகள் ஊளையிட்டன. கலிங்கப் போர்க்களத்தில் படுகாயம் அடைந்து கிடந்த போர் வீரர்களின் தீனக்குரல் பாசறை வாயிலில் நின்றிருந்த அசோகனுள்ளத்தைக் கலக்கியது. “இக் கொடிய இரவையும் காண்பதென் விதியோ” என்று அழுதது திங்கள். இக் கொடுமை யனைத்திற்கும் காரணமான நீ உன் வினையில் விளைந்த பயனைப்பார்” என்று ஏசிக்காட்டுவதுபோல் பளிச்சென்று பிரகாசித்தது நிலா. சற்றுத் தொலையில் சிறுகச் சிறுக மடிந்துகொண்டிருக்கும் எண்ணிறந்த மாந்தரை எண்ணி ஸ்தம்பித்து நின்றிருந்தான் அசோகன். முன்பு பாடலீபுரத்தில் தன் அரண்மனை உப்பரிகையில் நின்று கொண்டு அனுபவித்த குளிர் நிலவுக்கும் இந்த கொலைக்களத்து நிலவுக்கும் எவ்வளவோ வித்தியாசம்!.

சற்றுத்தூரத்தில் போர்க்களத்தில் ஊர்ந்து ஊர்ந்து சென்ற ஒரு மனித உருவம் அசோகன் கவனத்தைக் கவர்ந்தது. அசோகன் தன் மெய்க்காவலாளன் ஒருவனை அழைத்து அந்த மனிதனை அழைத்து வரும்படி உத்தரவிட்டான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் மெய்க்காவலாளன் ஒரு வாலிபனை அழைத்துக்கொண்டு வந்து அசோகன் முன் நிறுத்தினன். வாலிபனை அசோகன் ஏற இறங்கப் பார்த்தான். வாலிபன் விசாலமான நெற்றியின் பாதியை மறைத்திருந்தது அவன் தலையில் சுற்றியிருந்த முண்டாசு. வாலிபனுடைய முகத்தில் சோகத்தினுல்தானே என்னவோ ஒரு தனி எழில் பொலிந்துகொண்டிருந்ததுபோல் அசோகனுக்குத் தோன்றியது. அவனுடைய கண்கள் அழுததால் சிவந்து போயிருந்தன. இதழ்கள் படபடவென்று துடித்துக்கொண்டிருந்தன. அசோகனுடைய உள்ளத்தில் விவரிக்கமுடியாத ஒரு பதட்டமும் வேதனையும் ஏற்பட்டன அந்த வாலிபனைப் பார்த்தபோது. இமை மூடாமல் சிலகணம் நின்றபின் அசோகன், “வாலிபா, இந்த அடிக் களத்தில் இவ்வேளையில் என்ன வேலை?” என்று வினவினன்.

வாலிபன் அசோகனை நிமிர்ந்து பார்த்துக் கொண்டு, “என் தந்தை கலிங்கப் போரில் கலந்துகொண்டார். அவர் மாண்டுவிட்டாரா அல்லது காயம் அடைந்து எங்காவது விழுந்து கிடக்கிருரா என்று அறிவதற்காக வந்தேன். இரவின் முன்ஜாமத்திலேயே அவரைக்கண்டு பிடித்தேன். சற்று முன்தான் அவர் என்னைப் பார்த்துக்கொண்டே உயிர் நீத்தார். என் தாயிடம் விவரத்தைச் சொல்வதற்காக நான் திரும்பிப் போகும்போது இங்கு பிடித்துக்கொண்டு வரப்பட்டேன்” என்று விம்மினன்.

அசோகன் வாலிபனை அணுகி, அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, “அழாதே, சகோதரா, நீ அடைந்த பெரிய நஷ்டத்துக்கு என்னுல் ஈடு செய்ய முடியாது. ஆயினும் என்னுல் இயன்ற அளவு ஈடு செய்கிறேன். நாளையிலிருந்து நீ என்னுடன் வந்துவிடு; உன் தாய் உடன் பிறந்தோர் எல்லோரையும் அழைத்து வா. பாடலீபுரத்தில் என் அரண்மனையிலேயே நீ வேலை செய்யலாம்” என்ருன்.

இதைக் கேட்ட வாலிபனுடைய முகத்தின் சோகத்திரை விலகுவதையும் அவன் கண்கள் தீப்பொறியைச் சிந்துவதையும் கவனித்த அசோகன் திகைத்தான். வாலிபன், “அரசே, நான் வரவில்லை. மன்னிக்க வேண்டும். இன்று கலிங்கம் உங்கள் மிருக பலத்தினுல் வீழ்ந்து விட்டது. ஆனுல் இன்ஞெருநாள் அது வீரத்தோடு எழுந்து தன்னை மீட்டுக்கொள்ளும். இன்று குழந்தைகளாக இருப்பவர்கள் அன்று வாலிபர்களாகிப் போர் புரிவார்கள். அப்பொழுது போரிடத் திறமையற்றுப் போயிருக்கலாம் நான். ஆனுல் என் குழந்தைகளையாவது போர்க்களத்துக்கு அனுப்பித் தாய்நாடு விடுதலை யடைவதற்கான என் பணியை ஆற்றுவேன். உங்களுடன் வந்து உங்கள் சோற்றையும் உப்பையும் தின்றுவிட்டு

உங்களுக்குத் துரோகம் செய்ய முடியாது" என்றான்.

அசோகன் பிரமித்துப் போனான்.

தன்னைச் சமாளித்துக்கொண்டே அசோகன், "உன்னைப்போன்ற வீர வாலிபர்களைப் பெற்றவர்கள் புண்ணியாத்மாக்கள். நீ பிறந்த கலிங்கம் புனித நாடு. உன் போன்றவர்களுடைய துணிவினாலும் நேர்மையினாலும்தான் கலிங்க முற்றுகை மூன்று மாத காலம் நீடித்தது. உன் பெயர் என்ன?" என்றான் உவகை பொங்க.

"சித்திரகுப்தன், அரசே! போய் வருகிறேன்" என்று சாந்தமாகக் கூறிவிட்டு அந்த வாலிபன் அவ்விடம் விட்டு அகன்றான்.

வாலிபத்தின் இரத்தத் துடிப்பில் மெல்லிய இரக்கம், பரிவு போன்ற உணர்ச்சிகளையே அறிந்திராத அசோகன் அன்று அப்படி மாறிவிட்டதேன்! அசோகன் இந்தக் கேள்வியைத் தன்னைத்தானே பன்முறை கேட்டான். சரியான மறுமொழி கிட்டவில்லை.

ஆயினும் சிந்தனை ஓயவில்லை. லட்சக்கணக்கில் அன்று அன்னையர் தந்தையர் மக்களை இழந்திருப்பர். லட்சக்கணக்கில் மங்கையர் தம் மாங்கலியம் இழந்திருப்பர். லட்சக்கணக்கில் குழந்தைகள் தம் தந்தையரை இழந்திருப்பர். இவர்கள் அனைவர் உள்ளங்களும் குமுறும். இவர்களிடும் சாபம் அசோகனை அழிக்கும். இதுதானா வெற்றியின் பலன்? இதற்காகவா அவன் போரிட்டான்? கலிங்கத்தைப் பிடித்ததால் அவனுக்குக் கிடைத்த லாபம் என்ன? அவன் வேண்டுமென்றால் கலிங்கத்தின் செல்வமனைத்தையும் சூறையிடலாம். பொன், வயிரம், மாணிக்கம் எல்லாம் கொள்ளையிடலாம். ஆனால் அவனுடைய இரத்தக் கறை படிந்த கைகளால் தொட்டாலே அவைகள் களையிழந்துவிடலாம்.

சற்றுத் தொலைவில் தீ எரிந்துகொண்டிருந்தது. அன்று நடுப்பகலில் ஒரு கிராமத்தின்மீது மூட்டப்பட்ட தீ அது. அதில் எத்தனை ஏழைகளின் குடிசைகள் எரிந்து சாம்பலாயினவோ? இதுவா வெற்றி! இதற்காகவா அவன் போர் தொடுத்தான்?.........

"அரசே!" என்று பின்னாலிருந்துவந்த சாந்தமான குரல் அசோகனுடைய சிந்தனையைக் கலைத்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் பின்புறமாக வந்து நின்றிருந்தான் ஒரு பௌத்த பிக்ஷு. அனந்த சாந்தி உடல் பெற்று உலவுகிறதோ என்று தோன்றுமாறு அந்தப் பிக்ஷுவின் முகம் அமைதியில் லயித்திருந்ததாக அசோகன் எண்ணிக் கொண்டான், அவன் இருகைகளையும் தூக்கிக் கும்பிட்டான். பிறகு அவன் அந்த முகத்தை எங்கோ பார்த்ததுபோன்ற ஞாபகத்தில் ஒரு நிமிஷம் யோசித்தான், நினைவு வந்துவிட்டது. ஆறு மாதங்களுக்குமுன் பாடலீபுத்திரத்தின் அரண்மனை வாயிலில் ஒரு நாள் மாலை அசோகன் வந்து கொண்டிருந்தான். நந்தவனத்தில் உலாவ எண்ணி வந்த அவனுக்கு எதிரில் சன்னியாசி வரவும் அபசகுனம் என்று எண்ணி ஆத்திரம் அடைந்தான். ஒரு போர் வீரனைக்கொண்டு அந்தப் பிக்ஷுவை நன்றாகப் புடைக்கச் செய்தான். அடியை ஏற்றுக்கொண்ட பிக்ஷு, "புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி" என்றுதான் கூறினான். கடைசியில் அவனை வெளியே தள்ளும்படி அசோகன் கட்டளையிட்டபோது பிக்ஷு, "காலம் வரவில்லை, அரசே, காலம் வருமளவும் காத்திருப்பேன்." என்று சாந்தமாகக் கூறிவிட்டுச் சென்றான்,

அதே பிக்ஷு அதே சாந்தமுடன் இப்பொழுது அசோகன் எதிரில் நின்றிருந்தான். ஆச்சரியமுடன் அசோகன் "உமக்கு என்னைப் பார்க்கப் பயமாயில்லையா?" என்று அவரிடம் கேட்டான்.

இதைக் கேட்ட பௌத்த பிக்ஷுவின் கண்களிலும் இதழ்களிலும் ஒரு இளமுறுவல் வெடித்தது, "அன்றும் பயப்படவில்லை, அரசே! அன்பு என்னவென்று அறிந்தவனுக்கு அச்சமே இல்லை" என்றான் பௌத்த பிக்ஷு.

இன்னது பேசுவதென்று தெரியாமல் திகைத்த அசோகனிடம் பிக்ஷு, "அரசே, உங்கள் பெயர் என்ன?" என்று வினவினான்.

தன்னைக் கேலி செய்கிறான் பிக்ஷு என்று எண்ணிக்கொண்ட அசோகன், "ஏன், உங்களுக்குத் தெரியாதா?" என்றான் நிதானம் இழக்காமல்.

"தெரியும். ஆனால் உண்மையில் நீர் இப்பொழுது அசோகன்தானா?" என்றான் பிக்ஷு புன்முறுவலுடன்.

"அப்படியென்றால்? கேலி செய்வதற்காக வந்தீர்களா?" என்றான் அசோகன் சற்றுப் பொறுமை இழந்து.

"அரசே, அசோகன் என்றால் சோகமற்றவன், துயரமற்றவன் என்று பொருள், உங்களுக்கு இப்பொழுது சோகமே இல்லையா? பழைய அசோகர் தானா நீர்?"

"இல்லை. அந்த அசோகன் அல்ல. இன்று என்னுள்ளத்தில் உறைந்திருப்பது சோகமே, தேவா!" என்றான் அசோகன்.

"துயரம் ஏன் ஏற்பட்டது, தெரியுமா, அரசே? சோகத்தின் காரணம் உங்கள் உள்ளத்தில் ஊறத் தொடங்கியிருக்கும் அன்பு தான். ஊற்றுச் சுரந்து அன்பு நிறைந்துவிட்டால் சோகம் விலகி, சாந்தி நிலவும். அப்பொழுது உலகனைத்தையும் நேசிக்கும் திறமை பெறுவீர்கள். அன்றுதான் உண்மையான இன்பம் உங்களுக்குக்கிட்டும். புத்தர் பிரான் அருளால் அந்த அன்பு உங்களிடம் விகசிக்கவேண்டும். நான் போய் வருகிறேன், "புத்தம் சரணம் கச்சாமி. தர்மம் சரணம் கச்சாமி," என்று கூறி நகர்ந்தான் பிக்ஷு.

பிக்ஷு போன திசையிலேயே பார்த்துக் கொண்டிருந்து விட்டு அசோகன் தன் கூடாரத்துக்குள் நுழைந்தான். பெரிய அகல் விளக்கு மத்தியில் எரிந்து கொண்டிருந்தது. தீப ஜோதி அசைவற்று நிலையாய், தியான நிலைமையிலிருக்கும் யோகிபோல் அந்த அறைக்குள் ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. இன்னொரு தீ சற்றுத் தொலைவில் வீடுகளை எரித்துக்கொண்டிருந்தது, ஒளி இன்பத்தைத்தரும் இதே தீ தான் அங்கே அழிவுத் துன்பத்தைத் தருகிறது. தன் சக்தியை அழிவுக்கல்லாமல் ஆக்கத்தில் பயன் படுத்துவதல்லவா கடமை? "ஆம்" என்றது அசோகன் அந்தராத்மா. அதுவே அவன் கடமை. வாலிபச் செருக்கில் அவன் தன் கண்களை இழந்திருந்தான். இந்தத் தீப ஒளி அவன் வெளிக்கண்களுக்கு மட்டுமல்லாமல் அகக் கண்களுக்கும் வெளிச்சம் கொடுத்துவிட்டது. இந்த எண்ணத்துடன் அசோகன் உள்ளத்தில் ஒரு புதுவித அமைதி ஏற்பட்டது. அமைதியுடன் அவன் படுத்தான்.

* * *

காலைக் கதிரவன் அந்தப் போர்க்களத்தில் முன் தினம் பெருகிய குருதியின் நிழலைக் கீழ்வானில் தீட்டிக்கொண்டே உயர்ந்தான். அசோகன் போர்க்களத்திலிருந்து விலகி நகரத்தின் மத்தியில் சென்று நின்று கொண்டே கூடியிருந்தவர்களிடம், "கலிங்கத்தின் வீர சகோதர சகோதரிகளே, நீங்கள் தோல்வியுறவில்லை. வெற்றி பெற்றீர்கள். நானும் தோல்வியுறவில்லை. வெற்றியே பெற்றேன். ஆம், உண்மையான வெற்றி பெற்றேன். என் அகந்தைமேல் வெற்றி பெற்றேன். வெற்றிக்காக நான் உங்களுக்குக் காணிக்கை கொடுக்கிறேன், உங்களுடைய தேசம் விடுதலை செய்யப் பட்டுவிட்டது. இதுதான் காணிக்கை ...... இல்லை. இது காணிக்கை அல்ல, நான் செய்த குற்றத்துக்கு பிராயச்சித்தமாகும். நான் உங்களுக்கு இழைத்திருக்கும் தீங்கு மிகக் கொடியது. அதற்காக நான் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்கிறேன். அதற்குத் தயாராகத்தான் இதோ உங்கள் எதிரில் நிற்கிறேன்" என்று நிறுத்தினான்.

நிமிஷங்கள் சென்றன. அங்கே கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே மௌனம் நிலவியது. அசோகன் தொடர்ந்தான், "அப்படியானால் நீங்கள் என்னை மன்னித்து விட்டீர்களென்றே நான் கருதுகிறேன். என்னால் இயன்ற அளவு என் குற்றத்திற்கு நான் பிராயச்சித்தம் செய்துகொள்ள இங்கே உங்கள் முன் பிரதிக்ஞை செய்கிறேன். உங்களுடைய துயரம் இன்றுமுதல் என் துயரம்; உங்கள் மகிழ்ச்சி என் மகிழ்ச்சி; உங்களுக்காக உழைப்பதே என் வாழ்வின் இலக்ஷியம்." என்றான்.

"அசோக சக்ரவர்த்திக்கு ஜே" என்று ஒரு தனிக் குரல் கிளம்புவதைக் கவனித்து அசோகன், குரல் வந்த திசையைப் பார்த்தான். முன் இரவில் அவன் சந்தித்துப் பேசிய அதே வாலிபன் குரல்தான் அது. அதைத் தொடர்ந்து பல குரல்கள் எழுந்தன. ஜய கோஷம் வானை உலுக்கியது.

* * *

தெய்வீக சாந்தியில் ஆழ்ந்து கிடந்தது அவ்விரவு. பால் நிலவைச் சொரிந்து கொண்டு திங்கள் பவனி வந்தான் வானவீதியில். பாசறை வாசலில் நின்றிருந்த அசோகன் மனம் இன்று சாந்திபெற்றிருந்தது. போர்க்களத்தில் கிடந்த பிணங்களை அகற்றுவதிலும் காயம் பட்டவர்களை வைத்திய விடுதிகளுக்கு அனுப்புவதிலும் பகல் பொழுது முழுவதையும் செலவிட்ட அசோகன் உடல் களைப்புற்றிருந்தாலும் உள்ளம் சோர்வுற்றிருக்கவில்லை. அவன் காதுகளில் முன் இரவில் பௌத்த பிக்ஷு சொன்ன, "அன்பு நிறைந்தால் சாந்தி நிலவும்" என்ற சொற்கள் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

சட்டென்று அவன் எதிரில் தோன்றினான் ஒரு வாலிபன். ஆம், முன் தினம் அவன் பார்த்த அதே வாலிபன், இன்று காலை அசோகனுக்கு ஜெயகோஷம் இட்ட அதே வாலிபன் இப்பொழுது வந்திருந்தான் அசோகனுக்கு எதிரில். அசோகன் வியப்புடன், 'யார், சித்திரகுப்தனா?" என்றான். வாலிபன் அசோகனை ஒருகணம் நிமிர்ந்து பார்த்துவிட்டு, "ஆம் அரசே, நேற்றிரவு நான்

இறுமாப்பினால் உங்களை அவமதித்தேன். இன்று அதற்கு மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறேன். நானும் என் தாயும் உங்களுடன் வருகிறோம் பாடலிபுத்திரத்துக்கு" என்றான்.

"வா, உன் தாயாரையும் அழைத்துக் கொண்டு வா," என்றான் அசோகன்.

வாலிபன் தயங்கி நிற்பதைக்கண்டு அவன் மேலும் ஏதோ பேச விரும்புகிறான் என்று ஊகித்த வண்ணம் அசோகன், "என்னவேண்டும்! சித்திரகுப்தா? தயங்காமல் சொல்," என்றான்.

வாலிபன் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு, "அரசே, நான் நேற்று உங்களிடம் பொய் சொன்னேன், என் தந்தை ஒரு வாரத்துக்கு முன்னாலேயே போரில் மடிந்து போனார். அவரை இழந்ததால் உங்கள் மேல் ஆத்திரம் பூண்டு உங்களைக் கொன்று பழிவாங்கும் எண்ணமுடன் இங்கே வந்தேன். ஆனால் உண்மை அன்பு என்னை வென்றது. நான் உங்கள் அடிமையாகி விட்டேன். நீங்கள் நினைப்பதுபோல் நான் ...." என்று நிறுத்தி விட்டுத் தலையில் சுற்றியிருந்த துணியை விலக்கியதும் பின்னிவிடப்பட்டிருந்த தலைமயிர் முழங்கால்வரை எட்டியது. பிறகு நாக் குழற, "என் பெயர் பிரதிமா. நான் உங்கள் அன்புப் பிச்சைக்காக ஏங்கும் ஒரு பெண்" என்று ஆண் உடையிலிருந்த பிரதிமா கூறிக்கொண்டே அவன் காலில் தலை சாய்த்தாள்.

அற்புத எழில்வாய்ந்த அந்தப் பெண்ணைத் தூக்கி நிற்க வைத்து, அவள் இடையில் கையைக் கொடுத்துக்கொண்டே அசோகன், "பிரதிமா, நான் வெறுப்பையும் கோபத்தையும் உதறித்தள்ளிவிட்டுத் தூய அன்பை எனதாக்கிக்கொள்ள விரும்புகிறேன். பிறருக்கு நான் அன்பு செலுத்துவதுபோல் பிறரும் எனக்கு அன்பைத் தர வேண்டும் என்று விரும்புகிறேன். அந்த ஆசை நிறைவேறும் என்பது இப்பொழுது எனக்கு உறுதியாகிவிட்டது. வா, பகைமையும் வெறுப்பும் நீங்க இருவரும் சேர்ந்து உழைப்போம். உலகில் இன்பம் பொங்க, புத்தர் பிரான் அருள் வழியை எடுத்து உரைப்போம் உலகிற்கு. அறமே வெல்லும் என்பதை உலகம் அறியட்டும்; வா, பிரதிமா" என்று கூறி அவன் பிரதிமாவின் நடுங்கும் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு பாசறைக்குள் சென்றான்.

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள் நாடு			ஸிலோன், பர்மா & மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

வாயச விடு தூது

[நவீன தூது பிரபந்தம்]

கிட்டு.

தலைவி ஸ்ரீமதி கம்ஸலா, தனது மனத்துயரைத் தெளிவாக வெளியிடும் நோக்கத்துடன் தம்பூர் சுருதி இல்லாமல் பாடுகிறாள்.

கமாஸ்.

தூது செல்பவர் யாரோ—எனக்கு
தூது செல்பவர் யாரோ (தூ)
காதைப்பிடித்துத் திருகி—எந்தன்
காதலனைக் கையுடனே அழைத்து வந்திட (தூ)

"முன் கோபம் இருந்தால் பின் சாந்தம் இருக்கும்" என்று ஒரு யூத ஞானி கூறினார். ஆனால் ஸ்ரீமதி கம்ஸலாவின் முன் கோபம் முற்றிலும் கோபந்தான். அவளுடைய நாகரிகக் கோபமானது நானாவிதப் பொருள்கள் மீதும், சகல ஜீவராசிகள் மீதும், சராசரங்கள் மீதும், "பெட்ரோல் ரேஷன் கூப்பன்"கள் மீதும் பாயும். ஒரு காலத்தில் ஸ்ரீமதி கம்ஸலாவின், கோபக்கனல் பருவங்களையே சுட்டெரித்துவிட முயற்சித்ததாம். காலம் இலையுதிர்காலம். தலையில் சூடிக்கொள்ளப் புஷ்பமில்லை. மாலையில் லேடி பீதாம்பரதாரிணியின் மாளிகையில் பத்துத் தினங்களுக்கு முன்பு பட்டு மெத்தையில் உயிர் நீத்த அருமை நாய் 'ஆர்தரின்' படத் திறப்புவிழாவுக்குப் போகவேண்டும். கம்ஸலாவுக்குக் கோபம் வந்தது. என்ன செய்வது என்று புரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள். மேஜையின்மேல் அன்றுதான் 'ரிப்பேர்' செய்யப்பட்டு வந்திருந்த ஹார்மோனியத்தைக் கண்டாள். ஆத்திரந்தீர அத்தனை கட்டைகளையும் ஏககாலத்தில் அழுத்தினாள். உடனே அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்ததாம் வஸந்தகாலம். எப்படி?

[தேசிங்குராஜன் மெட்டு]

நடுநடுங்கியே வந்து சேர்ந்தது வஸந்த காலம் தான்
நடை தடுமாறி ஆடிவந்தன காலொடிந்த மயில்கள்
பயந்துகொண்டே பாடத்துவங்கின குயிலினங்கள் யாவும்
மிரண்டுகொண்டே மலரத்துவங்கின மலரினங்களெல்லாம்
பாட்டை மறந்து வண்டுகளெல்லாம் பதறியுதறிக் கதற
பாவையின் கோபம் தணல்விசவே மலர்த்தேன் வற்றவும்

ஸ்ரீமதி கம்ஸலாவின் முன்கோபம் இத்தன்மையது. "ஏமாறுவதிலும் ஒரு இன்பம் உண்டு" என்று சீன ஞானி ஒருவர் கூறினார். ஆனால் ஏமாற்றத்திற்கும் ஒரு எல்லையில்லையா? இதுவரையில் ஒரு ஸினிமாப்படமாவது ஆரம்பத்திலிருந்து பார்க்க முடியவில்லை என்றால் ஸ்ரீமதி கம்ஸலாவுக்குக் கோபம் வருமா, வராதா? ஒரு நாளைப்போல் கணவன் ஆபீஸிலிருந்து ஏழு மணிக்கு வந்தால், கம்ஸலா, காலாகாலத்தில் கொட்டகைக்குப் போய் முதலிலிருந்தே படம் பார்க்க முடியுமா? கம்ஸலாவின் துயரமும், பாட்டின் அனுபல்லவியும் ஒரே சமயத்தில் எச்சுஸ்தாயியை எட்டின.

கமாஸ் : தொடர்ச்சி

பாதி ஆட்டம் நடுவில் செல்லும்
பாழும் வழக்கம் ஒழிந்திடவே இன்று (தூ)
வேகமாக ஏகிவர
மேகமொன்றையும் காணோம்
வெயில் காலம் என்ன கோலம்
வீட்டுவேலை ஆட்களெல்லாம்
ரேஷன்கடை சென்று இன்று
ரெண்டுநாளாச்சு இன்னும் காணோம் (தூ)
காரில் ஏறிச் சென்று அவரிடம்
காரிகை என் துயர் கூறிட
கூடப்பிறந்தவர் யாருமில்லை
அன்னமும் இல்லை—குளிர்ந்த
தென்றலும் இல்லை—கன்றிளம்
மானுமில்லை-வழி-தானுமில்லை அந்தோ (தூ)

தூது வேட்கை மேலிட்ட கம்ஸலா தூதர் வேட்டையில் இறங்கினாள். "யாரைத் தூது அனுப்புவது" என்ற கேள்வி அவளை அல்லும் பகலும் சமையல் அறையிலும், ஸ்நான அறையிலும், "லேடீஸ் கிளப்"பிலும் "ரேஷன் ஸ்டோரி"லும் வாட்டி வதைத்தது. இலக்கிய புராண தூது பிரபந்தங்களிலிருந்து தூதர் ஜாபிதா ஒன்று தயாரித்தாள். ஆனால்

ஒன்றும் சரியில்லை. அன்னமோ புராணங்களோடு போயிற்று. மேகமோ, வெயில் காலம், வானத்தில் ஒரு பொட்டு மேகம்கூட இல்லை. தென்றல் கண்ணுக்குத் தெரியாது. இந்தக் காலத்து மயில்களோ, பெண்கள் முன் வருவதில்லை என்று சபதம் செய்துவிட்டன. குயில்களுக்கோ, ஸினிமா மெட்டுகள் பாடிப் பழகப்போய் தொண்டை கட்டிவிட்டது. பாவம்! தூது போக ஆளில்லை. என்ன செய்வாள்! வானத்தைப் பார்த்தாள். அடுத்த வீட்டுச் சமையல் அறையின் புகைக் கூண்டிலிருந்து அசட்டுக் கறுப்பு வர்ணமான புகை சுருள் சுருளாகக் கிளம்பி, தன் கணவனின் ஆபீஸ் பக்கம் போய்க் கொண்டிருந்தது. ஆனால் நவீன யுவதி புகையைத் தூது விடுவாளா? ஆகவே தூதனுப்ப ஆளின்றி அவள் உள்ளம் தவித்தது. உள்ளத்திற்கு அனுதாபம்காட்டிய அவளுடைய தொண்டை முகாரி ராகத்தை நாக்கினிடம் அனுப்ப, ராகம் ஒரு ஸாஹித்யமாகி, உதடுகளின் உதவியால் வெளியே பாய்ந்தது:

முகாரி

என்ன பாவம் செய்தேனோ-இன்னும் ஏமாந்து
போவேனோ (என்)

ஆதிமுதலில் படம் ஆரம்பமானதையால் ஆவலு
டன் காணவழியில்லை விதியில்லை (எ)

நாழிகையாகுதென்று நறுக்கெனக் குட்டுக்
குட்டி நாதனைக் கூட்டிவர தூதுவரெவரு
மில்லை (எ)

அப்பொழுது வாசலில், ஒரு விநோதமான சப்தம் கேட்டது. கம்ஸலா திடுக்கிட்டாள். அங்கு வந்த தோழியை வினவினாள்.

க: என்ன சப்தம்?

தோ: எங்கே?

க: யாரது இப்பொழுது வீசம் ஷட்ஜம சுருதியில் வீறிட்டு அலறியது?

தோ: அதுவா? இதோ. இந்த வாயசப்ரபு தான்.

க: யார்? இந்தக் காகமா?

தோ, ஆம்.

க: ஆஹா...பேஷ்...பேஷ் சரியான தூதன்.

கம்ஸலாவின் தவிப்பைக் கண்டு அனுதாப கீதம் பாடிய காகத்தைக் கண்டதும் கமலாவின் கவலைகள் களிப்பின் அலைகளாக மாற, திண்டாட்டம் கொண்டாட்டமாக, தன் துயரம் கரையுமாறு, கரைய வந்த காகத்தைக் கம்ஸலா கனிவுடன் அழைக்கிறாள்.

ஸாரங்கா

கண்ணிறைந்த காகமே நீ கவலை தீர்ப்பாயோ
கரகரக்கும் உன் குரலினிமையில் கனிந்து
ரைப்பாயோ
போது போகுதிங்கு தூது போகவேதான்
தோது படுமோ சொல்வாய்
பாதாம்பப்பர்மிண்டும் பாதி பிஸ்கோத்துண்டும்
நீதானே வாங்கிக் கொள்வாய்.

கம்ஸலாவும் தோழிகளும் இசைத்த உபசாரப் பத்திரம் முடிவு பெற்றதும் காகத்தின் கழுத்து அசைந்தது. ஈ வந்து உட்கார்ந்ததால் ஏற்பட்ட அந்த அசைவை, காகத்தின் அங்கீகாரமாகத் தப்பர்த்தம் செய்து கொண்ட கம்ஸலா, தன் ஆயாசம் தீர்க்க வந்த வாயசம் என்று கொண்டாடுகிறாள். பாமாலை சூட்ட நினைக்கிறாள். ஆனால் அவள் தொண்டையிலும் தற்காலிகமாக ஒரு காகம் புகுந்து கொண்டதாகத் தோன்றியதால், தோழிக்குக் கட்டளையிடுகிறாள். தோழியும் கட்டளையைச் சிரமேற்கொண்டு, வாயால் நிறைவேற்றுகிறாள்.

பந்துவராளி

உனக்கிணை உலகில் உண்டோ-காகமே
உதயத்தில் கண்விழித்து
ஊரெல்லாம் சுற்றிவரும் (உன)

ஒருபிடி அன்னமிட்டால் ஓயாது கூவிக்கூவி
ஊரெல்லாம் கூட்டி வந்து ஒன்றாய் விருந்து
உண்ணும் (உன)

கன்னங் கறுத்த மேனி கார்நிறவண்ணன் மேனி
கடலெல்லாம் காணும் மேனி காரிருள் எழில்
மேனி

மழைவரு முன்னால் காணும் குளிர்ந்த கருமேகம்
போல்
விழிகள் ஒளிரச் செய்யும் குளிர்ந்த கண்
மையினைப் போல் (உன்)

காகத்தைப் புகழும் கம்ஸலா, கருமையின் தத்துவத்தில் இடறி விழுகிறாள். அவளுடைய கற்பனை, தத்துவ நிலையைத்தாண்டி நாகரிக நிலைக்கு வந்துவிடுகிறது. நவீன கவி ஒருவர் கறுப்பின் பெருமையைப்பற்றிப் பாடியது அவள் காதுகளில் ஒலிக்கின்றது.

விருத்தம்

ஓடுகின்ற கார்களிலே உயர்ந்த காரின்
வர்ணம்
காகமே உன் கறுப்பு

போடுகின்ற சாலைகளில் பூசுகின்ற தாரின்
வர்ணம்
காகமே உன் கறுப்பு

நாடுகின்ற கண்களிலே மயக்குகின்ற மையின்
வர்ணம்
காகமே உன் கறுப்பு
கூடிவரும் வேளையென்று கொண்டாடும்
இருட்டின் வர்ணம்
காகமே உன் கறுப்பு
காலையிலே காப்பி போட மூட்டும் அடுப்புக்
கரியும்
காகமே உன் கறுப்பு
மாலையிலே சோலைகளில் மயக்கி நிற்கும்
மைவிழிகள்
காகமே உன் கறுப்பு

காகத்தின் மேனியை வர்ணித்த இந்தப் பாடல், கம்ஸலாவின் சிந்தனையைத் தூண்டுகிறது. காகத்தைத் தன்னுலான கற்பனையையெல்லாம் பிரயோகித்துப் புகழ வேண்டும் என்ற கம்ஸலாவின் அறிவில், ஞானேதயமாகிறது. தற்காலத்தில் மிகவும் பிரபலமான, அந்த மகோன்னத வாயச சித்தாந்தம் கம்ஸலாவின் அறிவில் உதயமாகிறது. இந்தத் தத்துவம் மகத்தானது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அது கொடி கட்டி ஆளுகிறது. இது சகல சமய சஞ்சீவி தத்துவம், செல்வர்கள்—வறியர்கள், அதிகாரிகள்—குமாஸ்தாக்கள், பெரியவர்கள்—சிறியவர்கள், முதலாளிகள்—தொழிலாளிகள் இவர்களிடையே சிநேகபாவமும், நல்ல உறவும் நீடித்திருக்க, கைகண்ட ஔஷதமாய் விளங்கும் அந்தக் கொள்கை காகத்திலிருந்துதான் தோன்றியது. அது என்ன? கம்ஸலா அதை வர்ணித்து, காகத்திற்கு உச்சி குளிர்ந்து போகும்படி செய்கிருள்.

ஸிம்மேந்த்ர மத்யமம்

காக்கை பிடிக்க வேண்டும்—ஒரு
பாக்கைக் கடிப்பதற்கும்
பல்லின் தயவு வேண்டும் (கா)
பார்க்கிறபோதெல்லாம் பணிந்து
கும்பிட வேணும்
பாகு சர்க்கரை போலப் பதமாகப்
பேசிப் பேசி (கா)
கற்ற வித்தைகள் உண்டு கற்பனை வேணதுண்டு
கையில் சாக்கும் உண்டு கல்லூரிப்பட்டம்
உண்டு
யோக்கியதாம்சங்கள் எத்தனை இருந்தாலும்
காக்கை பிடிக்காவிட்டால் பாக்கியம்
இல்லை இல்லை (கா)

"காக்கை பிடித்தல்"என்ற அந்தச் சஞ்சிவி மந்திரம், வாழ்வின் மலர்ப்பாதை; வெற்றியின் வீராயுதம்; அற்புத ஔஷதம். இந்த ஔஷதத்தை உலகினுக்கு அளித்த அசுவினி தேவதை போன்ற அந்தக் காகத்தையே காக்கை பிடித்தாள் கம்ஸலா. சிறு வயதில், பாட்டி தனக்குத் தயிர் சாதம் ஊட்டிக் கொண்டே, "காக்கா, ஓஷ், ஓஷ்" என்று விளையாட்டுக் காட்டியது கம்ஸலாவிற்கு நினைவு வந்தது. உடனே தோழிகளின் உதவியுடன் காகத்தைத் தூதுவிடலானுள்.

[கோட்]

கம்ஸலா:

காகமே என் சோகமே
வேகமே நீ சொல்லி வா
ஆசையாய் அவரிடம்
ஆபீஸில் நீ சொல்லி வா

எல்லோரும்:

ஓஷ்.........ஓஷ்.........ஓஷ்

கம்ஸலா:

உள்ளம் உருக்கும் குரலிலே
மெள்ள மெள்ளச் சொல்லி வா
ஸினிமா துவங்கும் வேளைதன்னை
இனிமையாகச் சொல்லிவா

எல்லோரும்:

ஓஷ்.........ஓஷ்.........ஓஷ்

கம்ஸலா:

ஒரு மணி நேரம் முன்பாக
ஓடவேணும் சொல்லி வா
"க்யூ"வில் நின்று டிக்கட்டுகள்
கொள்ள வேணும் சொல்லி வா

எல்லோரும்:

ஓஷ்.........ஓஷ்.........ஓஷ்

"ஓஷ்......ஓஷ்......ஓஷ்" என்று காகத்தை ஓட்டிவிட்ட கம்ஸலா, அது திரும்பி வந்து சேதி சொல்லும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிருள். பாவம்! கம்ஸலா!......பிடித்தது தான் பிடித்தாள்.............. காகத்தையே காக்கை பிடிக்க வேண்டுமா?

198046
சென்னை-600 008.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

பூச்சிகளைக்கொல்லுவதற்கு ஓர் நவீனமுறை

இரண்டையும் உபயோகியுங்கள்

பறக்கும் பூச்சிகளைக் கொல்ல ஸ்ப்ரேயை உபயோகியுங்கள்



பவுடர் ஊரும் பூச்சிகளைக்கொல்லுகிறது



நியோஸிட்

5 சதவிகிதம் டீ. டீ. டி ஸ்ப்ரேயும் 10 சதவிகிதம் டீ. டீ. டி பவுடரும்

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிமிடெட்,

நெவில்ஹவுஸ், நிகல் ரோடு, பலார்டு எஸ்டேட், பம்பாய்.1.

DDT Geigy DDT

GIY-3

Regd No. M. 4405

டி. எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

T. S. R. & Co.
கும்பகோணம்.

The Cauveri Colour Press, Kumbakonam.